# தமிழரசு

செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு

செப்டம்பர் 2010

விலை ரூ.10/-








மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள்,
தந்தை பெரியார் அவர்களின் 132ஆவது பிறந்தநாளையொட்டி,
சென்னை, அண்ணா சாலையில் அமைந்துள்ள தந்தை பெரியார் அவர்களின் சிலைக்கு அருகே
வைக்கப்பட்டிருந்த பெரியாரின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.
உடன் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். (17–9–2010)



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள்,
பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாளையொட்டி,
சென்னை, வள்ளுவர் கோட்டத்தில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் சிலைக்கு அருகே
வைக்கப்பட்டிருந்த அண்ணாவின் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.
உடன் மாண்புமிகு நிதி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன்,
மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் மற்றும்
மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் உள்ளனர். (15–9–2010)

# தமிழரசு

செய்தி-மக்கள்தொடர்புத் துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2041
ஆவணி- புரட்டாசி
செப்டம்பர் 2010
மலர் : 42 இதழ் : 3

**ஆசிரியர் குழு**

ஆசிரியர் மற்றும் வெளியிடுபவர் :

திரு. **கா. பாஸ்கரன்,** இ.ஆ.ப.,
இயக்குநர் மற்றும்
அலுவலால் அரசு துணைச் செயலாளர்
செய்தி-மக்கள் தொடர்புத்துறை

நிருவாக ஆசிரியர்

**துரை ராஜ்குமார்**
துணை இயக்குநர் (வெளியீடுகள்) (பொ)

முதன்மைப் பொறுப்பாசிரியர்

**க. குமாரவேலு**
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்களான
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

**ச. ஜெயலலிதா**
**இரா. சேகர்**
**பொ.க. பாண்டியன்**

உதவி ஆசிரியர்கள்

**த. கலைச்செல்வன்**
**வ.பாலசுப்பிரமணியன்**

நிருபர்கள்

**கோ. சண்முகம்**
**மாய குமரேசன்**

இதழ் உதவியாளர்கள்

**தி.பெரியார் சாக்ரடீசு**
**ஜெ. ஜெயசிம்ஹன்**

கணினி வடிவமைப்பு

**அ. மதன்,** உதவி ஒளியச்சுக்கோர்வையாளர்
**ஆர். பாலாஜி**
(ஒப்பந்த தொகுப்பூதிய கணினி இயக்குபவர்)

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
110,அண்ணாசாலை,
சென்னை-600 002.
தொலைபேசி : 28520407/
28520408
நிகரி : 28520407
மின் அஞ்சல் : tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tn.gov.in



**இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்**
**துன்பம் துடைத்தூன்றும் தூண்.**

தன்னலம் விரும்பாமல், தான் மேற்கொண்ட செயலை நிறைவேற்ற விரும்புகின்றவன் தன்னைச் சூழ்ந்துள்ள சுற்றத்தார், நண்பர்கள், நாட்டு மக்கள் ஆகிய அனைவரின் துன்பம் துடைத்து, அவர்களைத் தாங்குகிற தூணாவான்.

**கலைஞர்** திருக்குறள் உரையிலிருந்து...

## இந்த இதழில்...

✶ அண்ணா நூற்றாண்டு நூலகத்தை மாணவர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்
– மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்களின் உரை ... 2

✶ உலகத் தரத்துடன் கூடிய அண்ணா நூற்றாண்டு நூலகம் .... 8

✶ தஞ்சைப் பெரிய கோயிலும் இராஜராஜனும்
– ஒரு வரலாற்றுப் பார்வை .... 11

✶ இராஜராஜன் வெற்றிகள் .... 22

✶ மக்களுக்கும் அதிகாரிகளுக்குமுள்ள தொடர்பு தூய்மையானதாக பொதுநலநோக்கோடு இருக்க வேண்டும்
– மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்களின் உரை .... 30

✶ பெரியாரின் பொன்மொழிகள் .... 35

✶ அண்ணாவின் பொன்மொழிகள் .... 37

✶ தமிழகத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சி – தகவல் தொழில்நுட்பத் துறையால் மேம்பட்டுள்ளது
– மாண்புமிகு துணை முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின் உரை .... 40

✶ 'ஆன்லைன்' மூலமாக வேலைவாய்ப்புப் பதிவு வசதி அறிமுகம்.... 43

✶ ஏழைகளுக்கு இலவசமாக பன்றிக்காய்ச்சல் தடுப்பு ஊசி .... 47

✶ உலகத் தரத்திற்கேற்ற விளையாட்டு மைதானங்களின் உறைவிடமாக சென்னை மாநகரம்
– மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்களின் உரை .... 55



இருக்க வேண்டுமென்று எண்ணம் வருவதே இல்லை. அவசியமும் தோன்றுவதில்லை.

இந்தச் செப்புக் குடம் சீரங்கத்தில் வாங்கியது. தேவர் கல்யாணத்தின் போது திருப்பதியில் வாங்கினோம். இந்தத் தாம்பாளத்தைப் பெல்லாரிக்குச் சென்றோமே பெண் பார்க்க, அப்போது வாங்கினோம். இந்த இரத்தின ஜமுக்காளத்தைக் கார்த்திகை தீபத்தின்போது திருவண்ணாமலையில் வாங்கினோம். சிதம்பரத்திலே ஆருத்திரா தரிசனத்தின்போது, இதை வாங்கினோம் என்று நமது வீடுகளில் பல சாமான்களைக் காட்டுவர். சாமான் ஒவ்வொன்றுக்கும் ஒரு சரித்திரமே கூறுவார்கள். ஆனால், பத்து நல்ல புத்தகங்களைக் காட்டி இன்ன சந்தர்ப்பத்தில் இவைகளை வாங்கினோம் என்று யாரும் கூறமாட்டார்கள்.

வீட்டின் அலங்காரத்தையும், விசேஷகால உபயோகத்திற்கான சாதனங்களையும் கவனிப்பது போல வீட்டிற்கோர் புத்தகச்சாலை, சிறிய அளவிலாவது அமைக்க நிச்சயமாக கவனம் செலுத்த வேண்டும்; அக்கறை காட்ட வேண்டும். அறிவு ஆயுதமாகிவிட்ட நாட்களிலே வாழும் நாம் இனியும் இந்தக் காரியத்தைக் கவனியாதிருப்பது நாட்டுக்கு மறைமுகமாகச் செய்யும் துரோகச் செயலாகும்.

வீட்டிற்கோர் புத்தகச்சாலை நிச்சயமாக வேண்டும். வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகளுக்கு அடுத்த இடம் அலங்காரப் பொருள்களுக்கும், போகபோக்கியப் பொருள்களுக்கும் தரப்படும் நிலைமாறி, புத்தகச் சாலைக்கும் அந்த இடம் தரப்படவேண்டும். உணவு, உடை, அடிப்படைத் தேவை – அந்தத் தேவையைப் பூர்த்தி செய்தானதும், ஒவ்வொரு வீட்டிலும் முதல் இடம் புத்தகச் சாலைக்குத் தரப்பட வேண்டும்''.

– எனப் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒவ்வொரு வீட்டிலும் நூலகம் அமைய வேண்டும் என்று வானொலி உரையில் வலியுறுத்தியுள்ளார்.

**அண்ணாவும் புத்தகமும்**

தமிழ்நாட்டிலே கூட உணவு உடை போன்ற அடிப்படைத் தேவைகளையெல்லாம் பூர்த்தி செய்து வருகின்ற ஒரு அரசுதான் ஒவ்வொரு வீட்டிலும் புத்தகச் சாலை வேண்டும் என்று அண்ணா சொன்னாரே, அதைப் போல ஒவ்வொரு நகரத்திலும், ஒவ்வொரு மாவட்ட தலைநகரங்களிலும் ஒரு புத்தகச்சாலை வேண்டும் என்ற அந்தக் கொள்கையின் அடிப்படையில் இன்றைக்கு இந்த நூலகம் அமைக்கப்பட்டிருக்கின்றது என்பதை இது அண்ணாவின் கனவு நிறைவேறியுள்ள காட்சி என்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.



**"வீட்டிற்கோர் புத்தகச்சாலை நிச்சயமாக வேண்டும். வாழ்க்கையில் அடிப்படைத் தேவைகளுக்கு அடுத்த இடம் அலங்காரப் பொருள்களுக்கும், போகபோக்கியப் பொருள்களுக்கும் தரப்படும் நிலைமாறி, புத்தகச் சாலைக்கும் அந்த இடம் தரப்படவேண்டும். உணவு, உடை, அடிப்படைத் தேவை – அந்தத் தேவையைப் பூர்த்தி செய்தானதும், ஒவ்வொரு வீட்டிலும் முதல் இடம் புத்தகச் சாலைக்குத் தரப்பட வேண்டும்."**

1948இல் அண்ணா அப்படி பேசினார். அந்தக் காலகட்டத்திலே தான் பேராசிரியர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும் – திருவாரூரில் மாணவர் அமைப்பு ஒன்றை நிறுவி, ''தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றம்'' என்று அதற்குப் பெயரிட்டு அதை நாங்கள் இயக்கிக் கொண்டிருந்த போது அந்த மன்றத்தின் சார்பாக பாரதிதாசன் வாசக சாலை, பெரியார் படிப்பகம், அண்ணா நூலகம் என்றெல்லாம் பெயரிட்டு பொழுதுபோக்குக்காக அல்ல, கருத்துகளை மக்களுக்கு எடுத்துப் பரப்புகின்ற அந்தப் பணிக்காக வீதி தோறும் ஊர்தோறும் அந்தக் காரியங்களை நாங்கள் நடத்தி வந்தோம். அப்படிப்பட்ட அந்த அடிப்படை உணர்வும், முயற்சிகளும் வேரோடு, உயிரோடு கலந்திருந்த காரணத்தினால் தான் இன்றைய தினம் இவ்வளவு பெரிய வெற்றியை இங்கே அண்ணா பெயரால் ஒரு நூலகத்தை உருவாக்க எங்களால் பெற முடிந்தது என்பதை மிகுந்த பொறுப்புணர்வோடு நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அண்ணாவினுடைய இறுதிவரை – அண்ணாவிற்கு பெருமை சேர்த்து விட்டு – அவருடைய சிலையைப் பார்க்கும்போதும் – அவருடைய பெயரால் அமைந்துள்ள இந்த நூலகக் கட்டடத்தின் உயரத்தை அண்ணாந்து பார்க்கும்போது நெஞ்சில் எழுகின்ற அந்தத் துன்ப

அலைகள் விழி வழியாக வழிகின்ற அந்த நிலையைத் தடுக்க முடியவில்லை. மன்னிக்க வேண்டும். இடையிடையே அதன் காரணமாக என்னுடைய பேச்சின் கோர்வை அறுந்து விடுமேயானால் மன்னிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு தொடருகிறேன்.

அண்ணா அவர்கள் எதை நினைத்தாரோ இல்லையோ இறுதி நாள் வரையில் புத்தகத்தையே நினைத்துக் கொண்டிருந்தார். அவருடைய முடிவு மருத்துவர்களால் கணிக்கப்பட்டு, அமெரிக்கா சென்று திரும்பிய பிறகு, அடையாறு மருத்துவமனையிலே கடைசியாக செய்ய வேண்டிய அறுவை சிகிச்சைக்காக அவருடைய அறையிலிருந்து அவர் அழைக்கப்பட்ட போது கூட, துழாவி, துழாவி தலையணைக்கு கீழேயிருந்த புத்தகத்தை எடுத்துக் கொண்டுதான் சென்றார். அறுவை



சிகிச்சை முடிந்து இரண்டொரு நாள் அவர் ஓய்வெடுக்க வேண்டுமென்று மருத்துவர்கள் வலியுறுத்திய நேரத்தில்கூட படித்துக் கொண்டுதான் இருந்தார். ஒருவேளை நம்ப வேண்டுமேயானால் – காலன் என்று ஒருவன் இருந்து – அவன் அண்ணாவின் உயிரையெடுக்க வந்தால் – அந்தக் கற்பனையைச் செய்து பார்த்தால் "காலனே, இரு வருகிறேன், இன்னும் இந்தப் புத்தகத்தில் இத்தனை பக்கங்கள் பாக்கியிருக்கின்றன" என்று சொல்லிவிட்டு ஒருவேளை அவனோடு சென்றிருப்பாரோ என்று எண்ணுகின்ற அளவிற்கு புத்தகத்திலே இறுதி நாள் வரையிலே ஆழ்ந்திருந்தவர் அண்ணா. அவர் படிக்காத நேரம் இல்லை. இரவு 12 மணிக்கு காஞ்சிபுரம் சென்று கதவைத் தட்டினால், அண்ணா எங்கேயென்று கேட்டால், உள்ளேயிருக்கிறார் என்று சொன்னால், புத்தகமும் கையுமாகத்தான் அண்ணா படுக்கையிலே இருப்பார். அப்படி புத்தகமும் கையுமாக இருந்த அண்ணாவை சிலை வடிவில், புத்தகமும் கையுமாக சிலை வடிவிலே இங்கே உருவாக்கி வைத்திருக்கிறோம்.

அந்த அண்ணாவின் நினைவாக நாம் உருவாக்கியிருக்கின்ற இந்த எழில் மாளிகை தம்பி தென்னரசு அவர்களின் உழைப்பால், முயற்சியால் இங்கே உருவாக்கப்பட்டுள்ளது. யாரிடத்திலே எந்தக் காரியத்தை ஒப்படைக்க வேண்டுமென்று சிந்தித்து ஒப்படைக்கும்போது, அப்படி என்னைப் பொறுத்தவரையில், எங்கள் மாவட்டக் கழகச் செயலாளர்களில் இது போன்ற காரியங்களை விரைந்து, வியந்து போற்றும் வண்ணம் படைப்பவர்களில் ஒருவராகத் திகழ்ந்தவர் தம்பி தென்னரசின் தந்தை தங்கபாண்டியன் ஆவார். அந்தத் தங்கபாண்டியன் பெற்ற செல்வம், தந்தைக்கு நிகராக எங்கள்பால் அன்பு செலுத்தியது மாத்திரமல்ல, நாங்கள் ஆற்றுகின்ற பணிக்கு உதவியாகவும் இருந்து நான் கடிந்தால் வருந்தாமல், நான் வாழ்த்தினால் அதை ஊக்கமாகப் பெற்று இன்றைக்கு இந்தப் பெரும் பணியை ஆற்றி முடித்திருக்கிறார்.

என் சார்பாகவும், நம்முடைய பேராசிரியர் சார்பாகவும், நாளை முதல் நம் நூலகத்திற்கு வந்து நூல்களை வாங்கிச் செல்வோர், படிப்போர் அத்தனை பேர் சார்பாக அவருக்கு வாழ்த்துகளைக் கூறிக் கொள்கிறேன்.

திராவிட முன்னேற்றக் கழகத்தில் இவர் தென்னரசு "செகண்ட்". தென்னரசு என்று ஒருவர் இருந்தார். அவர் மறைந்து விட்டாரே என்ற கவலை எனக்குண்டு. அந்தக்



கவலையைப் போக்குகின்ற அளவிற்கு இந்தத் தென்னரசு காரியமாற்றியிருக்கிறார். அது தான் இந்த அண்ணா நூலகம் என்பதை நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

இந்த அண்ணா நூலகத்தினுடைய திறப்பு விழாவில் இரண்டொரு அறிவிப்புகளை அண்ணாவின் நினைவாக வெளியிட விரும்புகிறேன்.

**அறிவிப்பு 1** – அண்ணா நூற்றாண்டு நூலகத்தைத் திறந்து வைக்கின்ற இந்த நேரத்தில் இதனை மாணவர்கள் பெரிதும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மாணவர்களைப் பற்றி நினைக்கும்போது அவர்கள் சம்பந்தப்பட்ட ஒரு அறிவிப்பினை இங்கே அளிக்க விரும்புகிறேன்.

**சத்துணவில் 5 முட்டைகள்**

மாணவர்களுக்கு சத்துணவு அளிக்கும் திட்டம் கடந்த காலத்தில் எம்.ஜி.ஆர். ஆட்சியால் தொடங்கப்பட்டு, அதனை வரவேற்று அது மேலும் சத்துள்ள உணவாக இருக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு – நமது திராவிட முன்னேற்றக் கழகம் மூன்றாவது முறையாக ஆட்சி பொறுப்பேற்ற பிறகு – 3.6.1989 முதல், 2 வயதிலேயிருந்து 15 வயது வரை உள்ள குழந்தைகள், மற்றும் மாணவர்களுக்கு வாரத்திற்கு ஒரு முட்டையென வழங்கப்பட்டு வந்தது.

கழகம் ஐந்தாவது முறையாக 2006ஆம் ஆண்டு பதவிப் பொறுப்புக்கு வந்த பிறகு – ஜூலை 15ஆம் நாள் முதல் அதாவது காமராஜர் பிறந்தநாளையொட்டி அவர் நினைவாக வாரம் ஒன்றுக்கு இரண்டு வேகவைத்த முட்டைகள் வழங்கப்பட்டன.

15.7.2007 முதல் வாரம் இரண்டு முட்டைகள் என்பது; வாரம் மூன்று முட்டைகள் என்ற அளவிற்கு வழங்கப்பட்டு வருவதோடு, முட்டை சாப்பிடாத குழந்தைகளுக்கு வாழைப்பழம் அதற்குப் பதிலாக வழங்கப்பட்டு வருகிறது.

பேரறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு நினைவாக இந்த பிரமாண்டமான நூலகத்தைத் திறந்து வைக்கும் இந்த நேரத்தில் – பள்ளியில் பயிலும் ஒவ்வொரு சிறுவர், சிறுமியர்க்கும் – வாரத்தில் பள்ளிக்கூடம் நடைபெறும் ஐந்து நாட்களிலும் – வேக வைத்த முட்டைகள் வழங்கப்படும் என்று மகிழ்ச்சியோடு அறிவிக்கின்றேன். இது முதல் அறிவிப்பு.

**இரண்டாவது அறிவிப்பு** – அரசு அலுவலகங்கள், அரசு சார்புடைய நிறுவனங்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளில் தினக் கூலி அடிப்படையில் அல்லது தொகுப்பூதியத்தில் பணிபுரியும் துப்புரவுத் தொழிலாளர்கள் தற்போது தற்காலிகமாக பணிபுரிந்து சுமார் ஆயிரம் ரூபாய் முதல் ஆயிரத்து ஐநூறு ரூபாய் வரை மாத ஊதியமாகப் பெற்று வருகிறார்கள்.

காலம்காலமாக அடித்தளத்தில் இருந்து பணிபுரிகின்ற இந்தத் துப்புரவுப் பணியாளர்களின் வாழ்வாதாரம் மேலும் வலிவுடன் அமைய வேண்டும் என்ற

நல்ல நோக்கத்தோடு – அந்தத் துப்புரவுத் தொழிலாளர்களில் மூன்று ஆண்டுகள் பணி முடித்தவர்களுக்கு – இனி, மாதம் ரூ.1300–3000 என்ற ஊதிய விகிதத்தில், அகவிலைப்படியுடன் சேர்த்து மாதம் ஒன்றுக்கு தொடக்க நிலையில் ரூ.2,320 கிடைத்திடும் வகையில் ஊதியமாக உயர்த்தி வழங்கப்படும். இத்துடன் அவ்வப்போது வழங்கப்படும் அகவிலைப்படி உயர்வினையும், ஆண்டுதோறும் மூன்று சதவிகிதம் கூடுதல் ஊதியப்படியினைப் பெறும் தகுதியையும் இந்தத் துப்புரவுத் தொழிலாளர்கள் பெறுவார்கள் என்பதை அடித்தட்டு மக்களுக்காகவே தன் வாழ்நாள் முழுவதும் எழுதி – பேசி – உழைத்த பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான இன்று அறிவிப்பதில் மெத்தவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்த அறிவிப்புகள் உடனடியாக செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்து இந்த நூலகத்திற்கு வருவோர், போவோர், நூல்களை எடுத்துச் செல்வோர் – இவர்கள் எல்லாம் இந்த நூலகத்தின் தூய்மை கருதியும், இதனுடைய பெருமைகளைக் கருதியும் இதைப்பற்றி இங்கே பேசிய நம்முடைய பேராசிரியர் அவர்களும் மற்றவர்களும் கருதுகின்ற வகையில் இதை நம்முடைய நூலகமாகக் கருதிக் காப்பாற்ற வேண்டும், பாதுகாக்க வேண்டும் என்று அனைவரையும் கேட்டுக் கொண்டு,

இந்த நூலகத்திற்கு தொலைவிலிருந்து வருகின்றவர்கள், பேருந்துகளிலே வருகின்றவர்களுக்குக் கூட – இந்த நூலகத்திற்கு என்று குறிப்பிட்ட பேருந்துகளிலே வந்தால் அந்தக் கட்டணத்தைக் கூட ஓரளவு குறைத்து அதை அமல்படுத்தலாமா என்ற கருத்தும் இருக்கிறது. எனவே எல்லா வகையிலும் அண்ணா பெயரால் அமைந்துள்ள இந்த நூலகத்தினுடைய திறப்பு விழாவிலே இந்த அறிவிப்புகள் பொருந்தும் என்று கருதி உங்களுடைய அன்பான ஆதரவுக்கும், உங்களுடைய இனிய வருகைக்கும் என்னுடைய வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்து விடைபெற்றுக் கொள்கிறேன்.

★ ★ ★

## இராஜராஜனின் பெரு வெற்றிகள்

தன் தூதனைச் சிறையிலிட்ட சேரமன்னன் பாஸ்கர ரவிவர்மனைத் திருவனந்தபுரத்திற்கு அருகிலுள்ள காந்தளூர் எனும் இடத்தில் வெற்றி கண்டதோடு அவனது கடற்படையைக் கைப்பற்றியதும் இவனது குறிப்பிடத்தக்க வெற்றியாகும். இவ்வெற்றியைக் குறிப்பிடும் வண்ணம் "கேரளாந்தகன்" (கேரள மன்னனுக்கு இயமன் போன்றவன்) என்ற சிறப்புப் பட்டம் சூடி மகிழ்ந்தான்.

வேங்கிநாடு எனும் கீழைச் சாளுக்கியர்களின் நாடு (ஆந்திர மாநிலம்) இராஷ்டிரகூடர்களின் கங்கபாடி எனும் மைசூர் பகுதி, நுளம்பர்கள் ஆட்சி செய்த நுளம்பபாடி எனும் பெங்களூர், பெல்லாரி பகுதிகள், குடகுநாடு, சேரநாட்டுக் கொல்லம், ஒரிஸ்ஸா மாநிலத்துக் கலிங்கம், இலங்கைத் தீவான ஈழமண்டலம், மேலைச் சாளுக்கியர்களின் இரட்டபாடி எனும் வடகர்நாடகம், மகாராட்டிரம் போன்ற மாநிலங்கள், அரபிக் கடலிலுள்ள இலட்சத்தீவு, மாலத்தீவு போன்ற தீவுகள், பாண்டியநாடு ஆகியவை அனைத்தும் இப்பெருமன்னனால் வெற்றி கொள்ளப்பெற்றன.




# உலகத் தரத்துடன் கூடிய அண்ணா நூற்றாண்டு நூலகம்

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் திருக்கரங்களால் 15.09.2010 அன்று திறந்து வைக்கப்பட்டுள்ள அண்ணா நூற்றாண்டு நூலகம் அனைத்து தரப்பினர்க்கும் பயன்படும் வகையில் அரிய வகை ஓலைச் சுவடிகளுடன் 12 இலட்சம் புத்தகங்கள் கொண்டதாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சென்னை, கோட்டூர்புரத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்த நூலகம் தெற்காசியாவிலேயே சிறந்த நூலகமாகத் திகழுகிறது. இந்நூலகம் யுனெஸ்கோ உலக டிஜிட்டல் நூலகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மிகப் பழமையான ஓலைச்சுவடிகள் முதல் டிஜிட்டல் வடிவிலான புத்தகங்கள் வரை கொண்டதாக இந்நூலகம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

அண்ணா நூற்றாண்டு விழாவையொட்டி, சென்னை கோட்டூர்புரத்தில் நவீன நூலகம் அமைக்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்தது. இதையடுத்து, அண்ணா நூற்றாண்டு நூலகம் அமைக்கும் பணிகள் கடந்த ஆண்டு தொடங்கின.

இந்த நூலகம் தொடங்கப்படுவதற்கு முன்பே உலக டிஜிட்டல் நூலகத்துடன் இணைப்புப் பெற்றுள்ளது. இதன் மூலம், உலகத்தில் உள்ள புகழ் பெற்ற பல நூலகங்களில் உள்ள தகவல்களை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் பெற முடியும்.

இந்த நூலகத்தில் இடம்பெற உள்ள பழமையான ஓலைச்சுவடிகள், அரிய நூல்கள், கையெழுத்துப் பிரதிகள், வரைபடங்கள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு திறக்கப்படுவதற்கு முன்பே யுனெஸ்கோவின் உலக டிஜிட்டல் நூலகத்தின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

யுனெஸ்கோ அமைப்பின் உறுப்பு நாடுகளில் கலாச்சாரமும் பாரம்பரியமும் மிக்க புத்தகங்கள், தகவல்கள், புகைப்படங்கள், ஓவியங்கள் உள்ளிட்டவற்றை டிஜிட்டல் வடிவில் தொகுப்பதற்காக உலக டிஜிட்டல் நூலகம் (வேர்ல்ட் டிஜிட்டல் லைப்ரரி) 2009ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தொடங்கப்பட்டது.



சர்வதேச கலாச்சாரங்களிடையே புரிந்துணர்வை ஏற்படுத்துதல் உள்ளிட்ட நோக்கங்களுக்காக இந்த உலக டிஜிட்டல் நூலகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பலதரப்பட்ட கலாச்சாரங்கள் குறித்த தகவல்கள் இணையதளத்தில் அளிப்பதோடு, கல்வியாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், பொதுமக்கள் ஆகியோருக்கு இலவசமாக தகவல் வழங்குவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

பல நாடுகளின் தேசிய நூலகங்கள், ஆவணக் காப்பகங்கள், பாரம்பரிய நிறுவனங்கள் என 90க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் இதில் பங்குதாரர்களாக உள்ளன. இந்தியாவில் இருந்து காஷ்மீரில் உள்ள அல்லாமா இக்பால் நூலகம் மட்டுமே இதில் இணைந்துள்ளது. இரண்டாவதாக, அண்ணா நூற்றாண்டு நூலகம் இதில் இணைக்கப்பட்டுள்ளது.

அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் வைக்கப்பட்டுள்ள 70 ஆயிரம் ஓலைச் சுவடிகள், அரிய புத்தகங்கள் ஆகியவை டிஜிட்டல் மயமாக்கும் வகையில் படம் பிடிக்கப்பட உள்ளன.

இந்த அண்ணா நூலகத்தில், துவக்கத்தில் 4 இலட்சம் புத்தகங்கள் வைக்கப்பட்டு, படிப்படியாக மூன்று ஆண்டுகளில் 12 இலட்சம் புத்தகங்கள் வரை வாசகர்களின் பயன்பாட்டிற்கு வைக்கப்படும்.

இந்த நூலகத்தில், பல்வேறு சிறப்பம்சங்கள் உள்ளன. ஆய்வாளர்களுக்கு இந்த நூலகம் கிடைத்தற்கரிய பேராக இருக்கும் என்று கூறும் வகையில் பல்வேறு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள், அறிஞர்கள், கல்வியாளர்கள், மாற்றுத் திறனாளிகள், சிறார்கள், முதியோர், பொதுமக்கள் என சமூகத்தின் அனைத்துத் தரப்பினரும் பயன்படுத்தக் கூடிய வகையில் அண்ணா நூற்றாண்டு நூலகம் உருவாக்கப் பட்டுள்ளது.

தரைத்தளம் உள்பட 9 தளங்களில் மொத்தம் 3.8 இலட்சம் சதுர அடி பரப்பளவில் இந்த நூலகம் அமைக்கப் பட்டுள்ளது.

கீழ்த்திசை நூலகத்தில் அரிய ஓலைச்சுவடிகள் முதல் ஆன்லைன் புத்தகங்கள் (இ – புக்ஸ்), பத்திரிகைகள் வரை இதில் இடம் பெறுகின்றன. மாற்றுத் திறனாளிகள் (பார்வைத் திறன் இல்லாதவர்கள்), சிறுவர்களுக்கான பிரிவுகள் தனிக்கவனத்துடன் உருவாக்கப் பட்டுள்ளன.

இதோடு, 1,200 பேர் அமரும் வகையிலான நவீன வசதிகள் கொண்ட அரங்கமும், 800 பேர் அமரும் வகையில் திறந்தவெளி அரங்கமும் இதில் உருவாக்கப்பட்டுள்ளன. இலக்கிய நிகழ்ச்சிகள், நாடகங்கள் உள்பட நிகழ்ச்சிகளை இவற்றில் நடத்தலாம். அதோடு புத்தக வெளியீடு உள்ளிட்ட நிகழ்ச்சிகளையும் நடத்தலாம். இதுதவிர, 150 பேர் அமரும் வகையில் மாநாட்டு அரங்கமும் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த நூலகத்தில் வெளியிலிருந்து புத்தகங்களைக் கொண்டு வந்து படிக்கவும் வசதிகள் உள்ளன. ஏழை மாணவர்கள், நடுத்தர மாணவர்களுக்கு வீட்டில் படிப்பதற்கு போதிய வசதிகளோ, சூழலோ இருக்காது. அதுபோன்ற மாணவர்கள் இந்த நூலகத்துக்கு தங்களது புத்தகங்களைக் கொண்டு வந்து படிக்கலாம்.

500க்கும் மேற்பட்ட கணினிகள் இதில் உள்ளன. அதில் 300க்கும் மேற்பட்ட கணினிகளை வாசகர்கள் பயன்படுத்திக் கொள்ள அனுமதிக்கப்படுவர். அதிவேக இன்டர்நெட் வசதிகளும் இவற்றில் உள்ளன.

பட்டுள்ளன. அந்தப் பிரிவில் உள்ள புத்தக அலமாரிகள் மரத்தினால் செய்யப்பட்டுள்ளன. சிறுவர்கள் தங்களது திறமைகளை வெளிப்படுத்தும் வகையில் சிறிய மேடையும், அவர்கள் விளையாடுவதற்காக பூங்காவும் அமைக்கப்பட்டுள்ளது. சுவர்களில் சிறார்களைக் கவரும் வகையில் கார்ட்டுன் ஓவியங்களும் இடம்பெற உள்ளன.

பார்வைத்திறன் இழந்த மாற்றுத் திறனாளிகளுக்காக பிரெய்லி பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. இதில் ஆடியோ புத்தகங்கள், பேசும் புத்தகங்கள் ஆகியவை இடம் பெறும். நூலகத்தின் ஒவ்வொரு தளத்திலும் மாற்றுத்



ஒரே நேரத்தில் 5 ஆயிரம் பேர் அமர்ந்து படிக்க வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், முதல்முறையாக சிறுவர்களுக்கு என்று சிறப்புப் பிரிவும் இந்நூலகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஏறத்தாழ 200 பணியாளர்கள் இதில் பணியாற்றுவர். அவர்களில் 105 நூலகர்கள் – வாசகர்களுக்கு உதவியாக இருப்பர். ஆய்வாளர்கள் தங்கி ஆய்வு மேற்கொள்ள தனியாக தங்குமிடங்களும் கட்டப்பட்டுள்ளன.

400 மகிழுந்துகளும், 1,000 இரு சக்கர வாகனங்களும் நிறுத்தும் அளவுக்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

கம்ப்யூட்டர் விளையாட்டுகளும், ஆன்லைன் மூலம் பாடங்களைக் கற்றுக்கொள்ளும் வசதிகளும் ஏற்படுத்தப்

திறனாளிகளுக்கென கழிப்பறை வசதி, சாய்வுத்தளம் மற்றும் மின்தூக்கி உள்ளிட்ட பல்வேறு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மாநில பாடநூல் கழகம் சார்பில் பாடப் புத்தகங்கள் பிரிவு அமைக்கப்படுகிறது. இதில் எல்லா மாநிலப் புத்தகங்களும், வெளிநாட்டுப் புத்தகங்களும் இடம் பெற்றுள்ளன. ஒன்றாம் வகுப்பு மாணவர் முதல் ஆராய்ச்சி மாணவர்கள் வரை இந்த நூலகத்தைப் பயன்படுத்திக்கொள்ளும் அளவுக்கு பாடநூல்கள் வைக்கப்படும். இந்த வகையில் சிறுவர் முதல் முதியோர் வரை, மாணவர் முதல் ஆய்வாளர் வரை எல்லா வயதினரும் பயன்பெறும் முழுமையான நூலகமாக அண்ணா நூற்றாண்டு நூலகம் திகழ்கிறது.

★




# தஞ்சைப் பெரிய கோயிலும் இராஜராஜனும்

## - ஒரு வரலாற்றுப் பார்வை

**முனைவர் இரா. நாகசாமி**

அழகிலும் அறிவிலும் ஆற்றலிலும் சிறந்து விளங்கிய மதுரை கொண்ட இராஜகேசரி என்று பட்டம் பூண்ட சுந்தர சோழருக்கும், வானவன்மாதேவிக்கும் பிறந்த இரண்டாம் திருக்குமரனே அருண்மொழி. வானவன்மாதேவியாரைப் பற்றித் திருக்கோவலூரில் உள்ள கல்வெட்டு,

செந்திரு மடந்தைமன் சீராஜராஜன்
இந்திர சமானன் இராஜ சர்வஞ்ஞனெனும்
புலியைப் பயந்த பொன்மான்

எனக் கூறுகிறது.

வானவன்மாதேவியார் மலையமான் அரசர்களுடைய குடியில் பிறந்தவர். தந்தை வழியில் தமிழகத்தை ஆண்ட மூவேந்தர்களில் ஒருவரான செம்பியர் குடியையும், தாய் வழியில் சங்க காலத்திலிருந்தே சிறந்த திருமுடிக்காரி போன்ற பெருந்தகைகள் பிறந்த மலையமான் குடியையும் சேர்ந்தவன் அருண்மொழி. இவன் எந்த ஆண்டு பிறந்தான் என்று நிச்சயமாகக் கூறமுடியாது. ஆனால் ஐப்பசித் திங்கள் சதய நாளில் தோன்றினான் என்பது தெளிவு. சேர நாட்டை இவன் வெற்றி கொண்டபோது அங்கு சதய நாளில் திருவிழாக் கொண்டாட வைத்தான் என்பதை கலிங்கத்துப்பரணி,

சதையநாள் விழா உதியர் மண்டலம்
தன்னில் வைத்தவன் – என்று கூறுகிறது.

## திருப்பதியம்

தஞ்சைப்பெரிய கோயிலிலே வழிபாட்டின் போது தேவாரத் திருப்பதிகங்கள் பாடித் தெய்வத்தைப் பரவ வகை செய்தான் இராசராசன். அதற்காக நாற்பத்தெண்மரை தேவாரம் ஓதுபவராக அமர்த்தினான். திருப்பதியம் ஓதும்போது அவர்களுக்குப் பக்கவாத்தியமாக உடுக்கையும், கொட்டிமத்தளமும் வாசிக்கப் பட்டன. அவர்களுக்கு நாள் ஒன்றுக்கு மூன்று குறுணி வீதம் தஞ்சாவூர் பண்டாரத்திலிருந்து நெல் அளிக்கப்பட்டது. திருப்பதிகம் பாடுபவர்கள் திருநாவுக்கரையன், சம்பந்தன், செம்பொற்சோதி, சீருடைகழலான், சீராளன், திருஞானசம்பந்தன் எடுத்த பாதப்பிச்சன், சிவக்கொழுந்து ஆகிய எழில்மிகும் தமிழ்பெயர் பூண்டு விளங்கினர்.

அருண்மொழி குழந்தையாக இருக்கும்பொழுதே சுந்தர சோழன் இறந்தவுடன் வானவன்மாதேவியாரும் உடன்கட்டை ஏறினார்.

அருண்மொழியின் தோற்றத்தில் மகிழ்வடைந்த இன்னும் இருவர்களை இங்கு குறிப்பிட வேண்டும். கண்டாதித்த தேவரின் பிராட்டியார் மாதேவடிகளான செம்பியன்மாதேவியார் அருண்மொழிவர்மனிடத்தில் பேரன்பு உடையவர். அருள்மொழி குழந்தையாக இருந்தபோது அவனைத்தாலாட்டிச் சீராட்டி அருள் வழியாம் சிவ நெறியை அம் மூதாட்டியார்தாம் புகட்டியிருக்க வேண்டும். இராஜராஜனுக்கு சைவ நெறியிலே இருந்த ஈடுபாட்டுக்கு இவ்வம்மையாரே காரணம். செம்பியன்மாதேவியாரைப் போன்று அருண்மொழியிடத்தில் அன்போடு திகழ்ந்தவர் அவனுடைய தமக்கை குந்தவைப் பிராட்டியார். அருண்மொழியை ஒரு பேரரசனாக வளர்த்த பெருமை இவ்வம்மையார்க்கு உண்டு. தாயும் தந்தையும் இறந்த பின்னர் அன்போடு வளர்த்த குந்தவையின் மீது அருண்மொழிக்கு மிகப்பெரும் மதிப்பு இருந்தது.



## முடிகொடுத்தான்

சுந்தரசோழனின் மறைவுக்குப் பிறகு ஆதித்த கரிகாலன் ஆண்டதாகத் திருவாலங்காட்டுச் செப்பேடு, பெரியலெயிடன் செப்பேடு முதலிய சாசனங்கள் குறிக்கின்றன. ஆனால் கரிகாலன் சுந்தரசோழனுடைய காலத்திலேயே கொலையுண்டிருக்க வேண்டுமென்று சிலர் கருதுகின்றனர். இந்நிகழ்ச்சி சுந்தரசோழனுடைய கடைசிக் காலத்தில் நிகழ்ந்திருக்கலாம். ஆதித்த சோழன் இறந்தவுடன், மக்கள் அனைவரும் சோழப் பேரரசை ஏற்று ஆளும்படி அருண்மொழியை வேண்டினர். அது சமயம் மதுராந்தக உத்தமசோழருக்கு, தானே ஆளவேண்டுமென்ற ஆவல் இருந்தது. அரசியல் கலையிலே நல்ல தேர்ச்சி பெற்றிருந்த அருண்மொழி தன் சிறிய தந்தையின் ஆவலை நன்குணர்ந்து சோழநாட்டை அவரே ஆளட்டும் என வற்புறுத்தினான். அவருள்ளவரை சோழர் முடியை மனத்தாலும் நான் நினையேன் என்றும் கூறினான் என, திருவாலங்காட்டுச் செப்பேடு குறிக்கிறது.

இச்செய்யுளிலிருந்து இரண்டு செய்திகள் நன்கு விளங்குகின்றன. முதலாவது, உத்தமசோழருக்கு தான் ஆளவேண்டுமென்ற ஆவல் இருந்தது என்பது. இரண்டாவது, அருண்மொழி அரசியல் அறிவில் முதிர்ந்திருந்தான் என்பதும், நாட்டின் நன்மைக்காக சோழர் குடிப்பெருமையை காக்கவும் ஒரு மாபெரும் பேரரசின் முடியையும் விட்டுக்கொடுக்கும் தியாகச் செம்மலாக விளங்கினான் என்பது தன்னலங்கருதாத் தகைமையாளன் இவன்.

## முடிசூடினான்

மதுராந்தக உத்தமசோழன் சுமார் பதினைந்து ஆண்டுகள் ஆட்சி புரிந்தான். அவன் அருண்மொழியை

இளவரசனாக முடிசூட்டி மகிழ்ந்தான். அப்பதினைந்து ஆண்டுகளில் தன்னுடைய கல்வியறிவையும், கலையார்வத்தையும், அரசியல் ஆற்றலையும் நன்கு பெருக்கிக் கொண்டு ஓர் ஒப்பற்ற பண்பாளனாக மலரும் வாய்ப்பு அருண்மொழிக்கு ஏற்பட்டது. மதுராந்தக சோழன் கி.பி.985இல் இறந்தவுடன், அருண்மொழிவர்மன் சோழ அரியணை ஏறினான். அந்நாளை மாபெரும் விழாவாக மக்கள் கொண்டாடியிருக்க வேண்டும். அருண்மொழியின் முடிசூட்டு விழாவின்போது நாடெல்லாம், நகரெல்லாம், ஊரெல்லாம் ஒரே களிப்பில் மூழ்கி விழாக்கோலம் பூண்டிருக்க வேண்டும். ஆடலும், பாடலும், ஆலய வழிபாடுகளும் நிறைந்து எங்கும் களிப்பு மிகுந்து விளங்கியிருக்க வேண்டும்.

'இவன் முடியில் ஆட்டப் பெற்ற விழுநீர் கலியின் மாசுகளைத் துடைத்தது. தன் மகளாகிய திருமகள் இவன் மார்பில் வீற்றிருத்தலைக் காண, தானே வந்த பாற்கடல் போல் இவனுடைய வெண்கொற்றக் குடை திகழ்ந்தது' என்று திருவாலங்காட்டுச் செப்பேடு குறிக்கிறது. அருண்மொழிவர்மன் தன் முடிசூட்டு விழாவின்போது, இராஜராஜன் என்ற பெயரை ஏற்றிருக்க வேண்டும். இவன் முடிசூடியவுடன் திருமகள் போலப் பெருநிலச் செல்வியையும் இவனுக்கே உரிமை பூண்டான். இராஜராஜன் பல பெயர்களால் குறிக்கப்படுகிறான். இவனுக்கு கோஇராஜகேசரி என்றும், கோஇராஜராஜ கேசரி என்றும் பட்டங்கள் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன.

இராஜராஜனுக்குப் பல மனைவியர் இருந்தனர். இவர்களில் ஒலோகமாதேவி இராஜராஜனின் பட்டத்தரசியாகத் திகழ்ந்தார். இவ்வம்மையாருக்கு தந்திசக்திவிடங்கி என்ற இயற்பெயரும் இருந்தது. இராஜராஜனுக்கு மகன் ஒருவனே இருந்ததாகத் தெரிகிறது. அவனே வானவன்மாதேவியார் இடத்துப் பிறந்த மதுராந்தகன் என்ற முதல் இராஜேந்திர சோழனாவான். இரண்டு பெண்கள் இருந்தனர். ஒருத்தி பெயர் மாதேவடிகள். இளையவள் பெயர் குந்தவை. இராஜராஜன் தன் சிற்றப்பனின் நினைவாகத் தன் மகனுக்கு மதுராந்தகன் எனப் பெயர் சூட்டினான் என்றும், தமக்கை குந்தவை தேவியார் மீது கொண்ட பெருமதிப்புக் காரணமாகத் தன் இளைய மகளுக்கு குந்தவை என்றும் பெயர் சூட்டி மகிழ்ந்தான். இராஜராஜனுடைய மனைவியரில் பஞ்சவன்மாதேவி பழுவேட்டரையர் குடியில் வந்தவள். இராஜராஜனுடைய தமக்கையார் குந்தவை, வல்லவரையர் வந்தியத்தேவர் என்பவரை மணந்தார்.



"பாண்டிய குலாசனி வளநாட்டுத் தஞ்சாவூர் கூற்றத்து தஞ்சாவூர் நாம் எடுப்பித்தத் திருக்கற்றளி ஸ்ரீஇராஜ இராஜேச்வர முடையார்" என்று இம்மன்னன் மிகச் சிறப்பாகத் தான் எடுப்பித்த திருக்கற்றளியைப் பற்றிக் கூறுகிறான். இக்கோயிற் பெரிய உடையாரை ராஜராஜேச்வரமுடைய பரமஸ்வாமி என்றும் குறிப்பிடுகிறான்.

தஞ்சைக்கோயில் மிகச் சிறந்த அம்சங்களைக் கொண்டதொரு கோயிலாகும். 200 அடி உயரத்திற்கு கல்லினாலேயேயான விமானம் வானவளாவப் பரந்துநிற்கிறது. கர்ப்பக்கிருகத்தில் சிவலிங்கம் இராஜராஜனின் பெருமிதத்தைக்காட்டும் வகையில் மிகவும் பெரியதாக உள்ளது. இராஜராஜனுக்குப் பெரிய

## ஆடவல்லான்

முற்காலத்தில் தெய்வீக வழிபாட்டின் அங்கமாக நாட்டியம் திகழ்ந்தது. பதினாறு அங்கங்களையுடைய வழிபாட்டு முறையில் கூத்து (நிருத்தம்) பதினைந்தாவது அங்கமாக குறிக்கப்படுகிறது. ருத்ரதாண்டவம் எடுத்துரைத்த தவச்செல்வர் சிவபெருமான் ஆதலின் அவர் உறைகின்ற கோயிலில் சுவர்களில் அப்பெருமான் ஆடிய 108 கரணங்களைச் (72 முடிவடைந்துள்ளன) சிற்பமாகச் செதுக்கியமைத்த பெருமை இராஜராஜனையே சாரும். தில்லையிலே நடம்புரிகின்ற கூத்தப்பெருமாளிடத்தில் எல்லையில்லா ஈடுபாடுகொண்ட இராஜராஜப்பெருந்தகை, தான் தோற்றுவித்த நடராஜ பெருமானின் உருவங்களை **'ஆடவல்லான்'** என்றழைத்து அகமகிழ்ந்தான். தன் நாட்டில் வழங்கிய அளவுகளுக்கும் **ஆடவல்லான்** என்ற பெயர் சூட்டி மகிழ்ந்தான். இறைவன் ஆடிய ஆடலில் தன் உள்ளத்தைப் பறிகொடுத்த இப்பெருந்தகை தன் நாட்டிலே ஆடலில் சிறந்து பெரும் புகழ் எய்திய நானூற்றுக்கும் மேற்பட்ட நாட்டிய மகளிருக்கு தான் தோற்றுவித்த பெருங்கோயிலில் நாட்டியப் பணிபுரியும் பேறளித்தான்.

**இராஜராஜனின் படைகள்**

**இராஜராஜனிடத்தில் மூலப்படையாக இருந்த படைகளின் பெயர்கள்:–**

1. நிகரிலி சோழத்தெரிந்த உடநிலை குதிரைச் சேவகர்.
2. மும்முடி சோழத் தெரிந்த யானைப்பாகர்.
3. அழகிய சோழத் தெரிந்த வலங்கை வேளைக்காரர்.
4. க்ஷத்திரிய சிகாமணி தெரிந்த வலங்கை வேளைக்காரர்.
5. சத்ருபுஜங்கத் தெரிந்த வலங்கை வேளைக்காரர்.
6. ராஜ காண்டீவத் தெரிந்த வலங்கை வேளைக்காரர்.
7. ராஜராஜத் தெரிந்த வலங்கை வேளைக்காரர்.
8. அரிதுர்க்க வங்கணத் தெரிந்த வலங்கை வேளைக்காரர்.
9. மூர்த்த விக்ரமாபரண தெரிந்த வலங்கை வேளைக்காரர்.
10. மும்முடி சோழத் தெரிந்த பரிக்காரர்.
11. ரணமுக பீமத் தெரிந்த வலங்கை வேளைக்காரர்.
12. விக்கிரமாபரணத் தெரிந்த வலங்கை வேளைக்காரர்.
13. இளைய ராஜராஜத் தெரிந்த வலங்கை வேளைக்காரர்.

பெருமாள் என்ற பெயர் உண்டு. எனவேதான் இப்பெருமானுக்கு பெருவுடையார் என்றும் பிருகதீச்வரர் என்றும் பெயர் மருவி வழங்கலாயிற்று போலும். கர்ப்பக்கிருகத்தைச் சுற்றிலும் உள்ள திருபுண்ணாழிகையில் தான் அக்காலத்திய வண்ண ஓவியங்கள் உள்ளன. சோழர் காலத்திய ஓவியத்தின் மேல் கி.பி.1500க்கு மேல் நாயக்கர் காலத்திலும் ஓவியங்கள் பூசப்பட்டன. பல இடங்களில் நாயக்கர் காலத்து ஓவியங்களை நீக்கி அதன் அடியில் உள்ள சோழர் கால ஓவியங்களைக் காண தற்போது வகை செய்யப் பட்டுள்ளது. முதல் மாடத்தில் கர்ப்பக்கிருகத்தைச் சுற்றி ஆடவல்ல பெருமானின் தாண்டவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. கர்ப்பக்கிருகத்தைச் சுற்றி மற்றொரு பிரகாரமுள்ளது. கர்ப்பக்கிருகத்தின் முன்பு அர்த்தமண்டபம், மகாமண்டபம் முதலிய மண்டபங்கள் அமைந்துள்ளன. இராஜராஜன், திருஅணுக்கன், கேரளாந்தகன் என்ற பெயருடைய மூன்று வாயில்கள் இங்குள்ளன. இவ்வாயில்களின் இருமருங்கிலும் சுமார் 19 அடி உயரமுள்ள ஒரே கல்லால் ஆன துவார பாலகர்கள் உள்ளனர். கர்ப்பக் கிருகத்தின் முன்பும், மண்டபங்களுக்கு இருமருங்கிலும் செல்ல நேராக அமைக்கப்பட்டுள்ள படிகள் பிற்காலத்திய தாகும். இதற்கு முன்பு



மிகப்பெரிய அளவில் நந்தி அமைந்துள்ளது. ஸ்ரீவிமானத்தின் அடியிலே ராஜராஜனின் கல்வெட்டுக்கள் உள்ளன. இதைச் சுற்றியுள்ள திருச்சுற்று மாளிகையும் மிகவும் சிறந்த முறையிலே அமைக்கப்பட்டுள்ளது. "உடையார் ஸ்ரீராஜராஜதேவர் திருவாய் மொழிந்தருள இத்திருச்சுற்று மாளிகை எடுப்பித்தான் சேனாதிபதி சோழ மண்டத்து உய்யக்கொண்டார் வளநாட்டு வெண்நாட்டு அமண்குடியான கேரளாந்தகச் சதுர்வேதிமங்கலத்து ஸ்ரீகிருஷ்ணன் இராமனான மும்முடிச்சோழ பிரும்மமாராயன்" என்று அதில் உள்ளது. இத்திருச்சுற்று மாளிகையில் அக்னிதேவன், யமன் போன்ற திசைக் காவலர்களுக்கு சிறு கோயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. இத்திருச்சுற்று மாளிகையையொட்டி இருக்கும் கோபுரம் இராஜராஜன் திருவாயில் என்று பெயர் கொண்டது. அதற்கு முன்புள்ள பெரிய கோபுரமும் இராஜராஜன் காலத்தில் கட்டப்பட்டது தான். ஸ்ரீவிமானத்தையும், கோபுரத்தையும் எழில்மிகும் சிற்பங்கள் அலங்கரிக்கின்றன.

அம்மன் கோயில் 13ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டிருக்க வேண்டும். இதற்குச் சான்றாக ஓர் கல்வெட்டில் "திரிபுவன சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டான் தஞ்சாவூர் உடையார் ஸ்ரீராஜராஜேஸ்வர முடையார் தானத்தார்க்கு இக்கோயிலில் எழுந்தருளுவித்த உலகமுழுதுடைய நாச்சியார் தஞ்சாவூர் பெரிய உடையநாயனார் கோயிலில்" என்று கூறுவதிலிருந்து இதை அறிகிறோம். அதற்கு முன்னர் உள்ள மண்டபம் கி.பி.16ஆம் நூற்றாண்டில் மல்லப்ப நாயக்கர் காலத்தில் புலியூர் மக்களால் தர்மமாகக் கட்டப்பட்டது. விமானத்திற்குப் பின்புறம் உள்ள பிள்ளையார் கோயில் இராஜராஜன் காலத்தில் கட்டப்பட்டிருக்க வேண்டும். கல்வெட்டுக்களில் இது பரிவாராலயத்துப் பிள்ளையார் என்று குறிக்கப்படுகிறது. சுமார் 200 வருடங்களுக்கு முன்னர் தஞ்சையை ஆண்ட சரபோஜி மன்னனால் இது முற்றிலும் புதுப்பிக்கப்பட்டது. வடபகுதியில் உள்ள சுப்பிரமணியர் கோயில் நாயக்கர் மன்னர்களால் கட்டப்பட்ட ஓர் சிறந்த கோயிலாகும். பிற்காலக் கோயிற் கலைக்கு இது ஓர் சிறந்த எடுத்துக்காட்டு. சண்டிகேஸ்வரர் கோயில் இராஜராஜனால் கட்டப்பட்டதுதான்.

## இராஜராஜன் ஆட்சிப் பரப்பு

இராஜராஜனின் ஆட்சிப் பரப்பு சோழநாடு, பாண்டியநாடு, தொண்டைநாடு, கொங்குநாடு, சேரநாடு என்று தமிழ்நாடு முழுவதையும் உள்ளடக்கியிருந்ததோடு குடமலைநாடு (குடகு பகுதி), கங்கபாடி (கர்நாடகத்தின் தென்பகுதி, சேலம் மாவட்டத்தை ஒட்டியது) நுளம்பபாடி (கர்நாடகத்தின் ஒரு பகுதி, ஆந்திரத்தின் பெல்லாரி மாவட்டம்), தடிகைபாடி (மைசூர் பகுதி), வேங்கைநாடு (கிருஷ்ணா, கோதாவரி ஆறுகளுக்கு இடைப்பட்ட சாளுக்கியநாடு), கலிங்கநாடு (ஒரிசா), சித்புலிநாடு (நெல்லூர்ப் பகுதி), பழந்தீவு பன்னீராயிரம் (சேர நாட்டிற்கு தென் மேற்கே அரபிக்கடலில் உள்ள மாலத்தீவுகள்) ஆகிய நாடுகளிலும் பரவியிருந்தது.

இக்கோயிலுக்கு, வழிபாட்டுக்கும், வேண்டிய நிவந்தங்களுக்கும் இராஜராஜனும், அவனது தமக்கையான குந்தவை பிராட்டியும், அவனது தேவிமாரும், மற்ற பெருங்குடி மக்களும் ஏராளமான பரிசுகள் வைத்து மகிழ்ந்தனர்.

ஸ்ரீவிமானத்தின் மேல் வைப்பதற்காக ஓர் செப்புக்குடத்தை இராஜராஜன் கொடுத்தான். இதன் மேல் தங்கத்தகடு போர்த்தப்பட்டது. திருச்சுற்று மாளிகையில் உள்ள திக்பாலரது கோயில்களின் மேல் வைப்பதற்கும் செப்புக்குடங்கள் அளிக்கப்பட்டன. பொய்கைநாடு கிழவன் ஆதித்தன் சூர்யனான தென்னவன் மூவேந்தவேளான் என்பான் இக்கோயில் காரியங்களை கவனித்து வந்தான். செல்வ வளமும் பந்து வளமும் (உறவினர்கள்) உடையவர்களே இக்கோயில் காரியங்களைக் கவனித்தனர்.

வழிபாட்டுக்காக பல நிலங்கள் அளிக்கப்பட்டன. இராஜராஜேச்வரமுடையாரும், தஷிணமேருவிடங்கரும் ஆடியருளும் திருமஞ்சன நீரிலும், தண்ணீர் மீதிலும் இடுவதற்கு பெருஞ்சண்பக மொட்டுக்கும், இலாமச்சம் ஏலவரிசி இவைகளுக்கும் நிவந்தங்கள் வைக்கப்பட்டன. தூபத்தோடு காட்டும் தீபத்துக்கும், கற்பூரத்திரியிட்டு எரியவைப்பதற்கும் பரிசுகள் இராஜராஜனால் அளிக்கப்பட்டன. திருவிளக்கினுக்கு நெய் அளிக்க இடையரிடம் ஆடு, பசு, எருமை, ஆட்டுக்குட்டி, கன்று முதலியன நூற்றுக்கணக்கிலே விடப்பட்டன. தினந்தோறும் சந்திதோறும் திருவமுது செய்ய கொடுக்கப்பட்டன.

இக்கோயிலுக்குப் பல செப்புத்திருமேனிகளும், பிரதிமங்களும் செய்தளிக்கப்பட்டன. இவைகளை அளித்தவர்களின் பெயர்களும், மூர்த்திகளின் அமைப்பும், அளவும், உலோகங்களும் தெளிவாகக் கல்வெட்டிலே குறிப்பிடப்பட்டுள்ளன.



இப்பெரும் கோயிலில் உள்ள பெரும் செல்வங்களையும், ஆபரணங்களையும், திருமேனிகளையும், பண்டாரத்தையும் சுமார் 120க்கு மேற்பட்ட மெய்க்காப்பாளர்கள் காத்து நின்றனர். சோழ மண்டலத்திலிருந்த பிரம்மதேயங்களிலிருந்து ஒவ்வொரு ஊர்களும் ஒவ்வொரு மெய்க்காப்பாளரை அனுப்பி அவர்களுக்கு வேண்டிய நெல்லும் கொடுத்தன. இக்கோயிலில் திருவாய்க்கேள்வியாக மும்முடிச் சோழ கடிகை மாராயன், ராஜராஜ கடிகை மாராயன், ஜயங்கொண்ட சோழ கடிகை மாராயன் என்பவர்கள் இருந்தனர்; செம்பங்குடியான் தன்னிச்சை சதுரவிடங்கன் என்பவன் இந்த கோயிலில் கணக்கெழுதுவோர்களில் தலைமையாகவும் அவனுக்குக் கீழ் எண்மரும் இருந்தனர். திருப்பள்ளித் தொங்கல் பிடிப்பார், விளக்குமையர்கள், நீர்தெளிப்பார், சன்னாலியார், மடைப்பள்ளி குசவர், வண்ணத்தார்கள், நாவிசஞ்செய்வார், கோலினிமை செய்வார், அம்பட்டர், தய்யான், ரத்தினத்தைய்யான், கன்னான், தச்சர், தட்டார் முதலிய பல பணியாட்கள் கோயிலில் இருந்தனர். இப்பணியாட்களில் பலர் இராஜராஜனின் பெயரையும் தங்கள் பெயருடன் சேர்த்து வைத்துக் கொண்டனர்.

ஸ்ரீராஜராஜேச்வர முடையார்க்குத் திருப்பதியம் விண்ணப்பம் செய்ய, ஐம்பதின்மரை ஸ்ரீஇராஜராஜன் அளித்தான். இக்கோயிலில் சுமார் 400 பெண்டுகள் நிருத்தப்பணி புரிந்தனர். இப்பெண்டுகளில் பெரும்பாலோர் தஞ்சாவூர், நியமம், அம்பர், திருவையாறு, பழையாறு முதலிய சிறந்த கோயில்களில் பணிபுரிந்து புகழ்பெற்றவர்கள். இவர்களில் பலர் அரச குடும்பத்தினரின் பெயரையே பூண்டு மகிழ்ந்தனர் என்பதற்குச் சான்றாக, நக்கன் ராஜகேசரி, மீனவன்மாதேவி, குந்தவை செம்பியன் மாதேவி, முதலிய பெயர்கள் காணப்படுகின்றன. பெண்டுகளுக்குத் தளிச்சேரிகளை அமைத்து ஒவ்வொருவருக்கும் ஒரு வீடளித்து, அவர்களுக்கு வேண்டிய நிலம் அளித்து கலைப்பணிபுரிய பணித்தான். சாவூர் பரஞ்சோதி என்பவனும் கோவிந்தன் சோமநாதன் என்பவனும் தளிச்சேரி பெண்டுகளுக்கும், காந்தர்விகளுக்கும், நாயகஞ்செய்பவர்களாக அமர்த்தப்பட்டனர். இவர்களுக்கு நட்டுவஞ்செய்ய அரையன் சுந்தரசோழனான மும்முடிச் சோழ நிருத்தமாராயன் என்பவனும் மற்றும் ஐவரும் இருந்தனர். கோயிலில் பஞ்சவன் மாதேவி நாடகமய்யன், திருவெள்ளறை சாக்கை முதலியோரின் கையில் கொட்டாட்டுப்பாட்டு இருந்தது.

## இராஜராஜன் பெரிய கோயிலுக்கு கொடுத்தவை

தஞ்சைப் பெருவுடையார் கோயிலுக்கு இராஜராஜன் கொடுத்தவை; பொற்கலங்கள் 41,559 கழஞ்சு எடை, வெள்ளிக்கலங்கள் 50,650 கழஞ்சு எடை, அணிகலன்கள் 10,200 கழஞ்சு எடை, மேலும் ஆண்டுதோறும் 1,16,000 கலன் நெல்லும், 1,100 காசும் வருமானமுள்ள ஊர்களும் கொடுத்துள்ளான்.

இதுபோல் பாடவ்யம் கானபாடி, உடுக்கை வாசிப்பார், கொட்டிமத்தளம் வாசிப்பார், முத்திரைச் சங்கு ஊதுவார், பக்க வாத்தியர், காந்தர்வர், உவைச்சர் முதலிய பலர் இசைப்பணி புரிந்தனர். சுப்பிரமணியக் கூத்தனான செம்பியன் வீணை ஆதித்தன் என்பானும் இவன் செத்தமையில் இவன் மகளைக்கொண்ட அரையன் சதாசிவனும் வீணை வாசித்தனர்.

இராசராசன் தமிழ்த் தாயின் ஒப்பருந் தவப்புதல்வன். அவனது ஆற்றலை, அவன் விட்டுச் சென்றுள்ள அளப்பரும் கலைச் செல்வங்களை, அவனது ஆட்சித் திறனை, எங்கோ மூலையில் புற்றிட்டுக் கிடந்த திருமுறைகளைத் தேடி எடுத்து அளித்த பெருமையை, இன்னும் பல சிறப்புகளை நோக்கும்போது இம்மன்னன் இந்திய நாட்டிலேயே ஆண்ட மன்னர்கள் அனைவரிலும் தலையாயவன், சிறந்தவன், போற்றிப் புகழத்தகுந்தவன் என்பது தெளிவு. பல மன்னர்களைப் பற்றிய கல்வெட்டுகளும், செப்பேடுகளும் கிடைத்திருக்கின்றன. அவற்றில் பல அன்று ஆண்ட அரசர்களைப் பற்றியக் கல்வெட்டுகள் தனிச்சிறப்பு வாய்ந்தவை. அவற்றில் பலவற்றை இராசராசன் எழுதும்படி தானே ஆணையிட்டான். ஆதலின் அக்கல்வெட்டுகளிலிருந்து அம்மன்னனுடைய சிந்தனைகள் எவ்வாறு இருந்தன; அவன் செயலாற்றும் திறமை எவ்வாறு இருந்தது, அவனது தனித்தன்மை என்ன என்பதையும் மிகவும் தெளிவாக நாம் அறிய முடிகிறது.



தஞ்சையில் இராசராசன் எடுப்பித்த பெருங் கோயிலில் பல கல்வெட்டுகள் இருக்கின்றன. இவற்றில் பல இராசராசனால் கொடுக்கப்பட்ட தானங்களை (பரிசுகளைக்) கூறுகின்றன. பிற மற்றவர்கள் அளித்த பரிசுகளைக் குறிக்கின்றன.

### இராஜராஜனின் சிறப்புப் பெயர்கள்

| | |
|---|---|
| அபயகுலசேகரன் | சண்டபராக்ரமன் |
| அரிதுர்க்கலங்கன் | சத்ரு புஜங்கன் |
| அருள்மொழி | சிங்களாந்தகன் |
| அழகியசோழன் | சிவபாத சேகரன் |
| இரணமுக பீமன் | சோழ குலசுந்தரன் |
| இரவிகுல மாணிக்கன் | சோழ மார்த்தாண்டன் |
| இரவிவம்ச சிகாமணி | சோழேந்திரசிம்மன் |
| இராஜ கண்டியன் | திருமுறைகண்ட சோழன் |
| இராஜசர்வஞ்ஞன் | தெலிங்ககுலகாலன் |
| இராஜராஜன் | நிகரிலிசோழன் |
| இராஜாச்ரயன் | நித்ய விநோதன் |
| இராஜகேசரிவர்மன் | பண்டித சோழன் |
| இராஜ மார்த்தாண்டன் | பாண்டிய குலாசனி |
| இராஜேந்திர சிம்மன் | பெரிய பெருமாள் |
| இராஜவிநோதன் | மும்முடிச் சோழன் |
| உத்தம சோழன் | மூர்த்தவிக்கரமாபரணன் |
| உத்துங்க துங்கன் | ஜனநாதன் |
| உலகளந்தான் | ஜெயங்கொண்டசோழன் |
| உய்யக் கொண்டான் | சத்திரிய சிகாமணி |
| கேரளாந்தகன். | |

### தஞ்சைக் கோயிலைக் கட்டிய ஸ்தபதி

இவ்வளவு சிறந்த கல்வெட்டில் இம்மாபெருங் கோயிலைத் தோற்றுவித்த சிற்பிகளின் பெயரைக் குறிக்காமலா இருப்பான்? அவர்களின் பெயர்களும் குறிக்கப்பட்டுள்ளன. சிற்பிகளின் தலைவனுக்கு தச்சாசார்யன் என்று பெயர். வீரசோழன் குஞ்சரமல்லனான இராஜராஜப் பெருந்தச்சன் என்பவன் இக்கோயிலில் தச்சாசார்யனாகக் குறிக்கப்படுகிறான். இவனுக்கு உதவியாக குணவன் மதுராந்தகனான நித்த விநோதப் பெருந்தச்சன் என்பவனும், இலத்திச் சடையனான கண்டராதித்த பெருந்தச்சன் என்பவனும் பணி புரிந்திருக்கிறார்கள். தற்காலத்தில் கோயில்களை நிர்மாணிக்கும் சிற்பிகளை ஸ்தபதி என்கிறோம். அவர்கள் அக்காலத்தில் பெருந்தச்சன் என்று பட்டம் பெற்று சிறந்தனர் என பல கல்வெட்டுகளிலிருந்து அறிகிறோம். ஆதலின் இராஜராஜனது பெயர் பூண்டு இராஜராஜப் பெருந்தச்சன் என்று அழைக்கப்பட்ட தச்சாசார்யனே வியத்தகும் தஞ்சைப் பெருங்கோயிலைத் தோற்றுவித்த தமிழகத்தின் தலையாய சிற்பி என்பதில் ஐயமில்லை.

இராஜராஜனது இக்கல்வெட்டில் மற்றொரு சிறப்பையும் காண்கிறோம். இராஜராஜன் இக்கோயிலில்

பணிபுரிய சிலருக்கு ஆணையிட்டிருக்கிறான். அவர்கள் சில காலம் இங்கு பணி புரிந்திருக்கிறார்கள். ஆனால் இக்கல்வெட்டுகளைப் பொறிப்பதற்குள்ளாக அவர்கள் இறந்துபோய் விட்டார்கள். அப்பணியைப் பிறர் செய்தனர். ஆயினும் நிலையான கல்வெட்டில் முதலில் அமர்த்தப்பட்டவர்கள் இறந்துபோன போதிலும், அவர்களது பெயரையும் கல்லிலே குறித்துள்ள பெருமையைக் காண்கிறோம். கல்வெட்டு எழுதும்போது இறந்தவருடைய பெயரைக் குறிக்க வேண்டியது தேவையில்லை. ஆயினும் வீணை வாசிப்பார் இருவருக்கு சுப்பிரமணியன் கூத்தனான செம்பியன் வீணை ஆதித்தனுக்கு பங்கு மூன்றரையும், இவன் செத்தமையில் இவன் மகளைக் கொண்ட அரையன் சதாசிவனுக்குக் காணியாகவும்; பராந்தகக் கொங்கவாளில் கீர்த்தி நாதனுக்கு பங்கு முக்காலும், இவன் செத்தமையில் இவன் தம்பி கீர்த்தி கிளை தாங்கிக்கு காணியாகவும்' என்று குறிப்பிட்டுள்ளதிலிருந்து பணி செய்தவன் இறந்த போதிலும் இராஜராஜன் அவனுக்கு எவ்வளவு பெருமை அளித்திருக்கிறான் என்று அறியலாம். இதுவும் இராஜராஜனுடைய பெருந்தன்மையின் எடுத்துக்காட்டு.

### கோயில் பொறுப்பு

இக்காலத்தில் வங்கிகளில் பொருளாளர் (Cashier) களாகவும், கணக்காளர்களாகவும் நியமிக்கப் படுபவர்களிடத்தில் பிணைப்பு பணம் (Security Deposit) பெற்ற பிறகுதான் இவர்களை நியமிக்கிறார்கள் இராசராசன் தான் எடுப்பித்த கோயிலிலே பண்டாரத்தையும், கணக்கையும் வைத்துக் கொள்வார்; எவ்வளவு சிறந்தவர்களாக இருக்க வேண்டும் என்பதற்கு உள்ள கட்டுப்பாடுகளைக் கல்வெட்டில் குறித்திருக்கிறார்கள். இப்பணிகளில் அமர்த்தப் படுபவர்களுக்கு நிலையான நிலம் (பூமி சம்பத்து) இருக்க வேண்டும். நல்ல நிலையிலே உள்ள சொந்தக்காரர்கள் (பந்து சம்பத்து) இருக்க வேண்டும். பொருள் (அர்த்த சம்பத்து) உடையவர்களாக இருக்க வேண்டும். கோயில், பொதுமக்களுக்காக எடுக்கப்படும் ஒரு பொது ஸ்தாபனம். ஆதலின் அதன் செல்வத்தை நிர்வகிப்பவர்கள், அதன் கணக்கை வைத்துக் கொண்டிருப்பவர்கள், உயர்ந்த நிலையிலுள்ளவர்களாக இருக்க வேண்டும். அவற்றில் ஏதாவது தவறு நேருமானால், தவற்றை சரி செய்ய போதிய வாய்ப்பு இருக்க வேண்டும் என்ற உயரிய நோக்குடனே இராசராசன் மேலே குறிப்பிட்டுள்ள கட்டுப்பாடுகளை வகுத்துள்ளான். அது மட்டுமல்ல, பரிசாரகம் செய்வார்களுக்குக் காசும், நெல்லும் பண்டாரத் தார்களும், கணக் கர்களும் உள்ளூர் பண்டாரத்திலிருந்து கொடுக்க வேண்டும் என்றும், பண்டாரி களும், கணக்கர்களும் தங்களுடைய ஊதியத்தை நாட்டுப் பண்டாரத்தில் சென்று வேறொருவரிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டு மென்றும் பணித்தான். கோயில் கணக்கு எந்த அளவிற்கு சீராக இருத்தல் வேண்டும் என்று இராசராசன் நினைத்தான் என்பதற்கு இது எடுத்துக்காட்டு.



### பெரும் பணி மக்களின் பணி

தன் ஆட்சிக்கு உட்பட்ட பல ஊர்கள் இக்கோயிலில் பணிபுரியும் கணக்கர்களையும், திருமெய்காப்பாளர் களையும், பண்டாரிகளையும், பரிசாரகர்களையும் நியமிக்க இராசராசன் வாய்ப்பளித்தான். இவ்வாறு நியமிக்கப்பட்ட மெய்காப்பாளர்களுக்கு அந்தந்த ஊர்களே ஊதியம் தரவேண்டும் என்று நியமித்தான். தங்கள் ஊரிலிருந்து கோயிலுக்குப் பணிக்கு சென்று வரும்போது ஏற்படும் செலவுகளுக்கு படிச்செலவும் கொடுக்க வேண்டும் என்று நியமித்தான். இதிலிருந்து இராசராசனின் இன்னும் சில சிறந்த குணங்களை அறிய முடிகிறது. அவன் மாபெரும் பேரரசன். அவன் நினைத்தால் துங்கபத்திரை ஆற்றங்கரையிலிருந்து ஈழம் வரையிலும் உள்ள பரந்த பகுதியிலிருந்து எவ்வளவோ ஆயிரக்கணக்கான ஆட்களை அவனே நியமிக்க முடியும். ஆயினும் அவ்வாறு செய்யாமல் தன் ஆட்சியிலிருந்த பல்வேறு ஊர்ச்சபைகளே ஆட்களை நியமிக்க வாய்ப்பளித்தான். தஞ்சைப் பெருங்கோயிலைத் தான் தோற்றுவித்த போதிலும் அது அனைத்து ஊர்களுக்கும் பொது என்ற ஓர் எண்ணத்திற்கும், அனைத்து மக்களும் இக்கோயிலிலே நமக்கும் பங்கு உண்டு, இதன் நிர்வாகத்தில் நாமும் பங்கு ஏற்கிறோம் என்று பெருமை கொள்ளும் வகையிலும் ஒவ்வொரு ஊருக்கும் வாய்ப்பளித்திருக்கிறான் என்பதை நோக்கும் போது இராசராசனுடைய உன்னதக் கருத்துக்கள் நமக்குத் தெளிவாகின்றன.

### அரசனது இறை ஆலயத்துக்கு

தஞ்சையிலே தான் எடுப்பித்த இப்பெருங்கோயிலின் நடைமுறைச் செலவுகளுக்காகத் தனக்குச் சேர வேண்டிய இறையைக் கோயிலுக்கு அளக்க ஆணையிட்டான். பல ஊர்களிலே உள்ள நிலங்களை இவ்வாறு இக்கோயிலுக்கு தேவதானமாக அளித்தான். இந்த ஊர்களையும், அளித்த நிலங்களையும் குறிக்கும் போது மிகவும் தெளிவாகக் குறித்துள்ளான். ஓர் ஊரிலே உள்ள மொத்த நிலம் எவ்வளவு ? அவ்வூரில் கோயில், குளம், இருக்கை முதலிய இறை கட்டாத நிலங்கள் எவ்வளவு ? மீதி இறை கட்டின நிலங்கள் எவ்வளவு ? அந்த நிலங்கள் அளந்த இறை, "இராசராசதேவர் கொடுத்த ஊர் நத்தம், கோயில், குளங்கள் அவ்வூர் நிலத்தை ஊடறுத்துப் புறவூருக்குப் போன வாய்க்கால்கள், பறைச்சேரி, கம்மாளச்சேரி, சுடுகாடு முதலிய இறையிலி நிலங்கள் நீக்கி இறை கட்டின நிலத்தால் காணிக்கடன்" என ஆணையிட்டிருப் பதிலிருந்து அக்காலத்தில் வேளாண் துறை (துரவு) எவ்வளவு சிறப்பாக வகை படுத்தப்பட்டு நிர்வகிக்கப்பட்டது என்பது புலனாகும்.

**ஆண்டானும் அடியானும் சமம்**

தஞ்சைப் பெருங்கோயிலில் விளக்கு எரிப்பதற்காக பல பொருள்களை இராசராசன் கொடுத்திருக்கிறான். அதை சில கல்வெட்டுகள் குறிக்கின்றன. இக்கல்வெட்டிலிருந்து பல சிறந்த செய்திகளை நாம் அறிகிறோம். இக்கல்வெட்டில் பல உயர் அதிகாரிகளின் பெயர் குறிக்கப்பட்டுள்ளன. இவர்களில் பெரும்பாலானவர்கள் கோழிப் போரிலே பங்கு கொண்டவர்கள். கோழிப் போர் மிகவும் கடுமையாக நடத்திருக்க வேண்டும் என ஊகிக்கலாம். தனது படைவீரர்கள் கோழிப்போரிலே ஊனம் ஏதுமின்றி வெற்றி வாகை சூடித் திரும்ப வேண்டும் என இராசராசன் வேண்டி பல விளக்கு களுக்கு வகை செய்துள்ளான். அவ்வாறு விளக்குகள் எரிப்பதற்கு பசுக்களையும், ஆடுகளையும், எருமைகளையும் அளித்திருக்கிறான். இவற்றை வீரர்களுக்கு அளித்து அவ்வீரர்கள் அவற்றை இக்கோயிலுக்கு கொடுத்திருக்கின்றனர். "வில்லவன் மூவேந்த வேளான் தன்னை உடையார் இராசராசதேவர் கோழிப்போரில் ஊத்தை அட்டாமல் என்று கடவ திருவிளக்குக்குத் தந்த'' என்று குறிக்கப்பட்டுள்ளது இதை நமக்குத் தெரிவிக்கிறது. இதே போன்று பல வீரர்களுக்கும் குறிக்கப்பட்டுள்ளது. இராசராசன் விளக்குகள் எரிக்க தானே சில ஆடுகள் அளித்தான். அவன் படை வீரர்கள் சில அளித்தனர். ஒரு விளக்கு எரிக்க சாதாரணமாக 96 ஆடுகள் அளிக்கப்படுவது மரபு. இதற்கு இராசராசன், தான் 48 ஆடுகளைக் கொடுத்தான். மீதி 48 ஆடுகளை தனது படைவீரன் அளிக்க வாய்ப்பளித்தான். தானும், தன் படை வீரனும் இணைந்து இவ்விளக்கு எரிக்க வகை செய்ததை, தங்கள் இருவர் பெயரையும் குறித்து பெருமைப்படுவதிலிருந்து காண்கிறோம். தனது வெற்றிகளுக்கு காரணமாக உயிர் கொடுக்க முன் வந்த பெரும் வீரர்களுக்கு எவ்வித ஊனமும் ஏற்படக் கூடாது என்ற அவனது வேண்டுதலும், அவர்களுக்குத் தன்னுடன் சமநிலை அளித்த பெருமையும் இராசராசன் ஒருவனிடத்தில் தான் காண்கிறோம். இச்சிறந்த மன்னன் ஒரு விளக்குக்கு அல்ல பல விளக்குகளுக்கு தான் பொருள் கொடுத்த போது தனது படை வீரனும் கொடுத்ததாகக் கல்வெட்டில் பொறித் துள்ள பெருமையைக் காண்கிறோம்.



**பணிப் பெண்ணுக்கும் சம அந்தஸ்து**

படை வீரர் மட்டும்தானா ? இல்லை, இல்லை. தன் கீழ் பணிபுரிகின்ற பணிப்பெண் கூட இதுபோல் விளக்குகளுக்குப் பொருள் கொடுக்கும் வாய்ப்பளித்து அவளுடைய பெயரையும், தனது பெயரையும் தனது பெயருடன் கல்வெட்டில் பொறித்துள்ள பெருமையைக் காண்கிறோம். 'உடையார் இராஜராஜதேவர் கொடுத்த கால்மாட்டில் அடுத்த பசு நாற்பத்து இரண்டும் உய்யக்கொண்டான் தெரிந்த திருமஞ்சனத்தார் வேளத்து பெண்டாட்டி (வேலைக்காரி) வரகுணள் எழுவத்தூர் திருவிளக்குக்கு வைத்த காசு' என குறிப்பிட்டுள்ள பெருந்தன்மையை, இராஜராஜனின் அளப்பரும் அன்புச்செல்வத்தைக் காணும்போது அவனுக்கு ஈடு இணையாக வேறு எந்த பேரரசனும் இருக்க முடியாது எனும் எண்ணம் மேலிடுகிறது.




பெரிய கோயில் வரைபடம்

*(நன்றி : இராஜராஜேச்சரம் நூல்)*

*(தஞ்சைப் பெருவுடையார் கோயில் ஆயிரம் ஆண்டு நிறைவு விழாவையொட்டி தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை வெளியிட்ட 'இராஜராஜன்' எனும் நூலில் இருந்து...)*

★ ★ ★

# பீடம் முதல் சிகரம் வரை கருங்கற்களே



மகுடாகமம் எனும் ஆகம நெறியிலும் மகாசாயிகாபதம் என்ற பதவிந்யாச அடிப்படையிலும் எழுப்பப்பெற்றதே இராஜராஜீச்சரமாகும். இராசராசன் தனது தலைநகரில் புதிதாக எழுப்பிய இக்கற்றளிக்குக் கொல்லிமலையிலிருந்தும், நர்மதையாற்றங் கரையிலிருந்தும் கற்களைக் கொணர்ந்தான் எனக் கூறுவர். இதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. தஞ்சைக்குத் தென்மேற்கே புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள குன்னாண்டார் கோயில் பகுதியில் இருந்த குன்றுகளின் கருங்கற்களையே இங்கு பயன்படுத்தி இருக்கவேண்டும். இதற்கு மூன்று காரணங்கள் உண்டு.

தஞ்சாவூருக்குத் தெற்கு, தென்மேற்குத் திசைகள் தவிர மற்றத் திசைகள் அனைத்தும் ஆறுகளாலும் வாய்க்கால்களாலும் சூழப்பட்டுள்ளன. எனவே அத்திசைகளின் வழியே கனமான பெரிய கற்பாறைகளைக் கொணர்தல் கடினமானதாகும். தஞ்சையைவிடச் சற்று உயரமான தென்மேற்குத் திசைப்பகுதியே போக்குவரத்துக்கு ஏற்ற நில அமைப்புடையது. மேலும் தஞ்சைக்கு மிக அருகாமையில் கற்பாறைகள் கிடைக்கும் இடமும் இப்பகுதியேயாகும்.

தஞ்சைப் பெரியகோயில் கட்டுமானத்திற்குப் பயன்படுத்தப்பெற்ற கருங்கற் பாறைகள், எவ்வகையைச் சேர்ந்தனவோ அதே வகைப் பாறைகள் உள்ள நிலப்பகுதி புதுக்கோட்டை மாவட்டத்துக் குன்னாண்டார் கோயில் பகுதியாகும்.

சோழர் காலத்தில் கோயில்களுக்குக் கற்கள் எங்கிருந்து கொணரப் பெற்றன என்பதற்கு ஒரு சான்று கிடைத்துள்ளது. தஞ்சைக்கு அருகே உள்ள உடையார் கோயில் (அம்மாபேட்டை சாலையில் உள்ளது) சிவாலயத்திற்கு மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தில் (18 ஆம் ஆட்சியாண்டு கி.பி.1196) கல் எங்கிருந்து கொணரப்பெற்றது என்பதனை, "நொடியூர் பட்டணத்து கிள்ளியூர் மலையிலிருந்தும் சிலை கொண்டு வந்து...." என்ற கல்வெட்டுக் குறிப்பால் அறியலாம். நொடியூர் எனும் ஊர் புதுக்கோட்டை மாவட்டத்தில் குன்னாண்டார் கோயில் பகுதியில் உள்ளதாகும். அனைத்தையும் தொகுத்து நோக்கும்போது தஞ்சைப் பெரியகோயிலுக்கும் நொடியூர்ப் பட்டணத்துக் கிள்ளியூர் மலைப் பகுதியிலிருந்தே கற்கள் வந்திருக்கலாம் எனக் கொள்ள முடிகிறது.

கற்களே இல்லாத ஓரிடத்திற்கு, பல்லாயிரக் கணக்கான டன்கள் எடையுடைய கற்களை, ஏறத்தாழ 75 கிலோ மீட்டர் தொலைவிலிருந்து கொணர்ந்து கட்டியுள்ளனர். இக் கோயிலைப் பொறுத்தவரை 4'x 3'பக்க அளவுகளும் சுமார் 40' உயரமும் உடைய நான்கு நிலைக்கால்களுக்கும், 18' உயரமுடைய பிரமாண்டமான துவாரபாலகர் உருவங்கள் பத்தினுக்கும் ஆயிரக்கணக்கான டன் எடையுடைய கற்பாறைகளைக் கொணர்ந்தது மகத்தான சாதனையாகும். இதனைப் போன்றே 18' நீளம் 8' அகலம் 12' உயரமுடைய இடப உருவத்தை இங்குக் கொணர்ந்தும் விசயநகரப் பேரரசுக் காலத்தில் நாயக்கர்கள் செய்த மகத்தான சாதனையாகும். இராசராசன் எடுத்த இராஜராஜீச்சரம் பீடம் முதல் சிகரம் வரை முழுவதுமாகக் கருங்கற்களே கொண்டு கட்டப்பெற்றுள்ளது.

தற்போது கோயிலைச் சுற்றிக் காணப்பெறும் அகழி, கோட்டை மதில்கள் கொத்தளங்கள் ஆகியவை நாயக்க மன்னர்களின் காலத்தில் தோற்றுவிக்கப் பெற்றவையாகும்.

★

# கோபுர வேலைப்பாடுகள்



### கேரளாந்தகன் திருவாயில்

மிக அகலமான அதிட்டானத்தின் மேல் எடுக்கப்பெற்றுள்ள இக்கோபுரம் கருங்கற் பணியோடு சுதை வேலைப்பாடுகளும் சேர்ந்ததாக உள்ளது. இக்கோபுரத்தின் நெடிய வாயிலில் இரண்டு நிலைக்கால்கள் உள்ளன. ஒரே கல்லால் ஆன (4' x 3' x 40') இவை இக் கோயிலிலுள்ள அபூர்வ அமைப்புகளுள் ஒன்றாகும். சாலைகள், கூடுகள் அணி செய்ய மகாநாசிக் கூட்டோடு கலசங்கள் பெற்றுத் திகழும் இக் கோபுரத்தில், சிவபெருமான், உமை, பிரமன், திருமால், கணபதி, ஊத்துவதாண்டர், காணிதேவி, தட்சிணாமூர்த்தி ஆகிய உருவங்கள் சுதைப் பதுமைகளாக உள்ளன. இங்குச் சோழர்காலப் படைப்புகள் பல இன்றும் முழுமையாக அப்படியே உள்ளன. பிற்காலத் திருப்பணிகளால் நாயக்க, மராட்டியர்காலக் கலை அமைதியோடு சில சுதை சிற்பங்களும் உள்ளன.

இக்கோபுரத்தின் வடபகுதி முழுவதையும் மகாசதாசிவமூர்த்தியின் சிற்பங்களே எல்லா நிலைகளிலும் அணிசெய்கின்றன. கீர்த்தி முகத்தில் மார்பளவு உள்ள பிரமாண்டமான திருவுருவமும், மற்ற எல்லாத் தளங்களிலும் பத்மாசனத்தில் (அமர்ந்த கோலத்தில்) 10 திருக்கரங்களும் நான்கு திருமுகங்களும் உடைய திருவுருவங்களுமாக உள்ளன. இவற்றுள் முதற் தளத்தின் வடமேற்குப் பகுதியில் காணப்படும் சதாசிவமூர்த்தி மிகச் சிறப்புடையதாகும்.

இங்குச் சிவபிரானின் முகங்களில் ஒன்று சுவரில் மறைந்துள்ளபோதும், ஈசனானமுகம் முன்தலைக்கு மேலாக அமைந்துள்ளது. பத்துக்கரங்களில் அபயவரதம் காட்டும் கரங்களைத்தவிர மற்றவற்றில் சிவபெருமானுக்குரிய கருவிகள் உள்ளன. கால்கள் இரண்டும் மடிக்கப்பட்டுப் பத்மாசன நிலையில் உள்ளன. இராசராசனின் குருநாதர் லகுளீச பாசுபத மார்க்கத்தைச் சேர்ந்தவராவார். பாசுபாதர்கள் போற்றும் திருவுருவம் இச் சதாசிவ மூர்த்தமேயாகும். எனவேதான் இராசராசன் இக்கோபுரத்தில் மூர்த்தத்திற்கு இத்தனைச் சிறப்புகள் கொடுத்துள்ளான். இதுமட்டுமன்றி, வேறு எங்கும் காணமுடியாத பஞ்சதேகமூர்த்தி என்ற செப்புத் திருமேனியை இக் கோயிலுக்காக வடித்தது பற்றிக் கல்வெட்டுக்கள் வாயிலாக அறியும்போது இந்நெறியில் அவனுக்கிருந்த ஈடுபாடு புலனாகிறது.



இத்திருக்கோபுரத்தின் முதல்நிலை தளத்தில் தென்புறம் தட்சிணாமூர்த்திக்கென ஒரு சிற்றாலயமும் வடபுறம் வேள்வியின் தலைவராகிய பிரம்மனுக்கு ஒரு சிற்றாலயமும் உள்ளன. இத்தகைய அமைப்பினை வேறு எந்த ஆலயத்திலும் காணமுடியாது. காமனை தன் நெற்றிக் கண்ணிலிருந்து எழுந்த தீயால் அழித்த தட்சிணா மூர்த்திக்கும், தாடி மீசையுடன் திருக்கரங்களில் வேள்விக்கரண்டி, அக்கமாலை, நீர்க்கொம்பு, தர்ப்பைக் கட்டுடன் வேள்வி வேட்பவராக பிரம்மனுக்கும் இங்கு திருமேனிகள் உள்ளன. இத்திருக்கோபுரமே ஞானத்தீயின் வடிவமெனக் காட்டவே இச்சிற்றாலயங்கள் இங்கு அமைந்துள்ளன.

*"இராஜராஜேச்சரம்"*
*– குடவாயில் பாலசுப்ரமணியன்*
*எழுதிய நூலிலிருந்து....*



காஞ்சி கைலாசநாதர் கோயில்

தஞ்சைப் பெரிய கோயில்

# கச்சிப்பேட்டுப் பெரியதளி

காஞ்சி மாநகரில் இராஜசிம்ம பல்லவனால் கட்டப்பெற்ற கயிலாசநாதர் கோயிலின் பேரழகில் இராஜராஜன் பெரிதும் மயங்கி அக்கோயிலைக் “கச்சிப்பேட்டுப் பெரியதளி” என்று போற்றி மகிழ்ந்தான். இக்கோயில் அவனது உள்ளத்தில் ஓர் எழுச்சியைத் தூண்டியது. அதன் விளைவாக தஞ்சையில் இராஜராஜீச்சரம் எனும் பெருங்கோயில் எழுந்தது.

இதே கோயிலில் உள்ள இராஜேந்திர சோழனின் கல்வெட்டு இவ்வாலயத்தை ஸ்ரீராஜராஜே ஈஸ்வரமுடையார் கோயில் என்று குறிப்பிடுகிறது. “இராஜராஜேச்சரம்” எனும் பெயர் இலக்கணப்படிச் சரியாயினும் “இராஜராஜீச்சரம்” என்றுதான் கல்வெட்டுக்களில் இராஜராஜன் குறிப்பிடுகின்றான். பாண்டிய குலாசனி வளநாட்டுத் தஞ்சாவூர்க் கூற்றத்துத் தஞ்சாவூர் எனும் ஊரில் இக்கற்கோயிலை எடுப்பித்தேன் என்று இராஜராஜன் கல்வெட்டுக்களில் கூறுவதையும் இக்கோயிலில் காணலாம்.



தஞ்சைப் பெரிய கோயிலை உருவாக்கிய கட்டடக் கலைஞனின் பெயர் வீரசோழன் குஞ்சரமல்லனான ராஜராஜப் பெருந்தச்சன் என்பதாகும். மதுராந்தகனான நித்தவிநோதப் பெருந்தச்சன், இலத்திசடையனான கண்டராதித்தப் பெருந்தச்சன் என்ற இரண்டு தச்சர்களும் குஞ்சரமல்லனின் பெரும் பணிக்குத் துணை நின்றவர்களாவர்.

இராஜராஜனின் பட்டத்தரசி லோகமாதேவியைத் தவிர சோழமாதேவி, திரைலோக்கியமாதேவி, பஞ்சவன்மாதேவி, அபிமானவல்லி, இலாடமாதேவி, பிருதிவிமாதேவி, மீனவன்மாதேவி, வீரநாராயணி, வில்லவன்மாதேவி, வானவன்மாதேவி என்ற 10 தேவியர்களும் அம்மன்னவனுக்கு மனைவியாகத் திகழ்ந்தனர். நாட்டில் அமைதியை நிலைநிறுத்தவும், அண்டை நாடுகளின் நட்புறவை மேம்படுத்தவும் செய்துகொண்ட இத்திருமணங்கள் அரசியல் திருமணங்களே என்பது பல வரலாற்றறிஞர்களின் கருத்தாகும். இவர்களும் தஞ்சைக் கோயிலுக்கு பெரும் தொண்டாற்றியுள்ளனர்.

கி.பி.985இல் முடிசூடிய இம்மன்னன் 1012இல் இராஜேந்திர சோழனுக்கு முடிசூடிவிட்டு 1014இல் மறைந்தான். இவன் எடுத்த தஞ்சை இராஜராஜீச்சரம் ஒரு வழிபாட்டுத்தலம் மட்டுமன்று. இது தமிழக வரலாறு, கலை, பண்பாடு ஆகியவை பொதிந்து திகழும் பெட்டகமும் ஆகும். ★

# இராஜராஜன் வெற்றிகள்



இராஜராஜன் பெற்ற வெற்றிகளில் காந்தளூர்ச் சாலையில் கலமறுத்தருளியது முதன்மையாகக் கூறப்படுகிறது. காந்தளூர்ச் சாலையென்பது திருவனந்தபுரத்தின் ஒரு பகுதியாக இப்பொழுது இருக்கிறது. காந்தளூர்ச் சாலைக்கலமறுத்தருளி என்பதற்கு அறிஞர்கள் பல பொருள் கூறுகின்றனர். பெரும்பாலானவர்கள் இங்கு சேர மன்னனுடைய பெரும் கப்பற்படை இருந்தது என்றும் அங்கிருந்த மரக்கலங்களை அழித்து இராஜராஜன் சேர மன்னனுடைய பலத்தை ஒடுக்கினான் என்றும் கூறுவர். காந்தளூர்ச் சாலை என்பது ஒரு படைக்கலக் கருவூலமாக இருந்திருக்க வேண்டும். அரும் படைக்கலங்கள் பலப்பல நிரம்பிக்கிடந்த அச்சாலையில் இருந்த படைக்கலங்களை அழித்தான் எனக் கொள்வதே பொருத்தமாக இருக்கும். அப்பொழுது சேர நாட்டை ஆண்டவன் பாஸ்கரரவிவர்மன் ஆவான். அவன் சிறந்த புகழாளனாகத் திகழ்ந்திருக்க வேண்டும். தான் சேர மன்னனிடம் அனுப்பிய ஒரு தூதுவனை அவமானப்படுத்தியதால் வெகுண்டெழுந்து அவன் மீது இராசராசன் பாய்ந்தான் என்பதைத்

– "தூதற்காப்
பண்டு பகலொன்றில் ஈரொன்பது சுரமுங்
கொண்டு மலைநாடு கொண்டோன்"

என்று விக்கிரம சோழன் உலாவும்.

– "சூழவும்
ஏறிப் பகலொன்றில் எச்சுரமும் போயுதகை
நூறித்தன் றூதனை நோக்கினோன்"

என்று குலோத்துங்கச் சோழன் உலாவும் குறிக்கின்றன.

மதகயத்தால் ஈரொன்பது சுரமு மட்டித்
துதகையைத் தீத்த வுரவோன்.

என ராஜராஜன் உலாவிலும் இந்நிகழ்ச்சி குறிக்கப்படுகிறது.

**கலன்கள்**

அன்று வழக்கிலிருந்த அடுகலன்களின் பெயர்கள்:– தளிகை, மண்டை, கெண்டி, தட்டம், குடம், ஒட்டு வட்டில், கலசம், படிக்கம், நெடுமடல், மானவட்டில், கறண்டிகைச் செப்பு, இலைச் செப்பு, தாரைத்தாள் வட்டில், ஈச்சொப்பிக்கை, இலைத்தட்டு, மூக்கு வட்டகை, கைவட்டகை, வட்டில், பிங்காளம், கச்சோளம், சட்டுவம், நெய்முட்டை, குறுமடல் ஆகியன ஆகும். இவற்றில் பெரும்பாலானவை பொன்னாலும், வெள்ளியாலும் செய்யப்பட்டவை.

"சதய நாள்விழா உதியர் மண்டலந்
தன்னில் வைத்தவன் தனியோர் மாவின்மேல்
உதய பானுவொத் துதகை வென்ற கோன்
ஒருரை வாரணம் பலகவர்ந்ததும்"

என்று கலிங்கத்துப் பரணி இந்நிகழ்ச்சியைக் குறிப்பிடுகிறது.

சேர நாட்டை இராஜராஜன் வெற்றி கண்டதற்கு அறிகுறியாக அவனுடைய கல்வெட்டுகள் அங்கு காணப்படுகின்றன. தன் தூதனுக்கு ஏற்பட்ட அவமானத்தைத் தடுக்க ஒரே பகலில் பதினெட்டு சுரங்களைக் கடந்து மலை நாட்டைக் கொண்டான் என்று கூறப்படுவதிலிருந்து இராஜராஜனது படை மிக விரைவாக முன்னேறிச் சேர நாட்டை எளிதில் பிடித்தது என்று கொள்ளலாம்.

'சாரல் மலையட்டுஞ் சேரன் மலைஞாட்டுத்
தாவடிக்குவட்டின் பாவடிச்சுவட்டுத்
தொடர்நெய்க் கனகம் துகளெழ நெடுநற்
கோபுரங் கோவை குலைய மாபெறும்
புரிசைவட்டம் பொடிபடப் புரிசைச்
சுதைகவின்படைத்த சூளிகை மாளிகை
உதைகைமுன் னொள்ளெரி கொளுவி
உதைகை வேந்தைக் கடல்புக
வெகுண்டு'–



என்று திருக்கோவிலூரிலுள்ள முதல் இராஜராஜசோழன் காலத்துக் கல்வெட்டு உதகை வெற்றியைப் பாடுகிறது.

**வேங்கை நாட்டை வெற்றி கொண்டது**

வேங்கை நாடு என்று குறிக்கப்படுவது வேங்கி நாடு என்னும் கீழைச் சாளுக்கியர்களுடைய நாடாகும். இந்நாடு சோழப் பேரரசின் வடபுறத்தில், கீழைக் கடற்கரை ஓரத்தில் உள்ள பகுதியாகும். இந்நாட்டை கி.பி. ஏழாம் நூற்றாண்டிலிருந்து கீழைச் சாளுக்கிய மன்னர்கள் ஆண்டு வந்தனர். இரண்டாம் புலிகேசியின் தம்பி குப்ஜ விஷ்ணுவர்த்தனன் என்பவனால் அவர்கள் குடி நிறுவப்பட்டது. முன்னூறு ஆண்டுகளுக்கு மேல் சீரும் சிறப்புமாக ஆண்ட கீழைச் சாளுக்கியர் குடி, இராஜராஜன் முடிசூடியபோது கலக்கமுற்றிருந்தது. அப்பகுதியைத் தானார்னவன் என்ற மன்னன் அப்பொழுது ஆண்டு வந்தான். தானார்னவனுக்குச் சக்திவர்மன், விமலாதித்தன் என்று இருமக்கள் இருந்தனர். ஜடாசோடபீமன் என்ற ஒரு குறுநில மன்னன் தானார்னவனைக் கொன்று வேங்கி மண்டலத்தைக் கைப்பற்றினான். தானார்னவனின் மக்கள் கலிங்கத்தில் தஞ்சம் புகுந்தனர். ஜடாசோடபீமன் விரைவில் கலிங்கத்தையும் கைப்பற்றினான். தானார்னவனின் மக்களாகிய சக்திவர்மனும், விமலாதித்தனும் சோழ நாட்டில் தஞ்சம் புகுந்தனர்.

சோழ நாட்டின் வடபகுதியில் நிலவிய இந்நிகழ்ச்சிகளால் சோழப் பேரரசுக்குத் தீங்கு விளையக்கூடும் என்று இராசராசன் உணர்ந்தான். சக்திவர்மனையும், விமலாதித்தனையும் அன்போடு வரவேற்று தன் அருகில் அமர்த்திக் கொண்டான். வேங்கி மீது படையெடுத்து கி.பி. 999இல் வெற்றி கண்டு சக்திவர்மனை வேங்கி அரசனாக முடிசூட்டினான். ஓரிரு ஆண்டுகளில் வேங்கி நாடு முழுவதையும் இராசராசனுடைய படைகள் கைப்பற்றி, சக்திவர்மனின் ஆட்சியை நிலை நிறுத்தின.

வேங்கி நாட்டின் பலத்தைப் பெருக்கி அதைத் தன் கீழ்வைத்திருப்பதால் சோழப் பேரரசுக்குப் பெரும் நன்மை ஏற்படும் என்று கருதி, இராசராசன் தன் இளைய மகள் குந்தவையை விமலாதித்தனுக்கு மணம் செய்து கொடுத்தான். விமலாதித்தனுக்கும் குந்தவைக்கும் பிறந்த மகவுக்கு இராசராசன் என்றே பெயரிட்டனர். இதிலிருந்து வேங்கி நாடு சுமார் நூறு ஆண்டுகளுக்கு மேல் சோழ ஆட்சியின் நிழலில் விளங்கி வந்தது. விமலாதித்தனுக்குக் குந்தவையிடம்

தோன்றிய இராசராசனின் மகனே, பின்னர் சோழ அரியணை ஏறிய முதற் குலோத்துங்கச் சோழனாவான். சக்திவர்மன் சுமார் பன்னிரண்டு ஆண்டுகள் ஆண்ட பிறகு, விமலாதித்தன் வேங்கியின் மன்னனானான்.

**கங்கப்பாடி வெற்றி**

மைசூர்ப் பகுதியை ஆண்ட கங்கர்கள் இராஷ்டிரகூட மன்னர்களின் சிற்றரசர்களாகத் திகழ்ந்தார்கள். அவர்களுடைய பலத்தினால் இராஷ்டிரகூட மன்னர்கள் சோழப் பேரரசின் வடபகுதியைத் தங்கள் ஆளுகைக்கு உட்படுத்தியிருந்தார்கள் என்று முன்னர் கூறினோம். எனவே கங்கர்களின் வலியை அடக்குவது இன்றியமையாதது என்று கண்ட இராசராசன் கங்கபாடியின் மீது படையெடுத்து அதைக் கைப்பற்றினான். கங்கபாடி முழுவதும் சோழர் ஆட்சியிலிணைந்தது. இதிலிருந்து சுமார் நூறாண்டுகள் வரை கங்கர்கள் சோழர்களுடைய சிற்றரசர்களாக வாழ்ந்தனர்.

**நுளம்பபாடி தடிகைபாடியும் கொண்டமை**

பெங்களூர், பெல்லாரி மாவட்டம், சேலம் மாவட்டத்தின் வடபகுதி, வடஆற்காடு மாவட்டத்தின் ஒரு பகுதி ஆகிய நிலப்பரப்பை நுளம்பர்கள் அக்காலத்தில் ஆண்டு வந்தனர். அவர்கள் கங்க அரசர்களின் சிற்றரசர்களாகத் திகழ்ந்தனர். கங்கர்களும் நுளம்பர்களும் இராஷ்டிரகூடர்களிடம் தொடர்பு கொண்டிருந்ததால் அவர்களுடைய நாட்டைக் கைப்பற்ற வேண்டியது அவசியமாயிற்று. எனவே நுளம்பபாடியும் இராசராசன் வசமாயிற்று. நுளம்பபாடியும் கங்கபாடியும் கொண்ட பொழுது தடிகை வழி என்ற தடிகைப் பாடியையும் இராசராசன் கைப்பற்றினான். இவையனைத்தும் மைசூர் ராஜ்யத்தின் பகுதிகளாம்.

**குடமலை நாடு கொண்டது**



தற்காலத்தில் குடகு என்றழைக்கப்படும் பகுதியே குடமலைநாடு என்ற பெயர் பூண்டிருந்தது. இப்பகுதியையும் இராஜராஜன் தனது ஆட்சியின் கீழ் கொண்டு வந்தான் வேங்கை நாடு. குடமலை நாடு, கங்க மண்டலம் முதலிய பகுதிகளைப் பிடிப்பதற்கு ஏற்பட்ட போர்களை முன்னின்று நடத்தியவன் மகாதண்டநாயகன் பஞ்சவன் மாராயன் என்பவன். இவன் இராஜராஜனுடைய அருமை மைந்தன் இராஜேந்திர சோழனே என்பது வரலாற்றாசிரியர்களுடைய கருத்து. மணிஜன் என்ற ஒருவனுக்கு சத்திரிய சிகாமணி கொங்காள்வான்' என்ற பட்டத்தைச் சூட்டிக் குடமலை நாட்டுப் பகுதியை ஆள இராஜராஜன் வழி செய்தான்.

**கொல்லம் கொண்டது**

கொல்லம் என்பது மலைநாட்டிலுள்ள ஒரு ஊராகும். இராஜராஜன் தண்டு போய் கொல்லம் நகரையும் கைப்பற்றினான் என்று அறிகிறோம். முடிசூடியவுடன் இராஜராஜன் காந்தளூர்ச்சாலையைக் கைப்பற்றினான் என்று கண்டோம். அப்போது விழிஞத்தின் மீதும் படையெடுத்து அதைக் கைப்பற்றினான். கொல்லத்தைக் கைப்பற்றியது முதற் படையெடுப்பின் போதல்ல. இது

## முதலாம் இராசராசன் காசு

இன்று தமிழ்நாட்டில் எந்தப் பகுதியிலும் ஒரு பழைய காசு கிடைக்கின்றதென்றால் அது இராசராசன் காசுதான். அதிகம் கிடைக்கும் செம்பாலான இக்காசுகளில் ஒருபுறம் மன்னன் ஒருவன் அமர்ந்த நிலையில் மலர் ஒன்றை முகர்வதுபோல இருக்கும். அதன் அருகே 'ராஜராஜ' என்று நாகரி எழுத்தில் எழுதியிருக்கும். மறுபுறம் மன்னன் நின்ற நிலையிலும், அருகே குத்துவிளக்குகளும் காணப்படும். பாண்டிய நாட்டில் புழக்கத்தில் இருந்த இவனது காசுகளில் மீனும், சேர நாட்டில் திருவடியும், சோழநாட்டில் புலியும் காணப்படும். இவனது பொற்காசுகள் ஐந்திற்கு ஒரு நவரத்தின மோதிரமும், ஒன்றிற்கு 1,556 வாழைப்பழங்களும் அன்று கிடைத்தன.



இராஜராஜ சோழன் காலத்து நாணயங்கள்

இரண்டாம் முறையாகப் படையெடுத்தபோது நிகழ்ந்தது என்று வரலாற்றாசிரியர்கள் கருதுகிறார்கள். முதலில் தோற்ற மலை நாட்டவர்கள் இடையிலே தலை தூக்கினர். ஆதலின் இரண்டாம் முறையும் இராஜராஜன் போர் முரசு கொட்ட வேண்டியதாயிற்று என்பதை இதிலிருந்து அறியலாம்.

**கலிங்கம் கைப்பற்றியது**

வேங்கி மண்டலத்தைக் கைப்பற்றி அதில் சக்தி வர்மனை முடிசூட்டிய போது கலிங்கத்தின் ஒரு பகுதியையும் இராஜராஜன் கைப்பற்றியிருக்க வேண்டும். வேங்கியை அப்போது ஆண்ட ஜடாசுடசோடன் கலிங்கத்தையும் கைப்பற்றியிருந்தானென்றும் இவனைத் தோற்படித்தே வேங்கியைக் கைப்பற்றிச் சக்திவர்மனுக்குக் கொடுத்தானென்றும் முன்னர்க் கூறினோம். இதிலிருந்து கலிங்கத்தின் ஒரு பகுதியையும் இராஜராஜனால் கைப்பற்றப்பட்டது என்பது தெளிவாகிறது.

**ஈழமண்டலம் அடிப்படுத்தது**

ஈழநாட்டை அப்போது மகிந்தன் என்பவன் ஆண்டு வந்தான். அவர் சேரனுடனும் பாண்டியனுடனும் சேர்ந்து சோழ அரசுக்குத் தொல்லை கொடுத்து வந்தான். ஆகவே இராஜராஜன் ஒரு படையை அனுப்பி ஈழத்திற்கு வடபகுதியை அடிப்படுத்தினான். சுமார் ஆயிரம் ஆண்டுகளாக ஈழத்தின் தலைநகரமாகத் திகழ்ந்த அனுராதபுரம் இப்போரினால் அழிந்தது. பொலனருவா என்னும் நகரம் சோழர்களின் ஆட்சிக்குட்பட்ட ஈழத்தின் தலைநகராக மாறியது. பொலனருவா 'ஜனநாத மங்கலம்' என்று பெயரிடப் பெற்றது. ஈழத்து வெற்றியைக் குறிக்க இராஜராஜன் அழகிய ஒரு கற்றளியைப் பொலனருவாவில் தோற்றுவித்தான். இராஜராஜபுரம் என்னும் 'மஹாத்தி' என்ற இடத்திலும் குமரன் என்ற சோழ அதிகாரி இராஜராஜேச்சுரம் என்ற கோயிலை எழுப்பினான்.



**இரட்டபாடி ஏழரையிலக்கம் எறிந்தது**

சுமார் கி.பி 972–இல் சோழ நாட்டின் மேலைப் பகுதிகளை ஆண்ட இராஷ்டிரகூடர்களைத் தோற்கடித்து மேற்குச் சாளுக்கிய வம்சம் நிறுவப்பட்டது. இராஷ்டிரகூடர் வசமிருந்த பகுதிகளெல்லாம் அப்பொழுது மேலைச் சாளுக்கியர் கையிலிருந்தன. மேலைச் சாளுக்கியர்களுள் சிறந்தவனான தைலபன் என்பவன் இறந்த பிறகுசத்யாச்ரயன் என்பான் சாளுக்கிய அரியணையில் ஏறினான். இராசராசன் சத்யாச்ரயனைத் தோற்கடித்து இரட்டபாடி ஏழரை இலக்கம் என்ற பகுதியினைக் கைப்பற்றினான். இப்போரை இராஜராஜனே முன்னின்று நடத்தினான் என்று அறிகிறோம். இராஜராஜன் பரிமீதமர்ந்து தனியொருவனாக சத்யாச்ரயனுடைய வெள்ளம் போன்ற படையைத் தடுத்து நிறுத்தினான். என்றும் அவனுடைய போர்களிறுகள் துங்கபத்திரைக்கரையில் எதிரிகளின் வரிசைக்குள் புகுந்து நர்த்தனமாடின என்றும், சாளுக்கிய தண்டநாயகன் கேசவன் கைப்பற்றப்பட்டான் என்றும் கரந்தைச் செப்பேடுகளிலிருந்து அறிகிறோம். அவ்வெற்றிக் களத்தில் நின்று இராஜராஜன் மண்ணைக்கடக்கத்தைக் கைப்பற்ற உறுதி பூண்டான் என்றும், அவ்வுறுதியை இராஜேந்திரன் நிறைவேற்றினான் என்றும் மற்றொரு செய்யுள் குறிப்பிடுகிறது. ஹோட்டூர் என்ற இடத்தில் உள்ள சத்யாச்ரயனுடைய கல்வெட்டிலிருந்து போரின் கொடுமையை அறியலாம். அக்கல்வெட்டில் சோழ குலத்தைச் சேர்ந்த இராசராசநித்ய விநோதன் என்பவனுடைய மகன் நூர்மடிச் சோழ ராஜேந்திர வித்யாதரன் என்பவன் சுமார் தொண்ணூறாயிரம் யானைகளுடன் படையெடுத்தான் என்றும், கையிலகப்பட்ட நாட்டைச் சீர்குலைத்து அடாத செயல்களைச் செய்தான் என்றும் குறிக்கப்படுகிறது. இப்போரில் தந்தையுடன் இராஜேந்திரனும் சேர்ந்து போரிட்டான் என்றும் போர் மிகவும் கடுமையாக இருந்தது என்றும் அறிகிறோம். இரட்டபாடி ஏழரை இலக்கம் சோழ மண்டலத்தோடு சேர்க்கப்பட்டது. இப்போரின் முடிவில்

**நவரத்தினங்கள்**

இராஜராஜன் நவரத்தினங்களாலான பல மோதிரங்களை அணிந்திருக்கிறான். அவற்றில் முதலிலே குறிக்கப்படும் அணியில் நவரத்தினங்கள் எவை என்பதைத் தெளிவாக குறித்திருக்கிறான். வயிரம், நீலம், முத்து, புஷ்பராகம், கோமேதகம், பவழம், மரகதம், வைடூரியம், மாணிக்கம் ஆகிய ஒன்பதும் நவரத்தினங்கள் என்று அறிகிறோம். அடுத்து குறிக்கப்படும் நவரத்தின மோதிரங்களைச் சுருக்கமாக 'நவரத்தினம் ஒன்பது' என்று கூறி முடித்து விடுகிறான். இதிலிருந்து தான் குறிப்பவைகளை எவ்வளவு தெளிவாகவும், குறிப்பாகவும் இராஜராஜன் எழுதியுள்ளான் என்பதை அறியலாம்.

துங்கபத்திரை ஆறு சோழப் பேரரசின் வட எல்லையாக அமைந்தது.

**முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரம் வென்றது**

தன்னுடைய ஆட்சியின் இறுதியில் முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரம் என்ற தீவுகளை இராசராசன் கைப்பற்றினான் என்று அறிகிறோம். காந்தளூர்ச்சாலையில் சேரர்களுடைய படைக்கலத்தை அழித்ததிலிருந்து தன்னுடைய கப்பற்படையைச் சீரமைத்துக் கடல் கடந்த தீவுகளையும் வெல்ல வழி வகுத்தான் என்பது இதிலிருந்து புலனாகிறது.

**செழியரைத் தேசுகொண்டது**

இராஜராஜன் முடிசூடியவுடன் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்தான் அப்போது அமரபுஜங்கன் என்பவன் பாண்டி நாட்டை ஆண்டு வந்தான். சுந்தரசோழன் காலத்தில் மதுரை கைப்பற்றப்பட்டது என்று கண்டோம். ஆனால் விரைவிலேயே அமரபுஜங்கன் என்ற பாண்டியன் முடிசூட்டிக் கொண்டான். அவனுக்குச் சேர மன்னன் பாஸ்கர ரவிவர்மனும், ஈழத்துப் படையும் உறுதுணையாக நின்றன. இராஜராஜன் மலைநாட்டில் காந்தளூர்ச் சாலையைக் கைப்பற்றியவுடன், பாண்டிய நாட்டின் மீது படையெடுத்து மதுரையையும் கைப்பற்றி அமரபுஜங்கனையும் தோற்கடித்தான் பாண்டி மண்டலத்துக்கு இராசராசப் பாண்டி நாடு என்ற பெயரைச் சூட்டினான்.



சோழ நாட்டைச் சுற்றியிருந்த பேரரசுகளையெல்லாம் ஒடுக்கிச் சோழப் பேரரசை நிலைநிறுத்தி, வடக்கே துங்கபத்திரையையும், கலிங்கத்தையும் எல்லையாக்கி, தெற்கே ஈழத்தை அகப்படுத்தி, கடல் கடந்த முந்நீர்ப் பழந்தீவுகளைக் கைப்பற்றி ஒரு மாபெரும் பேரரசை நிலை நிறுத்திய பெருமை இராஜராஜனுக்கே உரியது.

★ ★ ★

**இராஜராஜனின் மெய்க்கீர்த்தி**

திருமகள் போலப் பெருநிலச் செல்வியுந்
தனக்கே யுரிமை பூண்டமை மனக்கொளக்
காந்தளூர்ச் சாலை கலமறுத் தருவி
வேங்கை நாடுங் கங்க பாடியும்
நுளம்ப பாடியுங் குடமலை நாடுங்
கொல்லமுங் கலிங்கமும்
எண்டிசை புகழ்தர ஈழமண்டலமும்
இரட்டபாடி ஏழரை இலக்கமும்
திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்ட
தன்னெழில் வளரூழியுள்
எல்லா யாண்டும் தொழுதக விளங்கும்
யாண்டேய் செழியரைத் தேசுகொள்
கோராஜகேஸரிவர்மரான
ஸ்ரீ ராஜராஜ தேவர்.

# சோழநாடு

- குடவாயில் பாலசுப்ரமணியன்

**சோ**ழநாடு என்றும் சோழமண்டலம் என்றும் அழைக்கப்பெற்ற ஒரு பரந்த நாட்டின் தலைநகரமாக விளங்கிய ஊரே தஞ்சையாகும். தண்+செய் என்பதே தஞ்சையாயிற்று. குளிர்ந்த நிலப்பரப்பு என்பதே இதன் பொருள். காவிரி நதியின் புதுப்புனலால் வளம் பெற்ற ஊர் என்பதால் (தண்+செய்+ஊர்) தஞ்சாவூராயிற்று.

இவ்வூர் பற்றிய மிகத் தொன்மையான குறிப்புகள் திருச்சிராப்பள்ளி மலையுச்சியில் காணப்பெறும் பல்லவ மன்னன் சிம்மவிஷ்ணுவின் (கி.பி.555–590) கல்வெட்டிலும், திருநாவுக்கரசர் பாடிய திருவீழிமிழலை திருத்தாண்டகத்திலும் உள்ளன. நாவுக்கரசர் காலத்தில் (கி.பி.7ஆம் நூற்றாண்டு) இவ்வூரில் தஞ்சைத் தளிக்குளத்தார் கோயில் என்ற சிவாலயம் இருந்து சோழர் காலத்திற்குப் பின்பு அழிந்துள்ளது. பல்லவர்களின் கீழ்க் குறுநில மன்னர்களாய்த் திகழ்ந்த முத்தரையர்களின் தலைநகரமாகவும் இவ்வூர் இருந்துள்ளது. செந்தலை எனும் ஊரில் உள்ள கல்வெட்டுப் பாடல்களில் ''தஞ்சை செம்புல நாடு'' பற்றிய குறிப்புகள் காணப் பெறுகின்றன. பாண்டியன் மாறஞ்சடையனின் ஆடுதுறைக் கல்வெட்டு (கி.பி.711) ''தஞ்சை நாடு'' பற்றிக் குறிப்பிடுகிறது.

### வெற்றி மலர்

மாற்றரசர்களை வெற்றி கொண்டு தன் தலைநகருக்குத் திரும்பிய போது இராஜராஜன் செய்த முதற்பணி தன் தெய்வத்தின் முன்னிலையில் சென்று தங்கத்தினாலே பூக்களைச்செய்து தனது வெற்றிக்குக் காரணம் அப்பரம்பொருளே என்றும், அதுவே தன்னை வெற்றிக்கு ஊக்குவித்தது என்றும் இதயம் நெகிழ வணங்கி அதன் திருவடிகளில் பொற்பூக்களை அட்டித் தொழுதான். ''சத்தியாஸ்ரயனை எறிந்து எழுந்தருளி வந்து ஸ்ரீ பாதபுஷ்பமாக அட்டித் திருவடி தொழுதன திருபொற் பூ ஒன்று தாமரைச் செயல் திரு பொற் பூ ஒன்று'' எனக் குறிக்கிறான். இவ்வாறு கொடுக்கப்பட்ட பூக்களும் கணக்கெடுக்கப்பட்டு எடை எடுக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டன.



ஏறத்தாழ கி.பி.850இல் விஜயாலய சோழன் முத்தரைய மன்னன் ஒருவனை வென்று, தஞ்சையைக் கைப்பற்றி, சோழ நாட்டின் தலைநகரமாக ஆக்கினான். அப்போது நிசும்பசூதனி என்ற தேவி கோயில் ஒன்றினையும் தோற்றுவித்தான். விஜயாலய சோழனில் தொடங்கி ஆதித்தன், பராந்தகன், கண்டராதித்தன், அரிஞ்சயன், சுந்தரசோழன், ஆதித்த கரிகாலன், மதுராந்தக உத்தமசோழன், இராஜராஜன், இராஜேந்திரன்

(இவனது ஆட்சியின் முதல் 10 ஆண்டுகள்) ஆகிய பெருமன்னர்கள் காலம் வரை 176 ஆண்டுகள் தஞ்சை சோழப் பேரரசின் தலைநகரமாக விளங்கிற்று. அப்போது இப்பேரரசு வடக்கே துங்க பத்திரை ஆறு, வடகிழக்கே ஒரிஸ்சா மாநிலத்துக் கலிங்கம், கிழக்கே வங்கக்கடல், தெற்கே ஈழம், மேற்கே அரபிக் கடலில் உள்ள பன்னீராயிரம் எனும் இலட்சத்தீவு, மாலத்தீவு வரை விரிந்து பரவி இருந்தது. இவ்வளவு பரந்த ஒரு நிலப் பரப்பின் தலைநகரமாகத் தஞ்சை விளங்கியது என்பதும் இவ்வூரின் தனிச் சிறப்புகளில் ஒன்றாகும்.




சோழர் காலத்திற்குப் பிறகு கி.பி.1218இல் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் படையெடுப்பால் தஞ்சை நகரம் முழுமையாக அழிந்தது. சோழன் அரண்மனை தரைமட்டமாக இடிக்கப்பெற்றது. பின்னர் கி.பி.1311இல் டெல்லியிலிருந்து வந்த மாலிக்கபூரின் பெருஞ் சூறையாடலால் எஞ்சியிருந்த கோயில்களும் சிதைந்தழிந்தன. தஞ்சைப் பெரிய கோயிலும் இத்தாக்குதலுக்கு இலக்காகியது.

கி.பி.1343இல் பாண்டிய மன்னன் பெருமாள் ஸ்ரீ வல்லப தேவரின் தளபதி தொண்டைமானார் எனும் சாமந்த நாராயணன் தஞ்சையில் ஒரு புதிய ஊரை அமைத்து, திருமால் கோவிலும் எடுப்பித்தான். சாமந்த நாராயணச் சதுர்வேதி மங்கலம் எனும் அவ்வூரே இன்றைய தஞ்சையின் சாமந்தான்குளமும், யோகநரசிம்மர் கோயிலும் அடங்கிய கொண்டிராஜபாளையம் எனும் பகுதியாகும்.



பாண்டியர்களுக்குப் பின்பு விஜயநகர ஆட்சிக்குட்பட்ட தஞ்சாவூர் கி.பி.1535லிருந்து 1675 வரை நாயக்க மன்னர்களின் தலைநகரமாக விளங்கியது. 1675லிருந்து 1800 வரை மராட்டியர்களின் அரச பீடமாக விளங்கிய தஞ்சையை ஆங்கிலேயக் கிழக்கிந்திய கம்பெனியார் கைப்பற்றி ரெசிடென்ட் எனும் அலுவலர்களை நியமித்து ஆட்சி புரிந்தனர். 1947இல் சுதந்திரம் பெற்ற பின்பு இந்தியத் திருநாட்டின் தமிழ்நாட்டில் ஒரு பேரூராக விளங்கி வருகின்றது.

*('இராஜராஜேச்சரம்' எனும் நூலிலிருந்து...)*

# நில அளவை செய்த இராஜராஜ சோழன்

மாமன்னன் முதலாம் இராஜராஜ சோழனின் சாதனைகளுள் தலையாயதாகப் போற்றப்பெறுவது சோழ மண்டலம் முழுவதையும் அளந்தமையாகும். தன் ஆட்சிக்குட்பட்ட நிலப்பரப்பை உள்ளவாறு அளந்து பதிவுசெய்தாலன்றி, நில நிர்வாக அமைப்பு செம்மையாகச் செயல்பட முடியாது என்பதை உணர்ந்த அப்பேரரசன் தன் ஆட்சியின் 16ஆம் ஆண்டாகிய கி.பி.1001இல் சோழ மண்டலம் முழுவதையும் அளக்குமாறு ஆணையிட்டான். அப்பணி குரவன் உலகளந்தான் இராஜராஜமாராயன் தலைமையில் தொடங்கப்பெற்று இரண்டாண்டுகளில் நிறைவேறியது. அப்பணிக்கு பயன்படுத்தப்பெற்ற நில



தென்திருவாலங்காடு கோபுரத்தில் உள்ள உலகளந்த கோல் கல்வெட்டு



இராஜராஜனும் கருவூர்தேவரும் - ஓவியம்

அளவைக் கோல் பதினாறு சாண் நீளமுடையது எனப் பிற்காலச் சோழர் வரலாறு எழுதிய வை.சதாசிவப் பண்டாரத்தார் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார். அதற்கான சான்றுகள் ஏதும் அவரால் குறிப்பிடப்பெறவில்லை.

இராஜராஜ சோழனுக்குப் பின்பு முதலாம் குலோத்துங்கச் சோழன் மீண்டும் ஒருமுறை சோழநாடு முழுவதையும் அளந்து நில அளவை முறையை ஒழுங்குப்படுத்தினான். அப்பணி கி.பி.1086ஆம் ஆண்டில் தொடங்கப்பெற்று இரண்டாண்டுகளில் முடிவெய்தியது என்பதைக் கல்வெட்டுக்கள் எடுத்துக் கூறுகின்றன. திருவாலங்காட்டுக் கல்வெட்டின்படி உலகளந்த கோலின் அளவு 128.5 அங்குலம் உள்ளது என்பதும், தஞ்சையில் காணப்பெறும் குறியீடுகளின் முதல் இரண்டு குறியீடுகளுக்கிடையே உள்ள தூரம் 128.5 அங்குலமாகவும், இரண்டாம் குறியீட்டிற்கும் மூன்றாம் குறியீட்டிற்கும் இடையே உள்ள அளவு 29 அங்குலமாக இருப்பதும் அறியப்பட்டது.

●



கல்வெட்டு

# மக்களுக்கும் அதிகாரிகளுக்குமுள்ள தொடர்பு தூய்மையானதாக பொதுநலநோக்கோடு இருக்க வேண்டும்

**திருச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக புதிய கட்டடத்தை 08-09-2010 அன்று திறந்துவைத்து**

**மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை.**

திருச்சி நகரத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு புதிய கட்டடத் திறப்பு விழா நிகழ்ச்சி என்று குறிப்பிடப்பட்டாலும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் என்பதை விட, முதல் கட்டடம் தொடங்கப்படுகிறது – திறக்கப்படுகிறது என்று சொன்னால்தான் அது பொருத்தமாக இருக்கும் என்பதை



நீங்களெல்லாம் அறிவீர்கள். ஏனென்றால் நான் அறிந்து பல ஆண்டு காலமாக திருச்சி மாவட்டத்திற்கு ஆட்சித் தலைவர் கட்டடம் என்று ஒன்று இல்லை. அந்தக் கட்டடத்தை உருவாக்கி அதைத் திறந்து வைக்கின்ற இந்த வைபவத்தில் பல்லாயிரக்கணக்கிலே குழுமியிருக்கின்ற உங்களையெல்லாம் காணும்போது, நான் மெத்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் என்று ஒன்று இல்லாவிட்டாலும் கூட, அன்றைக்கு அந்த அலுவலகத்தினுடைய பணிகளை இங்குள்ள நம்முடைய நண்பர்கள் – பொது வாழ்வில் அக்கறை கொண்டுள்ள தோழர்கள் மக்களிடத்திலே தொடர்பு கொண்டு அவர்களுடைய தேவைகளுக்கு முதலிடம் கொடுத்து உழைத்து இந்த வட்டாரத்தினுடைய தேவைகளை அவ்வப்போது நிறைவேற்றியதன் மூலம் – அமைப்பு ரீதியாக நிறைவேற்றியதன் மூலமாக ஒரு கட்டடம் இல்லாத குறை தெரியாமலே செய்து வந்தார்கள்.

அதில் குறிப்பாக இன்றைக்கு மாலையிலே நான் திறந்து வைக்கப்போகின்ற அருமை நண்பர் அன்பில் தர்மலிங்கம் அவர்களுடைய சிலை இருக்கிறதே; அந்த

சிலைக்குரிய நண்பர் அன்பில் தர்மலிங்கம் அவர்கள் திருச்சி மாவட்டத்திலே மாவட்ட ஆட்சித் தலைவர் இல்லாத குறையை போக்கிக் கொண்டிருந்தவர். அந்தக் குறை தெரியாமல் பாடுபட்டுக் கொண்டிருந்தவர். எந்தப் பிரச்சினையானாலும் – திருச்சி நகரத்துப் பிரச்சினையானாலும், நகரத்தைச் சுற்றி இருக்கின்ற கிராமப்புரத்து மக்களுடைய பிரச்சினையானாலும், லால்குடியிலே உள்ள பிரச்சினையானாலும், அன்பில் கிராமத்திலே இருக்கின்ற பிரச்சினையானாலும், திருவரங்கத்திலே உருவாகிற பிரச்சினையானாலும், எந்தப் பிரச்சினையானாலும் அடிமட்டத்திலே இருக்கின்ற தோழர்கள், அவர்கள் எந்தக் கட்சிக்காரர்களாக இருந்தாலும் – அவர்கள் யாரைச் சந்தித்தால் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கும் என்று எதை எதிர்பார்க்கிறார்களோ, அப்படி அனைவராலும் எதிர்பார்க்கப்பட்ட நண்பர்களில் ஒருவராக, மக்கள் தொண்டர்களில் ஒருவராக விளங்கியவர் இன்று மாலையிலே நாம் விழா நடத்தி, சிலையை திறந்து வைக்கின்றோமே, அந்தச் சிலைக்குரிய அன்பில் தர்மலிங்கம் அவர்கள்.

இதை நான் ஏன் சொல்கிறேன் என்றால், மாவட்ட ஆட்சித் தலைவர் இருந்தாலும் இல்லாவிட்டாலும், மாவட்டத்திலே உருவாகின்ற பிரச்சினைகளை மக்களுடைய தேவைகளை உணர்ந்து, அறிந்து அதற்காக பாடுபடுகின்றவர்கள் இருந்தால் தனியாக ஒரு கட்டடம் தேவையில்லை, அமைப்புத் தேவையில்லை. இருந்தாலும்கூட இவையெல்லாம் சீர்பட, செம்மைப்பட, அமைப்பு ரீதியாக கட்டுப்பாட்டோடு நடைபெறுவதற்கு ஒரு அலுவலகம், அந்த அலுவலக அமைப்பை நேர்படுத்த ஒரு கட்டடம். அந்தக் கட்டடத்திற்குத் தேவையான நிதி உதவி, இவ்வளவும் இருந்தால்தான் மாவட்ட ஆட்சித் தலைவருடைய அலுவலகம் உருவாக முடியும்.

தம்பி ஸ்டாலின் இங்கே எடுத்துக்காட்டியதைப் போல, நான் எண்ணிப் பார்க்கிறேன். கடந்த காலத்திலே மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகமே இல்லாத மாவட்டங்கள் பல இருந்த குறையை நீக்கி, எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் ஆட்சித்தலைவர் அலுவலகம் இருந்தே ஆக வேண்டும். அதற்கு எத்தனை கோடி ரூபாய் செலவானாலும் பரவாயில்லை என்று திட்டமிட்டு அதை நிறைவேற்றி வருகின்ற அரசாகத்தான் இன்றைக்கு இருக்கின்ற தி.மு.கழக அரசு இருக்கிறது என்பதை நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

அரசு அல்லது அரசுக்குத் துணையாக இருக்கக் கூடிய அதிகாரிகள், அவர்கள் தங்கிப் பணியாற்றுகின்ற அலுவலகங்கள் இவைகளெல்லாம் சீராக, செம்மையாக இருந்தால்தான் ஆட்சி பரிபாலனம் முறையாக நடைபெற முடியும். இங்கே இத்தனை கோடி ரூபாயில் இவ்வளவு கட்டடங்களை கட்டியிருக்கிறோம் என்றெல்லாம் அடுக்கடுக்காக புள்ளி விவரங்களை இங்கே உரையாற்றியவர்கள் சொன்னார்கள். நானும் எங்கெங்கே என்னென்ன கட்டடங்கள் கட்டப்பட்டன என்ற பட்டியலை உங்களுக்குப் படித்துக்காட்ட முடியும். ஆனால் கட்டடங்கள் அல்ல முக்கியம், இங்கே ஒரு கட்டடத்தை திறந்து வைத்து விட்டோம், அதில் அமர்ந்து பணியாற்றுகின்ற அதிகாரிகளுக்கும் மக்களுக்கும் உள்ள தொடர்புதான் முக்கியம். அந்தத் தொடர்பு தூய்மையானதாக, அந்தத் தொடர்பு பொதுநல நோக்கம் கொண்டதாக இருந்திட வேண்டும் என்பதை, நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

ஏறத்தாழ 12 கோடியே 1 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் இந்தப் புதிய கட்டடம் கட்டப்பட்டிருக்கின்றது. 12 கோடியா, 13 கோடியா அல்லது 22 கோடியா என்பது அல்ல முக்கியம். அதில் பணியாற்றுகின்ற அலுவலர்கள், அதிகாரிகள், சிப்பந்திகளிலிருந்து மாவட்ட ஆட்சித்தலைவராக இருக்கின்றவர்கள் வரையில் மக்களிடத்திலே எந்த அளவிற்கு தொடர்பு கொண்டு அவர்களுக்கு மரியாதை தந்து, அவர்களோடு அன்பு காட்டி, இந்த அரசுக்கு நல்ல பெயரை வாங்கித் தருவது மாத்திரமல்ல, அவர்களும் நல்ல பெயர் வாங்கி, தாங்கள் ஆற்றுகின்ற கடமைகளால் நாடு வாழவும், நலிவு தீரவும், நன்மைகள் பெருகவும் பயன்படுமேயானால் கட்டடத் திறப்பு விழா அல்ல முக்கியம், இவைகளெல்லாம் ஒரு நகரத்தில் அல்லது ஒரு நாட்டின் சில பகுதிகளை அலங்கரிக்கக் கூடியதாக இருக்கலாம். ஆனால் அங்கே நடைபெறுகின்ற காரியங்கள்தான் முக்கியம். ஒரு மாவட்ட ஆட்சித் தலைவருடைய அலுவலகம் அழகாக இருக்கிறது என்று சொன்னால் மாத்திரம் போதாது. அருமையாக அங்கே பணி நடைபெறுகிறது என்கின்ற புகழைப் பெற வேண்டும். நிறைவேற்றிட வேண்டும். அப்படிப்பட்ட புகழையும், பெயரையும் பெற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாத்திரமல்ல, மாநிலத்தினுடைய ஆட்சித் தலைமையகத்திலே இருக்கின்ற அமைச்சர்களானாலும் செயலாளர்களானாலும் சரி, அவர்களுக்கு கீழே பணியாற்றுகின்ற அலுவலர்களானாலும் சரி, அவ்வளவு



பேரும் தங்களுடைய கடமையை உணர்ந்து நடத்தினால் தான் இந்தப் பணிகளில் சிறப்பதற்கு இப்படிப்பட்ட திட்டங்களை நிறைவேற்றுவதில் ஏற்படுகின்ற மகிழ்ச்சிக்கு அர்த்தம் உண்டு.

**மக்களுடைய நன்மையே முக்கியம்**

எந்தக் காரியத்திற்காக வட்டாட்சியர் அலுவலகம் ஆனாலும், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் ஆனாலும், மாவட்டத்திலே பல்வேறு திட்டங்களானாலும், பள்ளிகளானாலும், கல்லூரிகளானாலும், பல்கலைக் கழகங்களானாலும் – இவைகளெல்லாம் நிர்மாணிக்கப் படுகின்றன; இவைகளெல்லாம் திட்டங்கள் தீட்டி அதற்காக பணத்தை ஆயிரக்கணக்கில், இலட்சக்கணக்கில், கோடிக்கணக்கிலே ஒதுக்கி அதைச் செலவிட்டு அவைகளுக்கு திறப்பு விழா நடத்தி, "எங்கள் நகரத்தில் பார், பார்! எவ்வளவு பளபளப்பான வீதிகள்! எவ்வளவு பளபளப்பான மின்னுகின்ற கட்டடங்கள்!" என்று சொல்வதிலே இருக்கின்ற பெருமையைவிட, பட்டினி இல்லாத மக்கள், பசி இல்லாத மக்கள், பாடுபடுகின்ற மக்களுக்கு உணவு கிடைக்கின்ற அளவிலே திருப்தியாக வாழுகின்ற மக்கள் என்ற அந்த நிலைதான் ஒரு நாட்டில் எல்லோராலும் போற்றப்படக் கூடிய, பாராட்டப்படக்கூடிய நிலையாகும். அந்த நிலையை எய்திட தி.மு.கழக அரசு தொடர்ந்து பாடுபட்டு வருகின்றது. அதன் தொடர்ச்சியாகத்தான் இன்றைக்கு இங்கே இந்தக் கட்டடங்களுடைய திறப்பு விழாக்கள், திட்டங்களுடைய தொடக்க விழா என்றெல்லாம் நிறைவேறி இருக்கின்றது. மேலும் இந்தத் திட்டங்கள் தொடரும். தொடர்ந்தால் மாத்திரம் போதாது. அதை நடத்துகின்றவர்கள் நல்லவர்களாக, வல்லவர்களாக – அதே நேரத்தில் எந்தவிதமான ஊழலுக்கும், எந்தவிதமான தவறுக்கும் குற்றச்சாட்டுக்கும் உரியவர் அல்லாதவர்களாக இருக்கவேண்டும்.

மக்களுடைய நன்மை ஒன்றையே, மாநகரத்தினுடைய நலன் ஒன்றையே, நாட்டின் நன்மை ஒன்றையே, சமுதாயத்தின் நன்மை ஒன்றையே எண்ணுகிறவர் களாலேதான் எவ்வளவு கோடி செலவழித்தாலும் அதற்கான பயனை நாம் பெற முடியும் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

திருச்சி நகரம் எனக்குப் புதிதல்ல. காலையிலே பத்திரிகைகளிலேகூட, கருணாநிதி ஏதோ போட்டிக் கூட்டம் நடத்துவதற்காக வந்திருக்கிறார் என்று போடப்பட்டிருப்பதைப் பார்த்தேன். கருணாநிதிக்கும் திருச்சிக்கும் எவ்வளவு காலமாக தொடர்பு என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். அன்பில் தர்மலிங்கம் காலத்திற்கு முன்பிருந்தே திருச்சிக்கும் எனக்கும் தொடர்பு உண்டு. ஏன் அப்படிச் சொல்கிறேன் என்றால், அன்பிலுக்கு மூத்தவர் தோழர் பராங்குசம். பொன்மலையிலே தொழிற்சங்கத்தை நடத்திய பராங்குசத்திலே இருந்து அண்மையிலே மறைந்து போன தோழர் காமாட்சி வரையில் எனக்கு நன்றாகத் தெரியும்.

நான் தோழர் காமாட்சி அவர்களை பற்றிக் கூறும்போது எனக்கு ஒரு நினைவு; நானும், அன்பிலும், பராங்குசமும், தோழர் காமாட்சியும் ஒரு போராட்டத்திலே திருச்சி நகரத்தில் ஈடுபட்டு கைது செய்யப்பட்டோம்.



மறுநாள் காலையில் பத்திரிகையில், "கருணாநிதியுடன் ஒரு 'ஸ்த்ரீ' உட்பட 10 பேர் கைது " என்று செய்தி வந்தது. எனக்கு ஆச்சரியம். ஆச்சரியத்தை விட பயம். ஒரு 'ஸ்த்ரீ' உட்பட 10 பேர் கைது என்று போட்டிருக்கிறார்களே, நமக்குப் பரவாயில்லை, வீட்டிலே என்ன நினைப்பார்கள் என்று பயம். பிறகு யார் அந்த 'ஸ்த்ரீ' என்று விசாரித்தபோது, நிருபர் விளக்கினார். அவர்தான் காமாட்சி. அவருடைய பெயர் காமாட்சி சுந்தரம். எல்லோரும் அவரை காமாட்சி, காமாட்சி என்று அழைத்து அப்படியே பழகிவிட்டது. பத்திரிகை நிருபர்கள், காமாட்சி என்றதும், அவர் ஒரு பெண்தான் போலும் என்று, "ஒரு ஸ்த்ரீ உட்பட கருணாநிதியுடன் 10 பேர் கைது'' என்றெல்லாம் எழுதினார்கள். அப்படி எனக்கு பழக்கப்பட்ட ஊர் திருச்சி. இந்தத் திருச்சியிலே தான் என்னுடைய அரசியல் பொது வாழ்வு ஆரம்பமாயிற்று. இந்த திருச்சி மாவட்டத்திலேதான், குளித்தலை தொகுதியில் 1957இல் தி.மு.கழக வேட்பாளராக நின்று வெற்றி பெற்றேன். 57லே வெற்றி பெற்று இதுவரையில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல்களில் வெற்றிபெற்றுக் கொண்டே இருக்கிறேன். அது திருச்சியினுடைய வரலாறு. அந்த வரலாற்றில் என்னுடைய வரலாறும் இணைந்திருக்கிறது. இந்த திருச்சி மாவட்டத்திலேதான் கல்லக்குடி போராட்டத்திலே ஈடுபட்டு, 6 மாத காலம் கடுங்காவல் சிறை என்று திருச்சியிலே சிறைப்பட்டிருந்தேன்.

ஆனால், திருச்சிக்கு நான் இப்பொழுதுதான் முதல் முதலாக வருகிறேன் என்று ஒரு பத்திரிகைக்காரர் எழுதுகிறார் என்றால், அவர் திருச்சி நகரத்தினுடைய வரலாற்றையோ, அல்லது என்னுடைய வரலாற்றையோ ஒழுங்காகப் படிக்காதவர் என்பதைத் தவிர வேறு என்ன காரணம் இருக்க முடியும்? திருச்சிக்கு இன்று நான் வருவது 100ஆவது தடவையோ, 101 ஆவது தடவையோ! "வெற்றிகரமாக நூறாவது நாள்'' என்று சினிமாப் படங்களுக்கு விளம்பரம் செய்கிறார்களே, அதைப்போல, "வெற்றிகரமாக 100ஆவது கூட்டம்'' என்று சொல்லக்கூடிய அளவிற்கு நான் திருச்சிக்கு வந்துகொண்டே இருக்கின்றேன். ஆனால், திருச்சிக்கும் எனக்கும் உள்ள சொந்தத்தை, திருச்சிக்கும் எனக்கும் உள்ள உறவை, திருச்சிக்கும் எனக்கும் உள்ள நட்பை, திருச்சிக்கும் எனக்கும் உள்ள கடமையை உணராதவர்கள், அப்படி எழுதியிருக்கிறார்கள்.

**மேஜர் சரவணன் பெயரில் சாலை**

திருச்சியிலே என்னுடைய நண்பர்கள் எவ்வளவு பேர் என்பதை அறியாதவர்கள், திருச்சியிலே என்னை வாழ்த்தி வழியனுப்பி கல்லக்குடி போராட்டத்துக்கு அனுப்பி வைத்தவர்கள் யார் யார் என்பதை எல்லாம் அறியாதவர்கள் வேண்டுமானால் – மன்னிக்க வேண்டும், கல்லக்குடி என்றால் என்ன என்றே தெரியாதவர்கள் இதைச்

**"ஒரு மாவட்ட ஆட்சித் தலைவருடைய அலுவலகம் அழகாக இருக்கிறது என்று சொன்னால் மாத்திரம் போதாது. அருமையாக அங்கே பணி நடைபெறுகிறது என்கின்ற புகழைப் பெற வேண்டும். நிறைவேற்றிட வேண்டும். அப்படிப்பட்ட புகழையும், பெயரையும் பெற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாத்திரமல்ல, மாநிலத்தினுடைய ஆட்சித் தலைமையகத்திலே இருக்கின்ற அமைச்சர்களானாலும் செயலாளர்களானாலும் சரி, அவர்களுக்கு கீழே பணியாற்றுகின்ற அலுவலர்களானாலும் சரி, அவ்வளவு பேரும் தங்களுடைய கடமையை உணர்ந்து நடத்தினால் தான் இந்தப் பணிகளில் சிறப்பதற்கு இப்படிப்பட்ட திட்டங்களை நிறைவேற்றுவதில் ஏற்படுகின்ற மகிழ்ச்சிக்கு அர்த்தம் உண்டு."**

சொல்லலாம், இதை எழுதலாம். ஆனால் திருச்சிக்குப் பழக்கப்பட்டவன் என்கின்ற முறையிலே நான், திருச்சியின் தேவைகளை உணருகிறேன். என்னென்ன குறைகள் என்பதை அறிகிறேன். அந்தக் குறைகளையெல்லாம் ஈடுசெய்வதில், நிவர்த்தி செய்வதில் அக்கறை காட்டுகின்றேன். இன்னும் அக்கறை காட்டுவேன், காட்டிக் கொண்டே இருப்பேன்!

தம்பி சிவா இங்கே பேசும்போது சொன்னார், நான் வந்தவுடனேயே தங்கியிருக்கும் இடத்திலேயே சொன்னார் – "மேஜர் சரவணன் இந்த ஊர்க்காரர். கார்கில் போராட்டத்திலே உயிரிழந்தார். அவருடைய பெயரால் ஒரு சாலைக்குப் பெயர் வைக்க வேண்டும்" என்று சொன்னார். அதிலே எந்தவிதமான மறுப்பும் இல்லை. நான் அதற்கான அனுமதியை யாருக்குத் தரவேண்டுமோ அவர்களுக்குத் தருவேன். ஆனால், எந்தச் சாலை பிரச்சினை எதுவும் வராத அளவிற்கு உள்ள சாலையாக இருக்கிறதோ, அந்தச் சாலையை அவர்கள் எனக்கு தெரிவிப்பார்களேயானால், நகராட்சியிடமோ, மாநகராட்சி மன்றத் தலைவரிடத்திலோ, மற்றவர்களிடத்திலோ எடுத்துச் சொல்லி, "மேஜர் சரவணன் சாலை'' என்ற அந்தச் சாலை உருவாக என்னுடைய ஒத்துழைப்பைத் தருவேன் என்று கூறிக்கொண்டு – திருச்சி நகரத்தை ஒரு சோலையாக ஆக்கியவன் நான், ஒரு சாலைதானா முக்கியம். இதையா செய்ய மாட்டேன்? என்பதை எடுத்துக் கூறி, சோலைவனமாக திருச்சியும் மாறும்! சாலைக்குப் பெயரும் வரும்! என்பதை எடுத்துக்காட்டி, மாலையிலே சந்திப்போம் என்று கூறி, இந்த அளவில் என் உரையை நிறைவு செய்கிறேன்.

★ ★ ★

## சோழர் நாணயங்கள்

சோழர் ஆட்சிக் காலத்தில் வெளியிடப்பட்ட நாணயங்களில் மன்னனின் இயற்பெயரோ, சிறப்புப் பெயரோ பொறிக்கப்பட்டு நாடு முழுவதும் வழக்கில் இருந்ததைக் கல்வெட்டுகளும், செப்பேடுகளும் உறுதி செய்கின்றன. காசுகள் பொன்னாலும், வெள்ளியாலும் செம்பாலும் வெளியிடப்பட்டன. "இராசராசன் மாடை'', "இராசராசன் காசு" என்ற இருவகை காசுகள் வழக்கில் இருந்துள்ளது. மாடை என்பது ஒரு கழஞ்சு எடை கொண்டது. ஒரு மாடையின் மதிப்பு இரண்டு காசாகும். ஒரு காசு என்பது அரை கழஞ்சு எடை கொண்டதாகும்.

ஒரு மன்னனின் ஆட்சிக் கலத்தில் வெளியிடப்பட்டு அவன் ஆட்சியில் வழக்கில் இருந்த காசுகள் "அன்றாடு நற்காசு" என்று பெயர். அம்மன்னனுக்கு முன் ஆட்சி செய்த மன்னர்கள் வெளியிட்ட காசுகளும் வழக்கில் இருந்தன. அக்காசுகளுக்கு "பழங்காசு" என்று பெயர். இவற்றை "அன்றாடு நற்பழங்காசு" என்றும், "பழங்காசு நிறை இருபதைஞ்சு கழஞ்சு" என்று கல்வெட்டுகள் கூறுகின்றன. முதலாம் இராசராசனின் ஈழ வெற்றிக்குப் பிறகு "ஈழக்காசு'' என்னும் பொற்காசு சோழநாட்டில் வழக்கில் இருந்துள்ளது. அக்காசு அரைக்கழஞ்சு எடையும் மாடையைப் போன்று மாற்றம் உடையதாக இருந்தது. இக்காசுகளை "ஈழக்கழஞ்சு நாற்பதினால் பொன் 20 கழஞ்சு" என்று கல்வெட்டு குறிப்பிடுகின்றது.



# பெரியாரின் பொன்மொழிகள்

- மக்களுக்குள்ள சமுதாயக் கொடுமை தீரவேண்டியது எவ்வளவு அவசியமோ அதுபோலவே, மக்களுக்குள்ள பொருளாதாரக் கொடுமையும் தீரவேண்டியது அவசியமாகும்.

- செல்வம் (பணம்) தேட வேண்டும் என்று கருதி அதில் இறங்கியவனுடைய வேலை அவனது வாழ்நாள் முழுவதையும் கொள்ளை கொண்டு விடுகிறது. பணம் சம்பாதிப்பதில் போட்டி, பணக்காரன் என்று காட்டிக் கொள்வதில் போட்டி. அதற்கேற்ற புகழ் சம்பாதிப்பதில் போட்டி. இத்யாதி போட்டிகள் அவனது ஊக்கத்தையெல்லாம் கொள்ளை கொண்டு விடுகின்றன.

- வரவுக்கும் மேலாக வாழ்க்கைத்திட்டம் ஏற்படுத்திக் கொண்டு துன்பப்படுபவர்கள் நாணயமாய் வாழமுடியாமல் நாட்டுக்குத் தொல்லை விளைவிப்பவர்கள்.

- மனிதனுக்குச் சுயநலமும் புகழ் ஆசையும் இல்லாமல் இருக்காது என்பது ஓர் அளவுக்கு உண்மைதான். ஆனால் அதற்குச் சாதனம் செல்வம் சேர்ப்பது என்பது இயற்கையாய் ஏற்பட்டதல்ல.

- எல்லோருக்கும் போதுமான அளவு ஆகாரம் இருக்க வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்? ஒருவனும் தன் தேவைக்குமேல் எடுத்துக் கொள்ளாவிட்டால், எல்லோருக்கும் வேண்டியது கிடைக்கும்.

- மனிதனுடைய ஒழுக்கம், நாணயம், நேர்மை முதலானவை அவற்றை உடைய மனிதனுக்குப் பெருமை அளிப்பது மாத்திரமல்லாமல் அவனைச் சுற்றியுள்ள எல்லா மக்களுக்கும் நன்மையும் அளிக்கும்.

- ஒரு நாடு சுபிட்சத்துடன் வாழவேண்டுமானால், அந்நாட்டு மக்கள் ஒழுக்கமுள்ளவர்களாக இருத்தல் அவசியம்.

- உங்கள் மனத்தை நீங்கள் பரிசுத்தமாக வைத்துக்கொண்டு தைரியமாய்ப் பேச வேண்டும். பொதுவாழ்வில் மானத்தைப் பார்க்காதீர்கள். எவ்வளவு தூரம் உணர்ச்சியோடு, உறுதியோடு உங்கள் மனமறிய நீங்கள் குற்றமற்றவர்களாக நல்ல ஒழுக்கமுள்ள வர்களாக இருக்கிறீர்களோ அவ்வளவுக்கவ்வளவு துணிந்து தொண்டாற்ற முடியும்.

- பிறருக்கு ஒழுக்கத்தைப்பற்றிச் சொல்லுவதைவிடத் தன்னிடத்து அது எவ்வளவு இருக்கிறது என்று ஒவ்வொருவரும் நினைத்துப் பார்க்க வேண்டும்.

- மனிதனிடம் சுலபத்தில் ஒழுக்கத்தைப் புகுத்த வேண்டுமானால் மாணவப் பருவத்தில்தான் முடியும்.

- பிறருக்கு எவ்விதத் தொல்லையும் தராத வாழ்வே ஒழுக்கம். இது எல்லாவித பேத நிலையும் ஒழிந்த நிலையில் தான் வளர முடியும்.

- ஒழுக்கம் என்பது தனக்கும் அந்நியனுக்கும் துன்பம் தராமல் நடந்து கொள்ளுவதாகும்.

- மற்றவர்களிடமிருந்து நாம் எதை எதிர்பார்க்கிறோமோ, மற்றவர் நமக்கு என்ன செய்ய வேண்டும் என்று கருதுகிறோமோ, மற்றவர் நம்மிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்று நினைக்கிறோமோ, அப்படியே நாம் மற்றவர்களிடத்தில் நடந்து கொள்ள வேண்டும். அதுதான் ஒழுக்கம்.

- மனிதன் பெண்களைத் தனக்குரிய ஒரு சொத்தாகக் கருதுகிறானேயொழிய தன்னைப் போன்ற உணர்ச்சிக்கு அருகதையுள்ள ஓர் உயிர் என்று மதிப்பதில்லை.

- பெண்களைப் படிக்கக் கூடாது என்று ஏன் கட்டுப்பாடு ஏற்படுத்தினார்கள்? அவர்களுக்கு அறிவு இல்லை. ஆற்றல் இல்லை என்று சொல்லிச் சுதந்திரம் கொடாமல் அடிமையாக்குவதற்காகத்தான்.

- பெண்களே! வீரத் தாய்மார்களாக ஆக விருப்பப்படுங்கள். நீங்கள் மாறினால் உங்கள் கணவன்மார்களும் மற்ற ஆண்களும் மாற்றம் அடைவது மிகமிக எளிது. ஆண்கள் உங்களைத்தான் பிற்போக்காளிகள் என்று உங்கள் மீது பழிசுமத்தி வருகிறார்கள். அப்பழிச் சொல்லுக்கு ஆளாகாதீர்கள், எதிர்காலத்தில் “இவள் இன்னாருடைய மனைவி” என்று அழைக்கப்படாமல், “இவன் இன்னாருடைய கணவன்” என்று அழைக்கப்பட வேண்டும்.

- எந்த நாடும் முதலில் சமூகச் சீர்திருத்தமும், சமூக ஒற்றுமையும் பெறாமல் அரசியல் சுதந்திரம் பெற்றதாக யாரும் கூறமுடியாது.

- சமுதாயத் துறைக்குப் பாடுபடுவதுதான் உண்மையான அரசியல் தொண்டாகும்.

- தன்னலமற்ற பொதுத்தொண்டு செய்பவர்கள் பிரதிபலன் கருதாது உழைக்கக் கூடியவர்கள் எண்ணிக்கை நாட்டில் மென்மேலும் பெருகவேண்டும். அவர்களின் சீரிய குணங்கள் பொதுமக்களுக்கு வழிகாட்டியாக அமையவேண்டும். மனிதனாகப் பிறந்தவன் பொதுவாழ்வில் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பதற்கு அவர்களின் வாழ்க்கையே எடுத்துக்காட்டாக இருக்கும்.

- பிறப்பதும் சாவதும் இயற்கை. ஆனால் மக்கள் பாராட்டுதலுக்கு உகந்த வகையில் வாழ்தல் வேண்டும். மக்கள் ஒருவரைச் சும்மா போற்றமாட்டார்கள், நாம் மற்ற மக்களும் போற்றும்படியான வகையில் காரியமாற்ற வேண்டும்.

- ஒருவன், தான் விரும்பும், நலன்கள் அனைத்தும் பிறருக்கும் உண்டாகச் செய்வதுதான் நாகரிகம், அதற்கேற்ற வகையில் நமது உழைப்புப் பயன்பட வேண்டும்.

- அறம் என்றால், மக்களுக்கு தம்மாலான நல்லனவற்றைச் செய்வதுதான். அதுதான் உண்மையான தொண்டு. இதனை விடுத்து இந்த உலகத்தை விட்டு மோட்ச உலகம் செல்ல வேண்டும் என்று கருதியோ, மற்ற முட்டாள்தனமான காரியங்களுக்கோ தொண்டு செய்வதனால் உண்மையான இன்பம் கிட்டாது.

- எவன் ஒருவன் கடன் வாங்காமல் வரவுக்கேற்ற முறையில் செலவு செய்து வருகிறானோ அவன்தான் பிரபு ஆவான்.

- நல்ல குடும்பம் எனப்படுவது வரவுக்கு மிஞ்சிச் செலவு செய்யாமல் இருப்பதாகும். தனது வாழ்க்கைச் செலவை வரவுக்கு உட்பட்டே அமைத்துக்கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட குடும்பந்தான் கண்ணியமான குடும்பம்.

★ ★ ★

**தெரியுமா ?**

**கடந்த நான்கரை ஆண்டுகளில் தமிழக கூட்டுக் குடிநீர்த் திட்டங்களுக்கு ரூ.8 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.**






**பழமை**

பழங்கால ஆயுதங்களை மியூசியத்திலே நாம் பார்க்கிறோம். ஆனால் பார்வையிட்ட பின்னர் அவற்றை எடுத்துக்கொண்டு போர் புரியத் தொடங்குவதில்லை. அது போலத்தான் பழமைக் கருத்துகளை நாம் படிக்கலாம். ஆனால் கையாளக்கூடாது.

**பெண் கல்வி வேண்டும்!**

பெண் கல்வி நாட்டில் எந்த அளவுக்கு உயருகிறதோ, அந்த அளவு நாடு மேம்பாடு அடைகிறது என்று பொருள். படித்த ஆண்கள் தவறான வழியில் செல்லும்போது படிப்பு வாசனையற்ற பெண்கள் அவர்களைச் சரியான வழிக்குத் திருப்பி விடுகிறார்கள். இந்தக் குடும்ப அறிவை எந்தப் பள்ளியிலும் பயிலாமலே அவர்கள்கற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு முறையான கல்வி அறிவும் கிடைத்தால் சமுதாயம் உயர்வதற்கும் சந்ததிகள் வாழ்க்கை சீர்பெறுவதற்கும் மெத்தப் பயனுடையதாக இருக்கும்.

**எண்ணம்**

தாங்கள் பெறாததை மற்றவர்களாகிலும் பெறவேண்டும் என்ற எண்ணம்தான் தமிழ்நாட்டுக்குக் கிடைத்த பெரும் வாய்ப்பாக உள்ளது. நாம் பெற்றதைக்காட்டிலும் மற்றவர்கள் அதிகம் பெறவேண்டும் என்ற நினைப்பே சமுதாயம் வளர்ந்து செல்லக் காரணமாகவும் உள்ளது.

**நாட்டுப்பற்று**

பாதையிலே கிடக்கிற முள்ளை எடுத்து ஓரத்திலே போட்டாலும் அதுவும் நாட்டுப் பற்றால் செய்யும் செயலாகும்.

**அறிவும் ஆற்றலும்**

அறிவாலும், ஆற்றலாலும் ஆகாத காரியம் இல்லை; அறிவும்,ஆற்றலும் சேர்ந்து உழைத்தால் வெற்றி நிச்சயமாகக் கிடைக்கும்.

**பட்டதாரிகளின் பணி!**

ஏழை மக்களின் வாழ்வெனும் பாலைவனம் சோலை வனமாகிட வேண்டும்; வருங்காலச் சந்ததிகளாவது வளமெலாம் பெற்று வாழ்ந்திட வகை செய்திட வேண்டும். அதுதான் பட்டதாரிகளின் முதற்கடமையாகிறது.

**அன்புடைமை!**

அன்பு என்பது தர்க்கத்திற்குக் கட்டுப்படாது. அதனை அளக்கும் கோல் கிடையாது. நிறுத்திடும் துலாக்கோலும் இல்லை!

**அறிவு**

மனிதருக்குள் பேதத்தையும் அச்சத்தையும் மூட்டக்கூடிய வளர்க்கக்கூடிய எந்த ஏற்பாடுகளும் சுதந்திரத்தின் பரம விரோதிகளே! மோரைக் கடைந்து வெண்ணெய் எடுப்பதைப் போல அறிவை வளர்த்துக் கொண்டு பலன் பெறவேண்டும்.

**ஜாதிமுறை**

ஜாதிமுறை சடங்கு என்பனவெல்லாம் தந்திரமாக அமைக்கப்பட்ட பொருளாதாரச் சுரண்டல் திட்டமேயாகும். ஆகவே, ஜாதிமுறையை ஒழிப்பதும் சமதர்மத் திட்டம்தான்.

**பொது நன்மை**

நாட்டிலே ஒரு புது சமுதாய உணர்வை ஊக்குவிக்க, அரசு மேற்கொள்ளும் திட்டங்கள் மட்டும் போதாது. அவற்றினை நிறைவேற்றுவதில் அதிகாரிகள் காட்டும் திறமையும் அக்கறையும் மட்டும் போதாது. சமூகம் முழுவதும் எழுச்சிபெற்று, ஒவ்வொருவரும் தமது பங்கினைச் செலுத்தி, புது நிலையினை உருவாக்க வேண்டும் என்ற ஆர்வம் கொள்ள வேண்டும்.

**மனத்திலே**

மக்களை நல்லவர்களாக்க வேண்டுமானால் அவர்கள் மனத்திலே உள்ள மாசு, மத வெறி, சாதி, ஆணவம், சுயநலம், ஆதிக்க எண்ணம் அழிந்தாக வேண்டும்.

**மொழிப்பற்று**

மொழிப்பற்று இருப்பது எந்த வகையிலும் வருந்தத்தக்கதல்ல; போற்றத்தக்கது.

**கலை**

கலை ஓர் இன மக்களின் மனப்பண்பு, அவ்வின மக்களிடையே தோன்றும், தெளிவு, வீரம் ஆகியவற்றின் எடுத்துக்காட்டு. எனவே, கலை இன வளர்ச்சிக்கு ஏற்றபடி மாறியும் விரிந்தும் வரும் என்பதே நுண்ணறிவினரின் துணிவு.

**மூடநம்பிக்கை**

நாம் அறிவுத் துறையில் முன்னேற்றமடைந்தால்தான் நம்மிடம் உள்ள பழைய கருத்துகள் அகலும்; பாசி பிடித்துப் போன கண்மூடிப் பழக்கங்களும் தொலையும்; மூட நம்பிக்கைகள் முறியடிக்கப்படும்.

**பழக்கம்**

எந்தக் காலத்துப் பழக்கமானாலும் சரி, அது இந்தக் காலத்திற்குப் பொருந்துகிறதா, வாழ்க்கைக்குத் தேவையானதுதானா, அறிவுக்கு ஏற்றதா என்று தான் நாம் பின்பற்ற வேண்டுமே தவிர, அந்தக் காலத்துப் பழக்கம் என்பதற்காகவும் கண்ணை மூடிக்கொண்டு எதையும் அர்த்தமற்றும் பொருத்தமல்லாமலும் பின்பற்றக்கூடாது.

**மனித மனம்**

மனிதனின் மனம் எல்லா உலகங்களையும் விடப் பெரியது! அந்த இதயம் பண்புக்கேற்றப்படி பெரிதாகத்தக்கது, நினைப்புகேற்றபடி குறுகத்தக்கது. ஆகவே, அந்த மனித மனத்தைப் பெரிதாக்கி அதன்படி நடக்க வேண்டும்.

**மாற்றம்**

காலம் மாறக்கூடியது. மாறிக் கொண்டு தான் இருக்கும். காலத்திற்கேற்ப கருத்தில் மாற்றம் வேண்டும். மாறாத சமுதாயம் மறைந்துவிடும்.

**தமிழ்ப் பண்பாடு**

தமிழ்ப் பண்பாடு உலகத்தில் எல்லா மனிதர்களையும் சகோதரர்களாகவும் தோழர்களாகவும் ஏற்றுக் கொள்ளும். தன்னிடம் வருபவர்களை வாழ்த்தி வரவேற்கும்; எந்த மொழியையும் உரிய முறையில் மதிக்கும்; அறிவுச் செல்வம் உலகின் எந்தக் கோடியில் இருந்தாலும் தேடிச் சென்று எடுத்துவரும்.

**அறம் வெல்லும்**

வைரத்தைப் பட்டை தீட்டத் தீட்ட அதனுள் பல வண்ணங்கள் தெரிவது போல், திருக்குறளை ஆராய ஆராய அதில் பல புதிய புதிய அருமையான கருத்துகள் புலப்படும்.

அறம் வெல்லும்; நிச்சயமாக வெல்லும், அறம் ஆர்ப்பரிக்காது; அத்துமீறிய காரியத்துக்கு மக்களைச் செலுத்தாது. அதன் பயணம் துரிதமானதாக இராது; ஆனால் தூய்மையானதாக இருக்கும்.

நாம் என்பது வலுவும் பொலிவும் கொண்டதோர் தத்துவம், நாம் என்ற அந்தக் கூட்டுச் சக்தியைக் காட்டிடும் சொல்லினுள் பொதிந்துள்ள அரிய பாடம், ஜனநாயகப் பண்பாட்டுக்கே அடிப்படையாகிறது.

விஞ்ஞானக் கருவிகளின் துணைகொண்டு, மனித உழைப்பைப் பயன்படுத்துவோமேயானால், நல்ல முறையிலே நாட்டினுடைய வறுமை நீக்கப்படுவதற்குத் தக்க வாய்ப்புகள் இருக்கின்றன. ★

**தெரியுமா?**

**மாற்றுத்திறனாளிகள் இனிமேல் வேலைவாய்ப்பைப் புதுப்பிக்கத் தேவையில்லை; ஒரு முறை பதிவு செய்தாலே தொடர்ந்து அவர்கள் பதிவு மூப்பு நடைமுறையில் இருக்கும் என அரசு அறிவித்துள்ளது.**



பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் 15 அன்று சென்னை கோட்டூர்புரத்தில் தமிழக அரசு உருவாக்கியுள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்தைத் திறந்து வைத்துப் பேருரை ஆற்றிய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள், "பேறறிஞர் அண்ணா அவர்களின் நூற்றாண்டு நினைவாக இந்த பிரம்மாண்டமான நூலகத்தைத் திறந்து வைக்கும் இந்த நேரத்தில் பள்ளியில் பயிலும் ஒவ்வொரு சிறுவர், சிறுமியர்க்கும் வாரத்தில் பள்ளிக்கூடம் நடைபெறும் ஐந்து நாட்களிலும் வேகவைத்த முட்டைகள் வழங்கப்படும்" என்ற அறிவிப்பினை வெளியிட்டார்.

**ரூ.125 கோடியே 35 இலட்சம் கூடுதல் செலவில்**
**பள்ளி மாணவ-மாணவியருக்கு**
**இனி வாரம் ஐந்து நாட்கள்**
**சத்துணவுடன் முட்டை வழங்கப்படும்**

அந்த அறிவிப்பினை உடனடியாக நடைமுறைக்குக் கொண்டுவரும் நேரத்தில் தற்போது பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு வாரத்தில் மூன்று நாட்களில் சத்துணவுடன் முட்டைகள் வழங்கப்பட்டு வருவதை, இனி வாரத்தில் பள்ளிக்கூடம் நடைபெறும் ஐந்து நாட்களிலும் சத்துணவுடன் வேகவைத்த முட்டையை வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார். மேலும், முட்டை உண்ணாத மாணவ மாணவியர்க்கு வாரத்தில் ஐந்து நாட்களிலும் முட்டைக்குப் பதிலாக வாழைப்பழம் வழங்கிடவும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 17.9.2010 அன்று ஆணையிட்டுள்ளார். சத்துணவுடன் ஐந்து முட்டை வழங்கும் திட்டத்துடன் ஏற்கெனவே செவ்வாய்க்கிழமை 20 கிராம் வேகவைத்த கொண்டைக்கடலை அல்லது பச்சைப்பயறு, வெள்ளிக்கிழமை 20 கிராம் வேகவைத்த உருளைக் கிழங்கு ஆகியவைகளும் தொடர்ந்து வழங்கப்படும்.

இத்துடன், சத்துணவுக் கூடங்களில் காய்கறி, விறகு ஆகிய செலவுகளுக்காக ஒரு குழந்தைக்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த 44 பைசா என்பதும் உயர்த்தி வழங்கப்படும்.

இந்த ஆணையின் காரணமாக 57 இலட்சத்து 75 ஆயிரம் பள்ளி மாணவ, மாணவியர் பயன் பெறுவர்; அரசுக்கு ஆண்டுக்கு 125 கோடியே 35 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவாகும். ★

# தமிழகத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சி - தகவல் தொழில்நுட்பத் துறையால் மேம்பட்டுள்ளது

இந்திய தொழிலகக் கூட்டமைப்பு (சி.ஐ.ஐ.) தமிழ்நாடு, மத்திய அரசு மற்றும் பல்வேறு அமைப்புகளுடன் இணைந்து 'தகவல் மற்றும் தொலைத் தொடர்பு தொழில்நுட்ப மாநாடு – கனெக்ட் 2010' என்ற இரண்டு நாட்கள் மாநாட்டை (செப்டம்பர் 8–9) சென்னை நந்தம்பாக்கத்தில் உள்ள வர்த்தக மையத்தில் நடத்தியது.

இதன் நிறைவு விழாவில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு, இந்த ஆண்டுக்கான சிறந்த தொழில் முனைவோருக்கான விருதினை தொழிலதிபர் டி.சி.இ. நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி திரு. மாதவரெட்டிக்கும், வாழ்நாள் சாதனையாளர் விருதினை எஸ்.ஐ.எப்.ஐ. நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி திரு.ஆர்.ராமராஸுக்கும் வழங்கி ஆற்றிய உரை வருமாறு :

கொண்டிருக்கிறது. தகவல் தொழில்நுட்பத்துறை தமிழ்நாட்டை நவீன பொருளாதாரத்திற்கு மாற்றியுள்ளது. நிதி சேவை, சுகாதார முறைகளின் மேலாண்மை, கம்ப்யூட்டர் டிசைன், என்ஜினீயரிங் போன்ற குறிப்பிட்ட துறைகளில் தமிழ்நாடு மிகவும் வலுவாக உள்ளது.

1996–97ஆம் ஆண்டு மென்பொருள் ஏற்றுமதி மூலம் தமிழ்நாட்டிற்கு ரூ.161 கோடி வருவாய் கிடைத்தது. 2008–09ஆம் ஆண்டு இந்த வருவாய் ரூ.36 ஆயிரத்து 680 கோடியாக அதிகரித்து இருக்கிறது. சென்னையைத் தவிர, தமிழ்நாட்டில் உள்ள இரண்டாவது நிலை பெருநகரங்களிலும் மென்பொருள் ஏற்றுமதி திறன் மேம்பட்டுள்ளது. கோவையில் தகவல் தொழில்நுட்பத் துறை ஏற்றுமதி மூலம் 2004–05ஆம் ஆண்டில் ரூ.54 கோடி வருவாய் கிடைத்தது. இந்த வருவாய், 2008–09இல் ரூ.374 கோடியாக அதிகரித்தது.

தற்போது, தமிழ்நாட்டில் 1,700 மென்பொருள் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தை சார்ந்த பணிகளுக்கான

சமீபத்தில் எடுக்கப்பட்ட ஆய்வின்படி தகவல் தொழில்நுட்பத் துறையில் சீனா, இந்தியாவை அச்சுறுத்திக் கொண்டிருந்தது. அதன்பிறகு இந்தியாவின் வியக்கத்தக்க செயல்திறன் மூலம் சர்வதேச அரங்கில் இந்தியாவின் பெருமையை தகவல் தொழில்நுட்பத் துறை உயர்த்தி இருக்கிறது.

**மென்பொருள் ஏற்றுமதி**

தகவல் தொழில்நுட்பத்துறை வெற்றியின் காரணமாக இந்தியா பெரிய சக்தியாக உருவாகியிருக்கிறது. தகவல் தொழில்நுட்பத் துறையின் ஆண்டு அறிக்கைப்படி ஐ.டி. துறையில் பி.பி.ஓ. பணி மூலம் 2008–09ஆம் ஆண்டு 64 பில்லியன் டாலர் வருவாய் கிடைத்தது. தகவல் தொழில் நுட்பத்துறை வளர்ச்சி காரணமாக ஐ.டி.பி.பி.ஓ. பணி மூலம் 2009–10ஆம் ஆண்டு 73.1 பில்லியன் டாலர் வருவாய் ஈட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 2020ஆம் ஆண்டு இந்த வருவாய் 225 பில்லியன் டாலராக அதிகரிக்கும் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இரண்டு நாட்களுக்கு ஒரு தொழிற்சாலை வீதம் தொடங்கப்படுகிறது. அதனால், தகவல் தொழில்நுட்பத் துறையில் தமிழ்நாடு இந்தியாவின் தலைநகராகிக்

ஏற்றுமதியாளர்கள் உள்ளனர். வாஷிங்டனுக்கு வெளியே, உலக வங்கியின் கிளை சென்னையில்தான் இருக்கிறது.

சர்வதேச நிதி நிறுவனங்களின் கேந்திரமாகவும் சென்னை திகழ்கிறது. நிருவாகத்தில் மின்–ஆளுமை கொண்டு வந்ததில் தமிழ்நாடு முதலிடத்தில் இருக்கிறது.

09-09-2010 அன்று
சென்னை, நந்தம்பாக்கத்தில் நடைபெற்ற
தகவல் மற்றும் தொலைத் தொடர்பு
தொழில்நுட்ப மாநாட்டில்
மாண்புமிகு துணை முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
ஆற்றிய உரை.

தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் தகவல் தொழில்நுட்பத் துறையின் வேகமான வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு, நாட்டிலே முதன் முறையாக தகவல் தொழில்நுட்பக் கொள்கையை அறிவித்தார்.

சென்னை சிறுசேரியில் டைடல் தகவல் தொழில்நுட்பப் பூங்கா 2000ஆம் ஆண்டு




தொடங்கப்பட்டது. அதுபோல, கோவையில் டைடல் பூங்காவை முதல்வர் கலைஞர் அவர்கள் சமீபத்தில் திறந்து வைத்தார். தகவல் தொழில்நுட்பத் துறைக்கான சிறப்பு பொருளாதார மண்டலத்தை நாங்கள் பெரியளவில் மேம்படுத்தி வருகிறோம். 29 தகவல் தொழில்நுட்பத் துறை சிறப்பு பொருளாதார மண்டலத்தில், 19 செயல்படத் தொடங்கி விட்டன. இந்த சிறப்பு பொருளாதார மண்டலங்கள் மூலம் 46 ஆயிரம் பேருக்கு நேரடி வேலை கிடைத்துள்ளது.

**பன்னாட்டுத்தரத்தில் உள்கட்டமைப்பு வசதிகள்**

சிறப்பு பொருளாதார மண்டலங்களுக்கான சலுகையை நேரடி வரிவிதிப்பு மூலம் மத்திய அரசு திரும்பப்பெற திட்டமிட்டது. இதுகுறித்து முதல்வர் கலைஞர் அவர்கள் மத்திய அரசை வலியுறுத்தியதால் சிறப்பு பொருளாதார மண்டலங்களுக்கான சலுகை காலம் நீட்டிக்கப்பட்டு உள்ளது. இந்த வாய்ப்பை பயன்படுத்தி, சிறப்பு பொருளாதார மண்டலத்தில் திட்டங்களை வேகமாக செயல்படுத்தி முடிப்பார்கள் என்று நம்புகிறேன். தகவல் தொழில்நுட்பத்துறையால் மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சி மேம்பட்டுள்ளது.

வளர்ச்சி என்பது வரவேற்கக்கூடிய ஒன்றுதான். உள்கட்டமைப்பு வசதிகளை செய்து கொடுப்பதில் உள்ள சிரமங்களை நான் அறிவேன். இருந்தாலும் தமிழக அரசு, சர்வதேச தரத்தில் உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கித் தரும் என்று நான் உறுதி அளிக்கின்றேன்.

தமிழ்நாட்டில், கிரீன் பீல்டு ஏர்போர்ட் ஏரோஸ்பேஸ் பார்க், நிதி நகரம், விளையாட்டு நகரம், வெளிவட்ட சாலை, பறக்கும் சாலை, மெட்ரோ ரெயில் திட்டம் போன்றவை சென்னையை உலகத் தரம் வாய்ந்த நகராக உருவாக்கும். கவிஞர் கணியன்பூங்குன்றனார் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று பாடியது போல, தமிழ்நாட்டில் பல்வேறு கலாச்சாரம், மதத்தை சேர்ந்த மக்கள் ஒன்றாக வேலை பார்ப்பதுடன், ஒற்றுமையாக அமைதியாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இந்த உணர்வை இந்த மாநாடு மேலும் அதிகரிக்கும் என்று நம்புகிறேன். ★

**தெரியுமா ?**

**10ஆம் வகுப்பு முதல் முதுகலைப் பொறியியல் வரை படித்த ஒரு இலட்சம் இளைஞர்களுக்குப் பயிற்சி அளித்து வேலைவாய்ப்பு வழங்கும் புதிய திட்டத்திற்கு 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

# பதநீர் இறக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள 32,000 தொழிலாளர்கள் பயன் அடைய புதிய திட்டம்

மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் அறிமுகம் செய்தார்



பதநீரில் கால்சியம், பாஸ்பரஸ், இரும்புச் சத்து போன்றவைகளும், வைட்டமின்களும் அடங்கியுள்ளதால் இயற்கையான ஊட்டச் சத்து நிறைந்த உணவாகக் கருதப்படுகிறது. பதநீர் அருந்துவதால் உடலில் உள்ள எலும்புகள் வலுவடைகின்றன; பற்கள் உறுதிப் படுகின்றன; உடல் வெப்பத்தைத் தணிக்கிறது; அம்மை நோயும் கண்நோயும் தடுக்கப்படுகின்றன; வயிற்றுப்புண் மற்றும் வயிற்றெரிச்சல் குறைகிறது; இத்தகைய சிறப்பு வாய்ந்த பதநீர் தற்பொழுது பாலிதீன் உறையில் அடைத்து காலை முதல் மாலை வரை விற்பனை செய்யப்படுகிறது. அதன்பின், பாதுகாத்து வைக்க முடியாமல் பதநீர் வீணாகிறது.

இயற்கையான சத்து மிகுந்த இந்த பதநீரைப் பல நாள்களுக்கு, ஏறத்தாழ 40 நாள்கள் வரை கெடாமல் பாதுகாப்புடன் வைத்துப் பருகுவதற்கு ஏற்ப, பதப்படுத்தி அடைக்கப்பட்டுள்ள டெட்ரா பேக் முறையை மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிமுகம் செய்தார்.

மேலும், பதநீரில் இருந்து தயாரிக்கப்படும் பனங்கற்கண்டு மிட்டாய், பொடி செய்து நவீன முறையில் பொட்டலம் செய்யப்பட்டுள்ள பனைவெல்லம் ஆகியவற்றையும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 3.9.2010 அன்று அறிமுகப்படுத்தினார்.

பதநீரும் பிற பொருள்களும் இம்முறையில் விற்பனை செய்யப்படுவதன் மூலம் தமிழகம் முழுவதிலும் பதநீர் இறக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள ஏறத்தாழ 32 ஆயிரம் தொழிலாளர்களின் குடும்பங்கள் கூடுதல் வருவாய் பெற்றுப் பயனடைவதற்கு வழிவகுக்கும். இப்புதிய திட்டம் பதநீர்ப் பருவம் தொடங்கும், வரும் நவம்பர் மாதம் முதல் விரிவுபடுத்தப்படும்.

## நவீன சாதனங்களுடன் 3 ஆயிரம் தொழிலாளர்களுக்கு பனை மரம் ஏறும் தொழிலில் பயிற்சி!

மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் அறிவிப்பு!

பனை மரம் ஏறி பதநீர் இறக்கும் தொழிலில் ஈடுபடும் தொழிலாளர் எண்ணிக்கை குறைந்து வருவதால், இத்தொழில் வளர்ச்சியைக் கருதியும், இத்தொழிலில் ஈடுபட்டு வரும் தொழிலாளர்களுடைய குடும்பங்களின் நலன் கருதியும் பனை மரங்கள் மிகுந்துள்ள பகுதிகளில் கோவையிலுள்ள வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் உதவியோடு நவீன தொழில்நுட்பக் கருவிகளைப் பயன்படுத்தி எளிதாகவும், விரைவாகவும், பாதுகாப்பான முறையிலும் பனை மரம் ஏறி தொழில் செய்திட 3 ஆயிரம் தொழிலாளர்களுக்கு இலவசமாகப் பயிற்சிகள் அளிக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 3.9.2010 அன்று அறிவித்துள்ளார். ★

# 'ஆன்லைன்' மூலமாக வேலைவாய்ப்புப் பதிவு வசதி அறிமுகம்

தமிழகத்திலுள்ள வேலைவாய்ப்பு அலுவலகங்களில் படிப்படியாக கணினிமயமாக்கல் பணி நிறைவேற்றப்பட்டது. வேலைவாய்ப்பு அலுவலகங்களின் முக்கிய பணியான பதிவு செய்தல், புதுப்பித்தல் மற்றும் வேலையளிப்பவருக்கு பட்டியல் அனுப்புதல் போன்ற பணிகள் அனைத்தும் கணினி வழியே மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனால் பதிவுதாரர்களுக்கும், மாணவர்களுக்கும் வேலைவாய்ப்பக சேவைகள் விரைவாக அளிக்கப்பட்டு வருகிறது.



இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப வேலைவாய்ப்பகத்தின் சேவைகளை ஒளிவு மறைவற்ற வகையிலும், துரிதமாகவும், குறைபாடற்ற வகையிலும் அளிக்கும் வண்ணம் அனைத்து வேலைவாய்ப்பு அலுவலகங்களும் வலைப்பின்னல் வாயிலாக ஒருங்கிணைக்க தமிழக அரசால் ரூ.5.02 கோடி அளிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து இப்பணிகள் எல்காட் நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டு அந்நிறுவனத்தின் மூலம் M/s. எமர்ஜீஸ் நிறுவனத்திடம் புதிய மென்பொருள் உருவாக்கும் பணி வழங்கப்பட்டது. தற்போது இப்பணி "பிராஜெக்ட் எம்பவர்'' (Project eMPOWER) எனப் பெயரிடப்பட்டு வேலைவாய்ப்பக அலுவலகங்களுக்கான புதிய மென்பொருளும், இணையதளமும் உருவாக்கப்பட்டுள்ளது.

www.tnvelaivaaippu.gov.in என்கிற இப்புதிய இணையதளத்தினை மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 15.9.2010 அன்று தொடங்கி

வைத்தார். இந்நிகழ்ச்சிக்கு மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் தலைமை வகித்தார்.

வேலைவாய்ப்பகங்களின் இப்புதிய இணைய தளத்தின் மூலம் முதற்கட்டமாக பதிவுதாரர்கள் அனைவரும் ஆன்லைன் மூலம் நேரிடையாக பதிந்து கொள்ளலாம். இனி புதியதாக பதிவு செய்ய வேலைவாய்ப்பு அலுவல கங்களை நேரில் அணுக தேவையில்லை. மேலும் பதிவு மட்டுமின்றி ஆன்லைன் மூலம் தங்களது பதிவினை புதுப்பித்துக் கொள்ளலாம். இதன்மூலம் வேலைவாய்ப்பு அலுவலகங் களுக்கு நேரிடையாக வருகை புரிவதனால் ஏற்படும் போக்குவரத்துச் செலவு மற்றும் இதர செலவுகள் பதிவுதாரர்களுக்கு தவிர்க்கப்படும்.

**வேலைவாய்ப்பகங்களின் இப்புதிய இணைய தளத்தின் மூலம் முதற்கட்டமாக பதிவுதாரர்கள் அனைவரும் ஆன்லைன் மூலம் நேரிடையாக பதிந்து கொள்ளலாம். இனி புதியதாக பதிவு செய்ய வேலைவாய்ப்பு அலுவலகங்களை நேரில் அணுக தேவையில்லை. மேலும் பதிவு மட்டுமின்றி ஆன்லைன் மூலம் தங்களது பதிவினை புதுப்பித்துக் கொள்ளலாம். இதன்மூலம் வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு நேரிடையாக வருகை புரிவதனால் ஏற்படும் போக்குவரத்துச் செலவு மற்றும் இதர செலவுகள் பதிவுதாரர்களுக்கு தவிர்க்கப்படும்.**

இவ்விணைய தளத்தில் சுமார் 65 இலட்சம் வேலைவாய்ப்பக பதிவு தாரர்களின் விவரங்கள் அளிக்கப்படும். இவ்விவரங்களை அனைத்து பதிவுதாரர்களும் பார்வையிட்டு தங்களது பதிவு விவரங்களை சரிபார்த்துக் கொள்ள வேண்டும். இணையதளத்தில் பதிவுதாரர்களின் விவரங்களில் ஏதேனும் மாறுபாடு இருப்பின் அதனை உரிய சான்றிதழ்களுடன் வேலைவாய்ப்பகத்தை நேரில் அணுகி சரிபார்த்துக் கொள்ளலாம். இவ்வாறு பதிவு விவரங்களை சரிபார்த்தல் பணிக்கென பதிவுதாரர்களுக்கு மூன்று மாத கால அவகாசம் அதாவது 15.9.2010 முதல் 14.1.2011 வரை அளிக்கப்படுகின்றது. இதையடுத்து இரண்டாவது கட்டமாக, வேலையளிப்பவர்களுக்கு பட்டியல் அனுப்பும் பணி 15.1.2011க்கு பிறகு மேற்கொள்ளப்படும்.

இப்புதிய இணையதளத்தின் சிறப்பு அம்சங்களாக பதிவுதாரர்கள் அனைவரும் ஆன்லைன் மூலம் பதிவு செய்து கொள்ளவும் மற்றும் புதுப்பித்துக் கொள்ளும் வகையிலும் எளிமையான முறையில் மென்பொருள் வடிவமைக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி இரண்டாம் கட்டமாக வேலையளிப் பவருக்கு இணையதளம் வழியே பட்டியல் அனுப்பும் வகையில் மென்பொருள் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் வேலைவாய்ப்பக பதிவுதாரர்கள் தனியார் துறையில் பணியமர்த்தம் பெற உதவிடப் பதிவு தாரர்களின் விவரங்களை பார்வையிடும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை முதன்மைச் செயலாளர் திரு.த.பிரபாகர் ராவ், இ.ஆ.ப., தொழிலாளர் ஆணையர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., தகவல் தொழில்நுட்பத் துறை முதன்மைச் செயலாளர் திரு.பி.டபிள்யு.சி.டேவிதார்,இ.ஆ.ப, எல்காட் மேலாண்மை இயக்குநர் திரு. கே.சந்தோஷ்பாபு, இ.ஆ.ப., வேலைவாய்ப்புத் துறை ஆணையர்திரு.ஆ.சு.ஜீவரத்தினம், இ.ஆ.ப., வேலை வாய்ப்புத்துறை மண்டல துணை இயக்குநர் திருமதி. அனுசியா ஆகியோர் உடன் இருந்தனர்.

★ ★ ★

**தெரியுமா?**

**தமிழகத்தில் நியாயவிலைக் கடைகளின் மூலம் அத்தியாவசிய உணவுப் பொருட்களைப் பெற்று ஒரு கோடியே 96 இலட்சத்து 19 ஆயிரத்து 727 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் பயனடைந்து வருகிறார்கள்.**

# அரசு வேலைவாய்ப்பில்

# தமிழ் வழியில் படித்தவர்களுக்கு

# 20 சதவீதம் இடஒதுக்கீடு!

2500 ஆண்டுகள் பழமையான தமிழ் மொழி செம்மொழிக்கான அனைத்து தகுதிகளையும்



பெற்றுள்ளது. மத்திய அரசு 2004ஆம் ஆண்டு அக்டோபர் 12ஆம் தேதி தமிழைச் செம்மொழியாக அறிவித்தது.

தமிழைச் செம்மொழியாக அறிவித்ததை கொண்டாடும் வகையில் தமிழக அரசு கடந்த ஜூன் மாதம் 23ஆம் தேதி முதல் 27ஆம் தேதி வரை உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாட்டை கோயம்புத்தூரில் நடத்தியது. உலகம் முழுவதும் உள்ள சுமார் 50 நாடுகளைச் சேர்ந்த தமிழ் அறிஞர்கள் இந்த மாநாட்டில் கலந்து கொண்டு தமிழ் மொழியின் செம்மை, இலக்கியம், இலக்கணம் போன்றவை குறித்து ஆய்வறிக்கைகள் சமர்ப்பித்தனர்.

மாநாட்டின் நிறைவு விழாவான 27ஆம் தேதி நிறைவேற்றப்பட்ட பல்வேறு தீர்மானங்களில் மாநில அரசின் வேலைவாய்ப்புகளில் தமிழில் படித்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்பதும் ஒன்று.

மாநில அரசின் நிருவாகம் ஒளிவுமறைவின்றி வெளிப்படையாக நடைபெறவும், சாதாரண மக்களும் அறிந்து கொள்ள வசதியாக தமிழில் இருக்க வேண்டும் என்பதற்காகவும் புதிய சட்டம் இயற்றப்படுகிறது. இந்திய அரசியலமைப்பு சட்டத்துக்கும், மற்ற சட்டங்களுக்கும் உட்பட்டு இது உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழ் வழியில் படித்தவர்களுக்கு மத்திய அரசு வேலையிலோ, மற்ற மாநில அரசுகளின் வேலையிலோ, தனியார் துறையிலோ மிகக் குறைவான வாய்ப்புகளே உள்ளன. ஆகையால் மாநில அரசுப் பணிகளில் அவர்களுக்கு முன்னுரிமை தேவைப்படுகிறது.

எனவே, தமிழக அரசு அந்தத் தீர்மானத்தை நிறைவேற்றும் வகையில் தமிழில் படிப்பவர்களுக்கு முன்னுரிமை அளிக்க ஆய்வு செய்தது. உண்மையில் தமிழ்நாட்டில் உள்ள பெரும்பாலான பள்ளிகள் மற்றும் கல்லூரி பாடங்கள் தமிழ் வழியிலேயே நடத்தப்படுகின்றன. எனவே, மாநில அரசின் கீழ் உள்ள காலி பணியிடங்களை நேரடியாக நிரப்பும் போது அதில் 20 சதவீதம் தமிழ் வழியில் படித்தவர்களுக்கு ஒதுக்க வேண்டும். இந்த காரணத்திற்காக தமிழக அரசு இந்தப் புதிய சட்டத்தை கொண்டுவர முடிவு செய்துள்ளது.

இந்த அவசரச் சட்டம் இந்த முடிவுக்கு செயல்வடிவம் கொடுக்கிறது.

★

**தெரியுமா?**

**நபார்டு திட்டத்தின் மூலம் 420 அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு ரூ.24 கோடி செலவில் மேஜை, நாற்காலிகள் வாங்கப்படுகிறது.**



# பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் சலுகைகளைப் பெற ஆண்டு வருமான வரம்பு உயர்வு!!

தமிழக அரசின் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத் துறையின் கீழ், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபின மக்களுக்கு இலவச வீட்டுமனைகள், தையல் இயந்திரங்கள், சலவைப் பெட்டிகள் போன்றவற்றை வழங்கும் திட்டங்களின் கீழ் பயனாளிகள் பயன் பெறுவதற்கான ஆண்டு வருமான வரம்பு 12 ஆயிரம் ரூபாய் என்றிருந்ததை, 2000ஆம் ஆண்டில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கிராமப்புரங்களில் 16 ஆயிரம் ரூபாய் எனவும், நகர்ப்புரங்களில் 24 ஆயிரம் ரூபாய் எனவும் உயர்த்தி ஆணையிட்டார். அதன்படி, பயனாளிகளுக்கு வீட்டுமனைகளும், தையல் இயந்திரங்களும், சலவைப் பெட்டிகளும் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ், அதிக எண்ணிக்கையில் பயனாளிகள் பயன்பெறக் கூடிய வகையில், இந்த வருமான உச்சவரம்பினை மேலும் உயர்த்திட முடிவு செய்து, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை மூலம் தமிழக அரசு இலவசமாக வழங்கிடும் வீட்டுமனைகள், தையல் இயந்திரங்கள், சலவைப் பெட்டிகள் போன்றவற்றைப் பெறுவதற்குப் பயனாளிகளின் ஆண்டு வருமான வரம்பு கிராமப் புரங்களில் தற்போதுள்ள 16 ஆயிரம் ரூபாய் என்பதை 40 ஆயிரம் ரூபாய் எனவும், நகர்ப் புரங்களில் தற்போதுள்ள 24 ஆயிரம் ரூபாய் என்பதை 60 ஆயிரம் ரூபாய் எனவும் உயர்த்தி மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

★ ★ ★

### கேரளாந்தகன்

கேரள மன்னனை வென்று சிறப்புப் பெற்றமையால் இராசராசன் 'கேரளாந்தகன்' எனச் சிறப்புப் பட்டம் சூடிக்கொண்டான். கேரளன் என்பது சேரனையும், அந்தகன் என்பது இயமனையும் குறிப்பதால் சேரனுக்கு இயமன் போன்று விளங்குகிறான் எனும் பொருளில் இப்பெயரினைச் சூடிக் கொண்டான். சோழ நாட்டின் வளநாடு ஒன்றுக்குக் கேரளாந்தக வளநாடு என்றும், ஒர் ஊருக்குக் 'கேரளாந்தகச் சதுர்வேதி மங்கலம்'என்றும், ஒரு படைக்குக் 'கேரளாந்தகத் தெரிந்த பரிவராத்தார்' என்றும் பெயரிட்டான். தான் சிறப்பாகச் சூடிய கேரளாந்தகன் என்ற பெயரினையே தஞ்சைப் பெரிய கோயிலின் முதற் கோபுரத்திற்கும் இட்டான். இப் பெருவெற்றிதான் அவனுடைய அரசு விரிவடைவதற்கான கால்கோள் விழாவாக அமைந்தது. எனவே புகழோடுவிரிந்த பேரரசின் மாமன்னனாக அவன் எடுத்த இப் பெருங்கோபுரத்தை முதல் வெற்றியின் நினைவாக இராஜராஜேச்சரமுடைய பரமசாமிக்குத் தன் முதற்காணிக்கையாகச் சமர்ப்பித்துள்ளான்.

# ஏழைகளுக்கு இலவசமாக பன்றிக் காய்ச்சல் தடுப்பு ஊசி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

**கலைஞர்** அவர்கள் அறிவிப்பு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் கூறியிருப்பதாவது :–

பன்றிக்காய்ச்சல் நோய்க்கு சிகிச்சை அளிக்கும் மருத்துவர்கள் மற்றும் சுகாதாரப் பணியாளர்களுக்கு பன்றிக்காய்ச்சல் வராமல் இருக்க மத்திய அரசு தடுப்பு மருந்தை தமிழகத்திற்கு அனுப்பி உள்ளது. மருத்துவர்களுக்கும், மருத்துவமனைப் பணியாளர்களுக்கும் இந்த தடுப்பூசி மருந்து போடப்பட்டு வருகிறது. பன்றிக்காய்ச்சல் வராமல் இருக்க பொதுமக்களை பாதுகாக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில் மத்திய அரசு அனுமதி அளித்துள்ள மருந்து தயாரிக்கும் கம்பெனிகளிடம் அரசு அதிகாரிகள் பேசி பொதுமக்களுக்கு குறைந்த விலையில் இந்தத் தடுப்பூசி போடும் திட்டம் சென்னை கிண்டி கிங் நிலையத்தில் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இந்தத் திட்டம் தொடங்கப்படாத நிலையில் தமிழகத்தில் மட்டும்தான் பன்றிக்காய்ச்சலுக்கு குறைந்த விலையில் தடுப்பூசி போடும் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. பொதுமக்களுக்கு குறைந்த விலையில் இந்தத் தடுப்பூசி போடப்பட்டு வரும் நிலையில், மாவட்டத் தலைநகரங்களிலே உள்ள அரசு பொது மருத்துவமனைகளில் இந்தத் தடுப்பு ஊசி போடவும், வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ளவர்களிடம் இந்தக் குறைந்த தொகையையும் கூட இனி வசூலிக்கத் தேவையில்லை என்றும் இந்த அரசு முடிவெடுத்து, உடனடியாக நடைமுறைப்படுத்திட ஆணையிட்டுள்ளது.

தமிழகத்தில் சுகாதாரத் துறையும், அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன. மத்திய அரசும் மற்ற மாநிலங்களும் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் சுகாதாரத் திட்டங்களை பாராட்டி இந்தியாவிலுள்ள பிற மாநிலங்களில் செயல்படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

## பன்றிக் காய்ச்சலைத் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை!

### தமிழக அரசு அறிவிப்பு!

தமிழ்நாட்டில் பருவ மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக காய்ச்சல் மற்றும் வயிற்றுப் போக்கு போன்ற தொற்று நோய்கள் பரவுவதற்கு வாய்ப்புகள் உள்ளன. பன்றிக் காய்ச்சல், டெங்கு காய்ச்சல் போன்ற நோய்களும் சில இடங்களில் பரவி வருகின்றன.

காய்ச்சல், தலைவலி, தொண்டை வலி, இருமல் போன்ற அறிகுறிகள் பன்றிக்காய்ச்சல் நோயின் அறிகுறிகளாகும். மேற்கண்ட அறிகுறிகள் தென்பட்டால், பொதுமக்கள் அருகில் உள்ள அரசு மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் உடனடியாக சேர்ந்து சிகிச்சை பெற அறிவுறுத்தப்படுகின்றனர்.

தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட இடங்களில் பன்றிக்காய்ச்சல் பரிசோதனை செய்து கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

**அரசு ஆய்வு நிலையங்கள்**

- கிங் ஆய்வு நிலையம், கிண்டி, சென்னை.
- கிருத்துவ மருத்துவக் கல்லூரி, வேலூர்.
- சென்னை மருத்துவக் கல்லூரி, சென்னை.
- கோவை மருத்துவக் கல்லூரி, கோவை
- திருச்சி மருத்துவக் கல்லூரி, திருச்சி.



- திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி, திருநெல்வேலி.
- மதுரை மருத்துவக் கல்லூரி, மதுரை.

**தனியார் ஆய்வு மையங்கள்**

- இராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி, போரூர்.
- லிஸ்டர் மெட்ரோ பாலிஸ், சென்னை.
- பாரத் ஸ்கேன்ஸ், சென்னை.
- ஐடெக் டயக்னோஸ்டிக் சென்டர், சென்னை.
- டாக்டர் ரத் லேப், திருச்சி.
- மைக்ரோ பயாலஜிக்கல் லேப், கோவை.
- இம்முனோ ஆக்ஸிலரி லேப், கோவை.
- விவேக் லேப், நாகர்கோவில்.

மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் மருத்துவ ஊழியர்களுக்கு இந்நோய் தாக்கம் கண்ட நோயாளிகளிடமிருந்து பரவுவதற்கு வாய்ப்புகள் உள்ளது. இதனை தடுக்கும் பொருட்டு அனைத்து மருத்துவமனை ஊழியர்களுக்கும் இத்தடுப்பு மருந்து வழுங்கப்பட்டுள்ளது. வாக்சிப்ளூ மற்றும் நாசோவாக் என்ற தடுப்பு மருந்துகளும் பொது சந்தையில் விற்பனைக்காக உள்ளன.

பொதுமக்களின் நலன் கருதி தமிழக அரசு, கிண்டியில் அமைத்துள்ள கிங் ஆய்வு மையத்தில் தடுப்பு மருந்து தயாரிக்கும் நிறுவனங்கள் மூலம் குறைந்த விலையில் தடுப்பூசி வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள் இதன்மூலம் பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இந்நோய் பரவாமல் தடுக்க பொதுமக்கள் சுத்தமான நீரால் சோப்பு மூலம் அடிக்கடி கைகளைக் கழுவுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் தும்மும்போதும், இருமும்போதும் கை மற்றும் துணிகளை வைத்து மூடும் சுகாதார பழக்கத்தைக் கடைபிடிக்க அறிவுறுத்தப் படுகிறார்கள்.

❖ ❖ ❖

**தெரியுமா ?**

**தமிழகத்தில் சுகாதாரத் துறையை மேம்படுத்தும் வகையில் புதிதாக 800 மருத்துவர்கள் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.**



## தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு கூலி உயர்வு, விடுமுறை நாட்களுக்கு ஊதியம்!

**மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணை**

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் கிடங்குகள், நவீன அரிசி ஆலைகள், சேமிப்பு நிலையங்கள், இரயில் சரக்கு முனையம் மற்றும் நேரடி கொள்முதல் நிலையங்களில் பணிபுரியும் பருவகால சுமைதூக்கும் தொழிலாளர்கள், கையாளுதல் கூலியை உயர்த்தி வழங்க நீண்ட நாட்களாக கோரி வந்தனர்.

கிடங்குகள், நவீன அரிசி ஆலைகள், சேமிப்பு மையங்கள், நேரடி கொள்முதல் நிலையங்கள், இரயில் சரக்கு முனையம் போன்றவற்றில் பணிபுரியும் சுமைதூக்கும் தொழிலாளர்களுக்கு 6.8.2008 முதல் 10 சதவீதம் கையாளுதல் கூலியை உயர்த்தி இந்த அரசு வழங்கி வந்தது. இதன்படி டன் ஒன்றுக்கு ரூ.14.96 கையாளுதல் கூலியாக பெற்று வந்தனர். இவர்களுக்கு 3 ஆண்டுகளுக்கு பிறகே கூலி உயர்வு மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் எப்ளாய்ஸ் யூனியன் (325 LPF – தொழிலாளர் முன்னேற்றச் சங்கம்) சுமைதூக்கும் தொழிலாளர்களுக்கு கூலி உயர்வு வழங்கப்பட்டு 2 ஆண்டுகளே நிறைவுப் பெற்றிருந்தாலும், அவர்களுடைய கடின உழைப்பினை கருத்தில் கொண்டு மேலும் கூலி உயர்வும், சில சலுகைகளும் வழங்க கோரியிருந்தனர்.

இக்கோரிக்கையை மிகுந்த பரிவுடன் பரிசீலித்து கிடங்குகள், நவீன அரிசி ஆலைகள், சேமிப்பு மையங்கள், நேரடி கொள்முதல் நிலையங்கள், இரயில் சரக்கு முனையம் போன்றவற்றில் பணிபுரியும் சுமைதூக்கும் தொழிலாளர்களுக்கு 20 சதவீதம் கூலி உயர்வு வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்கள். இந்த ஆணையின்படி சுமைதூக்கும் தொழிலாளர் களுக்கு டன் ஒன்றுக்கு கையாளுதல் கூலியாக ரூ.17.95 வழங்கப்படும். இதனால் 20,500 சுமைதூக்கும் தொழிலாளர்கள் பயனடைவார்கள். பருவகால சுமைதூக்கும் தொழிலாளர்களுக்கும் 20 சதவீதம் கூலி உயர்வு வழங்கப்பட்டு குவிண்டால் ஒன்றுக்கு கூலி ரூ.2.40லிருந்து ரூ.2.90 வழங்கவும் ஆணை பிறப்பிக்கப் பட்டுள்ளது. இதன்மூலம் 13 ஆயிரத்து 250 தொழிலாளர்கள் 12.7.2010 முதல் இந்த கூலி உயர்வு மூலம் பயன் அடைவர்.

கூலி உயர்வு மட்டுமல்லாமல் பச்சை அடையாள அட்டை பெற்றுள்ள 3,750 சுமைதூக்கும் தொழிலாளர்களுக்கு ஏற்கெனவே ஆண்டு ஒன்றுக்கு 3 தேசிய விடுமுறை நாட்களுக்கும், 3 பண்டிகை விடுமுறை நாட்களுக்கும் ஊதியத்துடன் விடுமுறை வழங்கப்பட்டு வந்ததுடன் மேலும் 4 விடுமுறை நாட்களுக்கும் ஊதியம் வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதன்படி ஆண்டு ஒன்றுக்கு 10 விடுமுறை நாட்களுக்கு ஊதியம் வழங்கப்படும். இதன்மூலம் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.8.32 கோடி கூடுதலாக செலவாகும்.

❖ ❖ ❖

### குடவோலை

சோழர் ஆட்சிக் காலத்தில் குடவோலை முறை எனும் வரலாற்றுச் சிறப்புமிக்க தேர்தல் முறை உள்ளாட்சி நிர்வாகத்தில் பின்பற்றப்பட்டது. ஒவ்வொரு ஊரும் அதன் பெருமை சிறுமைகட்கு ஏற்பப் பல குடும்புகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. தொண்டை நாட்டு உத்தரமேரூர் முப்பது குடும்புகளையும், சோழ நாட்டுச் செந்தலை அறுபது குடும்புகளையும் கொண்டிருந்தது. தகுதியும் விருப்பமும் உடையவர் பெயர்களை ஓலை நறுக்கில் எழுதிக் குடத்தில் இடுவர். அதனைக் கட்டி முத்திரையிடுவர். எல்லாக் குடும்புகளில் இருந்தும் வந்த குடங்களை ஊர்ப் பொது மன்றத்திற்குக் கொண்டு வருவர். ஊரில் உள்ள எல்லோரும் கூடியுள்ள சபையில் குடத்தை எல்லோருக்கும் எடுத்துக் காட்டி முத்திரை அழித்துக் கட்டவிழ்த்து சிறு குழந்தையை விட்டு ஓலையை எடுக்கச் செய்வர். அதைப் பெரியவர் ஒருவர் ஐந்து விரலும் விரிய வாங்கிப் படிப்பார். சபையில் உள்ள எல்லோரும் படிப்பர். பின் உறுப்பினராக ஓலையில் உள்ளவர் பெயர் எழுதப்பெறும். இந்தப் பழங்காலத் தேர்தல் முறைக்குக் 'குடவோலை' முறை என்று பெயர் வழங்கியது.

# ஒரு இலட்சத்து 60 ஆயிரம் பால் உற்பத்தியாளர்களுக்கு 17 கோடியே 47 இலட்சம் ரூபாய் ஊக்கத்தொகை!

12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற
பால் உற்பத்தியாளர் குடும்பங்களைச் சேர்ந்த
32 மாணவர்களுக்கு மடிக்கணினிகளை
மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் வழங்கினார் !

**2006** இல் இந்த அரசு அமைந்தபொழுது தமிழகத்தில் செயல்பட்டுவந்த 17 மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்களில் 6 ஒன்றியங்கள் மட்டுமே இலாபத்தில் செயல்பட்டு வந்தன. இந்த அரசு மேற்கொண்ட ஆக்கபூர்வ நடவடிக்கைகள் காரணமாக தற்போது 13 ஒன்றியங்கள் இலாபம் ஈட்டி வருகின்றன.

பிரதம சங்கங்கள் இலாபத்தில் செயல்படும்போது அதன் உற்பத்தியாளர்களுக்கு பங்கு ஈவுத்தொகை, ஊக்கத் தொகை, போனஸ் முதலியன வழங்கப்பட்டு வருகிறது. இதுதவிர, பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் ஈட்டும் நிகர வருமானத்தில் ஒரு பகுதியை நேரடியாக உற்பத்தியாளர்களுக்கு கூடுதல் ஊக்கத்தொகையாக தற்போதைய அரசு பொறுப்பேற்ற பிறகு 2007–2008ஆம் ஆண்டு முதல் வழங்கி வருகிறது. இதனடிப்படையில், திருச்சி மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியம் 2008–2009 மற்றும் 2009–2010 ஆண்டுகளில் பால் வழங்கிய ஒரு இலட்சத்து 108 பால் உற்பத்தியாளர்களுக்கு 10 கோடியே 24 இலட்சத்து 3 ஆயிரத்து 268 ரூபாய்;

2009–2010 ஆண்டுக்கு கோவை மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்தைச் சேர்ந்த 20 ஆயிரத்து 479 பால் உற்பத்தியாளர்களுக்கு 4 கோடியே 14 இலட்சத்து 63 ஆயிரத்து 815 ரூபாய்;

மதுரை மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்தைச் சேர்ந்த 32 ஆயிரத்து 867 பால் உற்பத்தியாளர்களுக்கு 2 கோடியே 98 இலட்சத்து 37 ஆயிரம் ரூபாய்;

கன்னியாகுமரி மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்தைச் சேர்ந்த 6 ஆயிரத்து 642 பால் உற்பத்தியாளர்களுக்கு 10 இலட்சத்து 40 ஆயிரத்து 75 ரூபாய் என மொத்தம் ஒரு இலட்சத்து 60 ஆயிரத்து 94 பால் உற்பத்தியாளர்களுக்கு 17 கோடியே 47 இலட்சத்து 44 ஆயிரத்து 158 ரூபாய் ஊக்கத் தொகை வழங்கிட அனுமதிக்கப்பட்டு, அவர்களில் பல்வேறு ஒன்றியங்களிலிருந்தும் தேர்வு செய்யப்பட்ட 9 பால் உற்பத்தியாளர்களுக்கு ஊக்கத் தொகைக்குரிய காசோலைகளை சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் 17.9.2010 அன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வழங்கினார்.

மேலும், தமிழக அரசு சார்பில் சட்டப்பேரவையில் வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கு ஏற்ப, 12ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில் ஒன்றிய அளவில் அதிக மதிப்பெண்கள் பெற்ற பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களுக்குப் பால் வழங்கும் உறுப்பினர்களின் குடும்பங்களைச் சேர்ந்த 17 மாணவர்களுக்கும்; இணையம் மற்றும் ஒன்றியப் பணியாளர்களின் குடும்பங்களைச் சேர்ந்த 10 மாணவர்களுக்கும்; பிரதம பால் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களின் குடும்பங்களைச் சேர்ந்த 5 மாணவர்களுக்கும் ஆக மொத்தம் 32 மாணவர்களுக்கு மடிக்கணினிகளையும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வழங்கினார்.



இந்நிகழ்வின்போது, மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் திரு.உ.மதிவாணன், கால்நடை பாராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறைச் செயலாளர் திருமதி.எம்.பி. நிர்மலா, இ.ஆ.ப., பால்வளத் துறை ஆணையர் மற்றும் நிருவாக இயக்குநர் திரு.அபூர்வ வர்மா, இ.ஆ.ப., மற்றும் உயர் அதிகாரிகள் உடனிருந்தனர்.

★ ★ ★



# மறைந்த பெருமழைப் புலவர் பொ.வே.சோமசுந்தரனார் குடும்பத்திற்கு ரூ.10 இலட்சம் உதவி நிதி

**மாண்புமிகு முதலமைச்சர்அவர்கள் உத்தரவு**

பெருமழைப் புலவர் பொ.வே.சோமசுந்தரனார் அவர்கள் திருவாரூர் மாவட்டம் மேலப்பெருமழை கிராமத்தில் 1909 ஆம் ஆண்டில் பிறந்தவர். அவர் பண்டிதமணி கதிரேசன் செட்டியார், விபுலானந்த அடிகள், சோமசுந்தர பாரதியார் போன்ற தமிழ் அறிஞர்களிடம் பயின்று, ஆழ்ந்த தமிழ்ப் புலமை பெற்று, திருவாசகம், நற்றிணை, அகநானூறு, குறுந்தொகை, கலித்தொகை, சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி போன்ற 21 நூல்களுக்கு உரை எழுதியதுடன், செங்கோல், மானனீகை முதலிய நாடக நூல்களையும் இயற்றிய தமிழறிஞர். அவரது நூல்கள் பல்கலைக்கழங்களில் பாடமாகக் கற்பிக்கப்படும் சிறப்பினையும் பெற்றுள்ளன. இத்தகைய சிறப்புகள் பலவற்றைக் கொண்டு, தமிழ்த் தொண்டாற்றிய திருமகன் பெருமழைப் புலவர் பொ.வே.சோமசுந்தரனார் அவர்கள் 1972இல் இயற்கை எய்தினார்.

அவரது மறைவுக்குப் பிறகு, அவரது குடும்பம் சிரமங்களுக்கு ஆளாகி, தற்போது அவருடைய வாரிசுகள் வறுமையில் வாடுவதாகப் பத்திரிகைகள் வாயிலாக மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் கவனத்திற்குச் செய்திகள் வந்துள்ளன.

இச்செய்திகள் குறித்து, மிகுந்த பரிவோடு பரிசீலனை செய்து, "இவரது நூல்களை அரசுடைமையாக்குவதில் பிரச்சினைகள் இருப்பதால்; தற்போதுள்ள சூழலில் இவரது குடும்ப நிலை கருதி; அதற்காக உதவி புரியும் நோக்குடன் இவர் குடும்பத்திற்கு உதவி நிதியாக பத்து இலட்சம் ரூபாய் அரசின் சார்பில் வழங்கலாம்" என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 17.9.2010 அன்று ஆணையிட்டுள்ளார்.

**தெரியுமா ?**

**காதில் ஏற்படும் கோளாறினால், மூளைக் காய்ச்சல் ஏற்படும் அபாயம் இருந்த 350 பேருக்கு உயிர்காக்கும் உயர்சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் சிகிச்சை அளிக்கப்பட்டு குணம் அடைந்துள்ளார்கள்.**



# மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் பணியாற்றி ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கு கருணை ஓய்வூதியம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆணை

**மா**வட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் பணியாளர்களுக்கு 1995ஆம் ஆண்டின் பணியாளர்கள் ஓய்வூதியத் திட்டத்தின்படி ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்பாக, அதாவது 1995க்கு முன்பாக பணியாற்றி ஓய்வு பெற்ற மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் பணியாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படவில்லை. இது தொடர்பாக தமிழ்நாடு அனைத்து மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் ஓய்வுபெற்ற பணியாளர்கள் சங்கம் அளித்துள்ள கோரிக்கையினை ஏற்று;

பணியாளர்கள் ஓய்வூதியத் திட்டம் 1995இன்கீழ் வராத 1987–1988 முதல் 1994–1995 வரையிலான காலத்தில் ஓய்வு பெற்ற மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் பணியாளர்களுக்கு மாதமொன்றுக்கு 2,500 ரூபாய் வீதம் கருணை ஓய்வூதியம் அந்தந்த மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளால் வழங்கப்படும் என்றும்;

பணியாளர்கள் ஓய்வூதியத் திட்டம் 1995இன்கீழ் பயன்பெற்றுவரும் ஓய்வுபெற்ற மாவட்ட மத்தியக் கூட்டுறவுப் பணியாளர்களும் குறைந்தபட்சம் மாதம் 2,500 ரூபாய் ஓய்வூதியம் பெறத்தக்க வகையில் அவர்கள் ஏற்கெனவே பெற்று வரும் ஓய்வூதியத் தொகையுடன் தேவைப்படும் கூடுதல் தொகையை அந்தந்த மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளே ஏற்று ஓய்வூதியம் வழங்கப்படும் என்றும்;

பணியாளர்கள் ஓய்வூதியத் திட்டம் 1995இன்கீழ் பயன்பெற்ற, மறைந்த, மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிப் பணியாளர்களின் வாரிசுதாரர்கள், குடும்ப ஓய்வூதியத் தொகையாக குறைந்தபட்சம் 1,250 ரூபாய் பெறத்தக்க வகையில் அவர்கள், "பணியாளர்கள் ஓய்வூதியத் திட்டம் 1995"இன்கீழ் ஏற்கெனவே பெற்று வரும் குடும்ப ஓய்வூதியத் தொகையுடன், கூடுதலாகத் தேவைப்படும் தொகையை அந்தந்த மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளே ஏற்று குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

இந்த ஆணைகளின் காரணமாக தமிழகத்திலுள்ள 23 மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு ஆண்டொன்றுக்கு 6 கோடியே 86 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவாகும். ★

**தெரியுமா ?**

**ரூ.13,000 கோடி முதலீட்டில் மூன்று புதிய தொழில் நிறுவனங்கள் தொடங்கிட புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்து. இதன்மூலம் 8,600 பேருக்கு நேரடி வேலைவாய்ப்பு கிடைக்கும்.**

# தமிழகம் - தெற்கு ஆஸ்திரேலியா பயன்பெறும் வகையில் புரிந்துணர்வு ஒப்பந்தம்

2006இல் இந்த அரசு பொறுப்பேற்றபின், தெற்கு ஆஸ்திரேலியாவுடன் உள்ள தொடர்பினை வலுப்படுத்தும் விதமாகத் தெற்கு ஆஸ்திரேலியா மாநிலத்திற்கும், தமிழக அரசுக்கும் இடையே 30.10.2006 அன்று மூன்று ஆண்டுகளுக்குச் செயல்படத்தக்க புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது.

அந்த ஒப்பந்தம் 29.10.2009 அன்று முடிவடைந்த நிலையில், தமிழகமும், தெற்கு ஆஸ்திரேலிய மாநிலமும் சுற்றுலா, கல்வி, திரைப்படத்துறை, விளையாட்டு, விவசாயம், மோட்டார் வாகனத் தொழில், கலாச்சாரப் பரிவர்த்தனை முதலிய துறைகளில் மேம்பாடு அடையும் வகையிலும், தொழில் வர்த்தகத் தொடர்புகள் மேலும் வலுப்படும் வகையிலும் தமிழக அரசுக்கும் தெற்கு ஆஸ்திரேலிய மாநில அரசுக்கும் இடையே 6.9.2010 அன்று புனித ஜார்ஜ் கோட்டையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் முன்னிலையிலும், தெற்கு ஆஸ்திரேலியாவின் மாநில முதலமைச்சர் திரு. மைக்ரான் அவர்கள் முன்னிலையிலும் நடைபெற்ற இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் தமிழக அரசின் சார்பில் தலைமைச் செயலாளர் திருமதி.எஸ். மாலதி, இ.ஆ.ப., அவர்களும், தெற்கு ஆஸ்திரேலியாவின் வர்த்தக மற்றும் பொருளாதாரத் துறையின் தலைமை நிருவாகி திரு. லான்ஸ் வாரல் அவர்களும் கையொப்பமிட்டனர்.



இந்நிகழ்வின்போது மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின், மாண்புமிகு உயர்கல்வி மற்றும் கனிம வளத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி, தமிழக அரசின் நிதித்துறை முதன்மைச் செயலாளர் திரு. க.சண்முகம், இ.ஆ.ப., திட்டம் மற்றும் வளர்ச்சித் துறைச் செயலாளர் திருமதி.அனிதா பிரவீன், இ.ஆ.ப., பொதுத்துறைச் செயலாளர் திரு. ஜோதி ஜெகராஜன், இ.ஆ.ப., இந்தியாவிற்கான ஆஸ்திரேலிய தூதர் திரு. பீட்டர் வர்கீஸ், தெற்கு ஆஸ்திரேலியாவின் முதன்மை வர்த்தக ஆணையர் திரு. ஏ.கே. தாரீன், தெற்கு ஆஸ்திரேலிய முதலமைச்சரின் ஆலோசகர் திருமதி.எத்னே லாங்கே ஆகியோர் உடனிருந்தனர். ★

# தமிழ்நாடு தென்னை விவசாயிகள் நலவாரியம் அமைப்பு

**மா**ண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களை 25.8.2010 அன்று தென்னிந்திய தென்னை சாகுபடியாளர்கள் சங்கத் தலைவர், சங்க நிருவாகிகளுடன் சேர்ந்து சந்தித்து, தென்னை வளர்ப்பில் தமிழகம் இந்தியாவில் முதல் நிலையில் உள்ளதால் அனைத்து மாவட்டங்களிலும் அதிக அளவில் பயிர் செய்யப்பட்டிருக்கும் ஆயுள் காலப் பயிரான தென்னையைப் பயிரிடும் விவசாயிகளின் நலனுக்காக, "தென்னை விவசாயிகள் நலவாரியம்" அமைத்திட வேண்டும் என்பது உட்பட சில கோரிக்கைகளை அளித்தார். அந்த கோரிக்கைகள் மீது விரைவில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென அப்பொழுது அவர்களிடம் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து தென்னிந்திய தென்னை சாகுபடியாளர்கள் சங்கத்தின் கோரிக்கை படி, "தென்னை விவசாயிகள் நலவாரியம்" அமைத்து மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆணையிட்டிருந்தார்.

**தென்னை நலவாரிய உறுப்பினர்கள் விவரம்**

1. என். ராஜ்குமார் மன்றாடியார்– தலைவர் (சட்டப் பேரவை முன்னாள் உறுப்பினர்)
2. டி.ஏ. கிருஷ்ணசாமி கவுண்டர் – துணைத் தலைவர் தாத்தூர், ஆனைமலை – பொள்ளாச்சி

**உறுப்பினர்கள்**

3. டி.கே.சுப்பிரமணியம், சட்டப்பேரவை முன்னாள் உறுப்பினர்
4. இரா. கலைச்செல்வன், காசங்காடு, பட்டுக்கோட்டை
5. வி.கே. சின்னச்சாமி, சட்டப்பேரவை முன்னாள் உறுப்பினர்
6. மு.ஏ. கந்தசாமி கவுண்டர், சுல்தான்பேட்டை, சூலூர்
7. ராசு (என்கிற) கந்தசாமி, தாராபுரம், திருப்பூர்
8. அ.தமிழ்த் தென்றல், ஜலகண்டாபுரம், நங்க வல்லி, சேலம்
9. மகுடபதி, ஊஞ்சலூர், ஈரோடு மாவட்டம்
10. எம். குமரேசன், பட்டிவீரன்பட்டி, திண்டுக்கல் மாவட்டம்
11. ஆர். நாகராஜன், பட்டுக்கோட்டை வட்டம், தஞ்சை மாவட்டம்
12. எஸ்.சன்னாசி, சின்னமனூர், தேனி மாவட்டம்
13. ஆர்.வெங்கடாசலம், ஆத்தூர், சேலம் மாவட்டம்
14. பி.என். வேலுசாமி, ஒடக்கல்பாளையம், சூலூர்
15. சா. இராஜசேகரன், பெத்தாம்பாளையம், திருப்பூர்
16. ஏ.சி. விசுவநாதன், ஆம்பூர், வேலூர் மாவட்டம்
17. பேராசிரியர் ஹென்றி லூயிஸ், நாகர்கோவில், கன்னியாகுமரி

**அலுவல் சார்ந்த உறுப்பினர்கள்**

18. வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் முதன்மைச் செயலர், வேளாண்மைத் துறை.
19. முதன்மைச் செயலாளர், நிதித் துறை.
20. முதன்மைச் செயலாளர், உணவு, கூட்டுறவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை.
21. ஆணையர், வேளாண்மைத் துறை.
22. ஆணையர், வேளாண் வணிகம் மற்றும் விற்பனைத் துறை.
23. துணைவேந்தர், தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகம், கோவை.
24. பேராசிரியர் மற்றும் தலைவர், தென்னை ஆராய்ச்சி நிலையம், வேளாண் பல்கலைக்கழகம், கோவை.
25. மண்டல இயக்குநர், தென்னை வளர்ச்சி வாரியம், கோவை.
26. தனி அலுவலர், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், சென்னை.
27. இயக்குநர், தோட்டக் கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை – உறுப்பினர் – செயலர்.

★

**தஞ்சைப் பெரிய கோயில் என்றால் நம் நினைவிற்கு வரவேண்டியவர்கள்**

1. மாமன்னன் இராசராசசோழன்
2. வீரசோழன் குஞ்சரமல்லனான ராசராசப் பெருந்தச்சன் எனும் தலைமைக் கட்டடக் கலைஞன்
3. மதுராந்தகனான நித்தவினோதப் பெருந்தச்சன் (இரண்டாம்நிலை கட்டடக் கலைஞன்)
4. இலத்தி சடையனான கண்டராதித்தப் பெருந்தச்சன் (இரண்டாம் நிலை)
5. மாமன்னனின் தமக்கை குந்தவை பிராட்டியார்
6. சேனாபதி கிருஷ்ணன் இராமன் எனும் மும்முடிச் சோழப் பிரமாராயன்
7. ஸ்ரீகாரியம் பொய்கைநாடு கிழவன் ஆதித்தன் சூரியனான தென்னவன் மூவேந்த வேளான் (கோயிலின் நிர்வாக அதிகாரி)
8. ஈசான சிவபண்டிதர் எனும் ராஜகுரு
9. இராஜேந்திர சோழன்
10. இவனது ராஜகுரு சர்வசிவ பண்டிதர்
11. சைவ ஆச்சாரியார் பவனபிடாரன் (தலைமைக் குருக்கள்)
12. கல்லில் எழுத்து வெட்டுவித்த சாத்தன்குடி வெள்ளாளன் இரவிபாளுருடையான் என்பவர்களேயாவர்.

# உலகத் தரத்திற்கேற்ற விளையாட்டு மைதானங்களின் உறைவிடமாக சென்னை மாநகரம்

சென்னையில் டேவிஸ் கோப்பை டென்னிஸ் போட்டியை 16–9–2010 அன்று தொடங்கிவைத்து மாண்புமிகு முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் ஆற்றிய உரை.

சென்னையில் 31 ஆண்டுகளுக்குப் பிறகு டேவிஸ் கோப்பை நடைபெறுவது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியும் பெருமிதமும் ஏற்படுகிறது.

**சென்னையில்** உள்ள நுங்கம்பாக்கம் டென்னிஸ் மைதானத்தில் டேவிஸ் உலக கோப்பை போட்டி இந்தியா–பிரேசில் அணிகளுக்கு இடையே இன்று முதல் (17ஆம் தேதி) 19ஆம் தேதி வரை நடைபெறுகிறது.



சென்னையில் கடந்த 1979ஆம் ஆண்டு மெட்ராஸ் ஜிம்கானா கிளப்பில் இந்தியா மற்றும் ஆஸ்திரேலியா பங்கேற்ற டேவிஸ் உலகப்கோப்பை போட்டி நடைபெற்றது.

வரலாற்றுப் புகழ்பெற்ற சென்னை மாநகரில் இந்த டேவிஸ் கோப்பை டென்னிஸ் போட்டி நடைபெறுவது உலகம் முழுவதும் இருக்கின்ற புதிய தலைமுறை டென்னிஸ் ரசிகர்களுக்கு மகிழ்ச்சியான புதிய அனுபவத்தைத் தரும் என்பதில் சந்தேகமில்லை.

கடந்த காலங்களில் டென்னிஸ் போட்டிகள் தற்காலிகமாக அமைக்கப்பட்ட களிமண் தரைகளிலும் மற்றும் மர காலரிகளால் ஆன மைதானங்களிலும் நடைபெற்றது. ஆனால் தற்போது தமிழகத்தில் உலகத்தரத்திலான மைதானம் இருப்பதால் பெரும்பாலான விளையாட்டுப் போட்டிகள் இங்கு நடைபெற்று வருகின்றன. மேலும் பெரும்பாலான போட்டிகளுக்கு





உலகத்தரத்திற்கேற்ற விளையாட்டு மைதானங்களின் உறைவிடமாக சென்னை திகழ்கிறது.

சோம் தேவ் வர்மன் மற்றும் லியாண்டர் பயஸ், மகேஸ் பூபதி மற்றும் ரோகன் போபன்னா ஆகியோர் இந்தியாவின் சார்பில் டென்னிஸ் போட்டியில் புகழ்பெற்று விளங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

**லியாண்டர் பயசுக்கு என்னுடைய வாழ்த்துக்கள்**

கடந்த இருபது வருடங்களாக டேவிஸ் கோப்பையில் பங்கு பெற்று விளையாடி வரும் லியாண்டர் பயசுக்கு என்னுடைய தனிப்பட்ட வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிரேசில் அணியைச் சேர்ந்த தாமஸ் பெலுசி மற்றும் சிக்கார்டோ மெலோ மற்றும் இரட்டையர் பிரிவைச்சேர்ந்த புருனோசோர்ஸ் – மேலோ ஆகியோருக்கும் மற்ற வீரர்களுக்கும் எனது சார்பிலும் தமிழக டென்னிஸ் ரசிகர்கள் சார்பிலும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



★ ★ ★

**தெரியுமா?**

**அனைத்துக் கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் நடப்பாண்டில் 2,514 ஊராட்சிகளில் 507 கோடியே 82 இலட்சம் ரூபாய் செலவில் அடிப்படைவசதிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.**

கரம் இணைப்போம் | எய்ட்ஸை ஒழிப்போம் | வாழ்வை காப்போம்

## எச்.ஐ.வி. / எய்ட்ஸ் பாதிக்கப்பட்டவர்களை அன்போடு அரவணையுங்கள்



ஒன்று சேர்ந்து விளையாடுவது



கை குலுக்குவது மற்றும்
கட்டி அணைப்பது போன்ற
சாதாரண பழக்க வழக்கத்தினால்
எய்ட்ஸ் பரவாது.



எச்.ஐ.வி. தொற்று உள்ள ஒரு
நபரின் இருமல் மற்றும் தும்மலின்
மூலம் மற்றவருக்குப் பரவாது.



எச்.ஐ.வி. உள்ள நபர்
பயன்படுத்திய கழிவறையைப்
பயன்படுத்துவது அல்லது
பொருட்களை மாற்றிக்
கொள்வதால் பரவாது.



கொசுக்கடி மூலம் எய்ட்ஸ்
பரவாது.

## எச்.ஐ.வி. / எய்ட்ஸ் எவ்வாறு பரவுகிறது?



பாதுகாப்பற்ற முறையில் பலருடன்
உடலுறவு கொண்டால் எச்.ஐ.வி.
தொற்றுள்ள ஒரு நபரிடமிருந்து
மற்றவருக்கு பரவும்.



பரிசோதிக்கப்படாத எச்.ஐ.வி.
கிருமி உள்ள இரத்தம் மூலம்
மற்றவருக்குப் பரவும்.



எச்.ஐ.வி. தொற்றுள்ள கர்ப்பிணிப்
பெண்ணிடமிருந்து கருவில் இருக்கும்
குழந்தைக்குப் பரவ வாய்ப்பு உள்ளது.



கிருமி தொற்றுள்ள சுத்தம்
செய்யப்படாத பிளேடுகளை,
ஊசிகளை பகிர்ந்துகொள்வதால்
பரவும்.



**ஒரு துளி இரத்தம் போதுமே**
**உங்கள் உடல் நலனை அறிய**
திருமணம், குழந்தைப்பேறு, இரத்ததானம்
ஆகியவைகளுக்கு முன் இரத்தத்தில் எச்.ஐ.வி
உள்ளதா என பரிசோதனை செய்யுங்கள்




மேலும் விவரங்கள் / ஆலோசனைகளுக்கு
அருகிலுள்ள அரசு மற்றும் மாநகராட்சி
மருத்துவமனைகளின் ஒருங்கிணைந்த
ஆலோசனை மற்றும் பரிசோதனை
மையங்களை (ICTC) அணுகவும்

## எச்.ஐ.வி. / எய்ட்ஸை எவ்வாறு தடுக்கலாம்?



திருமணத்திற்கு முன் உடலுறவை
தவிர்த்தல்.

திருமணத்திற்கு
பின் தாம்பத்தியத்தில் ஒழுக்கமாயிருத்தல்.



பாதுகாப்பான உடலுறவிற்கு
ஆணுறையைப் பயன்படுத்துதல்.



பரிசோதிக்கப்பட்ட இரத்தத்தையே
பயன்படுத்துதல். இரத்த தானம்
செய்யப்படுவதற்கு முன் பெறப்படும் இரத்தம்
எய்ட்ஸ் (எச்.ஐ.வி.) கிருமியால்
பாதிக்கப்படாதது என பரிசோதித்து உறுதி
செய்தல் வேண்டும்.



எச்.ஐ.வி. பாதிக்கப்பட்ட தாயிடமிருந்து
பிறக்கும் குழந்தையை எச்.ஐ.வி.கிருமி
தாக்காமல் பிரசவத்தின் முன் தரும் மருந்து
மூலம் தடுக்கலாம். பிரசவத்திற்கு முன்னால்
உரிய சிகிச்சை மேற்கொண்டால்
தாயிடமிருந்து எச்.ஐ.வி. குழந்தைக்கு
பரவாமல் தடுக்கலாம்.'



இரத்தம் மற்றும் மனித உடற்கசிவுகள்
தொடர்பாக பயன்படுத்தப்படும்
ஊசிகள்,பிளேடுகள் மற்றும் பிற
உபகரணங்களை ஒரு முறை மட்டும்
பயன்படுத்தி அழித்து விட
வேண்டும். இந்த உபகரணங்களை ,
மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதை
கண்டிப்பாக தவிர்க்க வேண்டும்


**சென்னை மாநகராட்சி எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு சங்கம்**
82, திரு.வி.க. சாலை, மைலாப்பூர், சென்னை - 4.
**இலவச தொலைபேசி : 1913**


CAPACS

வெளியீட்டு ஆணை எண்.959/வரைகலை/விளம்பரம் /2010




தமிழரசு

R.N.I. No.21446/70 Regn.No.TN/ARD/48/09-11
& WPP No. TN/PMG(CCR)518/09-11